# ஞானச்சுடர்

சித்திரை 2021

280ஆவது மலர்




வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை



# குறள் வழி

**பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா**
**பிற்பகற் றாமே வரும்.**

**பொருள் :** ஒருவர் பிறர்க்குத் துன்பந் தருபவைகளை முன்பொழுதில் செய்தால் அவர்க்குத் துன்பம் பிற்பகலில் பிறர் செய்யாமல் தானே வரும். (319)

**நோயெல்லாம் நோய்செய்தார் மேலவாம் நோய்செய்யார்**
**நோயின்மை வேண்டு பவர்.**

**பொருள் :** பிற உயிருக்குத் துன்பம் செய்தால், அதனைச் செய்வோருக்குத் துன்பம் வரும். ஆதலால் துன்பம் இல்லாமையை விரும்புவோர் பிற உயிர்க்குத் துன்பஞ் செய்தல் கூடாது. (320)

---

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

**முத்தி நல்குமே**

**நல்லூராசான்**

**கலிவிருத்தம்**



கற்றவர் விழுங்குங் கருணை யாளன்
மற்றவ ரறியா மாணிக்க மாமலை
சிற்றறி வுடையார் தேறாச் செல்வன்
நற்றவர் வணங்கும் நல்லூ ரானே. 04

விருப்பு வெறுப்பை வேரறப் பறித்தோன்
திருவடி மறவாச் சீருடை யாளன்
ஒருபொல் லாப்பு மில்லையென் றுரைத்தோன்
குருவடி வாகக் கோலங்கொண் டானே. 05

உண்மை முழுதுமென் றோயா துரைப்பவன்
நன்மை தீமையைக் கடந்த நாதன்
என்னையுந் தன்னையு மொன்றாய்க் காண்பவன்
சென்னியில் சேவடி சூட்டினன் அன்பால். 06

ஆரறி வாரென அடிக்கடி ஓதும்
பேரறி வாளன் பேர்செல் லப்பன்
பாரறி யாத பயித்திய காரன்
தேரடிப் படியில் தினமு மிருப்பான். 07

# ஞானச்சுடர்



வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை


ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்

# ஞானச்சுடர்

வெளியீடு - 3  சுடர் - 280

**2021** **பொருளடக்கம்** **சித்திரை**


| | | |
|---|---|---|
| இந்துப் பண்பாடும்... | செல்வி ச. சரணியா | 01 - 02 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 03 - 08 |
| நாவலர் பெருமான்... | கு. சோமசுந்தரம் | 09 - 11 |
| திருவிளையாடற் புராண வசனம் | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் | 12 - 15 |
| உண்மையே இறைவன் | மு. செல்லத்தம்பி | 16 - 17 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 18 - 19 |
| தேனிலுமினிய சங்கீதமதை... | கே.எஸ். சிவஞானராஜா | 20 - 21 |
| அநுமானும் சனீஸ்வரனும் | வி. செல்வரத்தினம் | 22 - 23 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 24 - 25 |
| இயற்கையும் மாயைகளும் | இராம. ஜெயபாலன் | 26 - 29 |
| திருமூலர் தவமொழி | ஆ.தா.இ. ஜெயபாலன் | 30 - 31 |
| சிவசின்னங்கள் | செல்வன் கு. நிஷாந்து | 32 - 35 |
| பாவத்தின் சம்பளம் கொரோனா | சாம். ரமேஸ்குமார் | 36 - 37 |
| மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி... | மூ. சிவலிங்கம் | 38 - 39 |
| வழிகாட்டிகள் | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 40 - 41 |
| உண்மை பேசுதல்... | சி. நற்குணலிங்கம் | 42 - 44 |
| கதிர்காம யாத்திரை | திருமதி ம. நிலா | 45 - 48 |



**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**
**சந்நிதியான் ஆச்சிரம**
**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**
**தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406**
**அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்**

Printed & Published By:
*Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.*
Selvasannithi, Thondaimanaru.

# சந்நிதிக் கந்தவேளே

முந்திநான் அடிக்கடி
முருகா குகா வென்று
முற்றுமுன் தலத்தில் வந்து
முதற்பூசை யோடுநல்
லடியார்கள் பூசையும்
முற்றுமே கண்டு களிப்பேன்

அந்தநா ளிளமையும்
கைதர வாகனமு
அளிக்கவதில் வரவும் வைத்தாய்
அதுவன்றி ஆச்சிரமத்
தடியாரின் கூட்டத்திலும்
அடியேனை யாளாக்கினாய்

இந்தநா ளுன்நினைவும்
என் நினைவு மொன்றாக
இருப்பதுங் கண்டு கொண்டாய்
இத்துணைச் சந்நிதி
முருகனே யெனையாளும்
ஈசனே எனது மனதில்

வந்துநீ இடங்கொண்டு
என்மனதில் இன்றும்வர
வள்ளலே வேண்டுகின்றேன்
வளங்கொண்ட தொண்டைமா
னாற்றயலில் கோயில்கொள்
வாசனே கந்தவேளே!

*-வை.க. சிற்றம்பலம்-*

# சுடர் தரும் தகவல்

தலயாத்திரைகளை மேற்கொண்டு பிற இடங்களுக்குச் செல்வதன்மூலம் ஒருவன் பல்வேறு வகையில் தன்னைப் பக்குவப்படுத்திக்கொள்வதுடன், ஆத்மிக ரீதியிலும் தன்னை மேம்படுத்திக்கொள்ளும் வாய்ப்பினைப் பெறுகிறான்.

எனினும் இவ்விதமான தல யாத்திரைகளை தற்போதைய கால கட்டத்தில் மேற்கொள்ள முயற்சிக்கும்போது நாம் பல்வேறு பிரச்சினைகளையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. செல்வச்சந்நிதியிலிருந்து கதிர்காமம் வரை செல்லும் பாதயாத்திரைக் குழுவினருக்கு கடந்த வருடம் ஏற்பட்ட அனுபவம் மறக்கமுடியாதது.

இந்த நிலையிலும் வழமைபோல் செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து கதிர்காம உற்சவத்தையொட்டி நடைபெறும் பாத யாத்திரைக்கு வேண்டிய ஏற்பாடுகளை அடியார்கள் முனைப்புடன் செய்து வருகின்றனர். அத்துடன் ஆச்சிரம சுவாமிகளுடனும் இவ்விடயம் சம்பந்தமாகக் கலந்து ஆலோசித்த வண்ணம் உள்ளனர்.

காலங் காலமாக இடம்பெற்றுவரும் இப் பாதயாத்திரையானது மிகவும் புனிதமாகவும் - பக்திசிரத்தையோடும் நடைபெறுவது வழக்கம். கடந்த வருடம் ஏற்பட்ட கொரோனா தாக்கத்தின் காரணமாக செல்வச்சந்நிதியிலிருந்து புறப்பட்ட பாத யாத்திரையானது பல்வேறு இடர்பாடுகளுக்கிடையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் - பாணமை ஊடாக உகந்தைவரை மட்டுமே சென்றடைய முடிந்தது.

ஆனாலும் காட்டுப்பாதை ஊடாகச் செல்லும் பாதையானது தடைப்படுத்தப்பட்ட காரணத்தினால், உகந்தைவரை சென்ற அடியார்களில் ஒரு பகுதியினர் - உகந்தையில் நடைபெற்றுக்கொண்டிருந்த உற்சவங்களில் கலந்துகொண்டு தங்கள் நேர்த்தியினை நிறைவு செய்தார்கள்.

ஒரு சிலர் பேருந்து மூலம் கதிர்காமம் போகும் எண்ணத்தையும் நிறைவேற்றிக் கொண்டார்கள். ஆனாலும் யாத்திரையின் பலனை முழுமையாகப் பெறமுடியாமற் போனது அடியார்களுக்குப் பெரும் குறையாகவே இருந்து வந்தது.

விரைவில் ஆரம்பமாகவுள்ள இவ் வருடத்திற்கான நடைப்பயணம் தடங்கல்கள் எதுவுமின்றி திட்டமிட்டபடி நிறைவடைய இன்றைய கால சூழ்நிலை இடந்தர வேண்டும். இத்தகைய பயணங்கள் மூலம் பெறப்படும் பலாபலன்கள் நடைபாதையில் பங்குகொள்ளும் அடியார்களுக்கு மட்டுமன்றி - நாட்டு மக்கள் அனைவருக்கும் கிடைக்கப்பெற்று - கொரோனாத் தொற்றிலிருந்து நாடும் - நாமும் மீண்டெழ எல்லாம் வல்ல வேலவன் திருக்கருணையை வேண்டி கரங்கூப்பித் தொழுவோம்.

# ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா

பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும் - தேமேவு 01

நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமும் காணாத போதமாய் - ஆதிநடு 02

அந்தம் கடந்தநித்தி யானந்த போதமாய்ப்
பந்தம் தணந்த பரஞ்சுடராய் - வந்த 03

குறியும் குணமுமொரு கோலமுமற்று எங்கும்
செறியும் பரம சிவமாய் - அறிவுக்கு 04

அனாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமாய் அன்றே
மானாதிகளுக்கு எட்டா வடிவாய்த் - தனாதருளின் 05

பஞ்சவித ரூப பரசுகமாய் எவ்வுயிர்க்கும்
தஞ்சமென நிற்கும் தனிப்பொருளாய் - எஞ்சாத 06

பூரணமாய் நித்தமாய்ப் போக்குவரவும் புணர்வும்
காரணமும் இல்லாக் கதியாகித் - தாரணியில் 07

இந்திரசாலம் புரிவோன் யாவரையும் தான்மயக்கும்
தந்திரத்தில் சாராது சார்வது போல - முந்தும் 08

கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த் - திரிகரணம் 09

ஆகவரும் இச்சை அறிவுஇயற்ற லால் இலய
போகஅதி காரப் பொருளாகி - ஏகத்து 10

உருவும் அருவும் உருஅருவும் ஆகிப்
பருவ வடிவம் பலவாய் - இருள்மலத்துள் 11

மோகமுறும் பல்லுயிர்க்கு முத்திஅளித் தற்குமல
பாகமுறவே கடைக்கண் பாலித்துத் - தேகமுறத் 12

தந்த அருவுருவம் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து - மந்த்ரமுதல் 13

ஆறத்து வாவும் அண்டத்து ஆர்த்த அத்து வாக்களும்முற்
கூறத் தகும் சிமிழ்ப்பில் கூட்டுவித்து - மாறிவரும் 14

ஈரிரண்டு தோற்றத்து எழுபிறப்புள் யோனி என்பான்
ஆரவந்த நான்குநூ றாயிரத்துள் - தீர்வரிய 15

# சித்திரைமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**திருமதி எழில்மதி ஜெயநாதன்**
(பிரதி முகாமையாளர், மக்கள் வங்கி தெமட்டகொட, கொழும்பு)

**திருமதி S. லோஜினி**
(உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வெள்ளவத்தை)

**அப்பர்சாமி கோபாலகிருஷ்ணன்**
(இளை. முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

**நா. உமாசங்கர்**
(கயூரி வீடியோ விஷன், அச்சுவேலி)

**நா. குகன்**
(குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

**பொ. பாலசிங்கம்**
(பத்தமேனி, அச்சுவேலி)

**இராசையா சற்குணதாஸ்**
(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

**திருமதி ஸ்ரீனிவாசன்**
(பழம்றோட், கந்தர்மடம்)

**Dr R. பாக்கியநாதன்**
(பொன்னையா வைத்தியசாலை, திருநெல்வேலி)

**திருமதி T. ராமச்சந்திரன்**
(யாழ்ப்பாணம்)

**திருமதி சிவராஜா**
(நல்நடத்தை உத்தியோகத்தர், கொழும்பு)

**செல்வி சாவித்திரி செல்வரெத்தினம்**
(யாழ்ப்பாணம்)

**வீ. கிருஷ்ணராஜா**
(ஆசிரியர், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

**சி. கனகசபாபதி**
(சிவன் கோயிலடி, ஆவரங்கால்)

**மா. குலநாதன்**
(நாதன் கராஜ், அச்சுவேலி)

**ச. மனோகரி**
(சுண்ணாகம்)

**ஐயாத்துரை முருகதாசன்**
(யாழ். போதனா வைத்தியசாலை பரிசாரகர்)
**செ. மகேஸ்வரன்**
(கோப்பாய் வடக்கு)
**செ. சிவராசா**
(வாசிகசாலையடி, உடுப்பிட்டி)
**S. தர்மபாலகிருஷ்ணன்**
(தும்பளை பருத்தித்துறை)
**த. நடேசன்**
(உரும்பராய் தெற்கு, உரும்பராய்)
**க. கிரிதரன்**
(திரு இல்லம், கரவெட்டி)
**வீரையா சிவஞானம்**
(நவக்கிரிமேற்கு, புத்தூர்)
**க.கு. கிருபாகரராசா**
(பிரதானவீதி, ஆவரங்கால்)
**இ. மனோகரன்**
(மனோ லைற், கோப்பாய்)
**சி. நந்தகுமார்**
(வங்கி ஊழியர், உரும்பராய்)
**ச. கனகராசா**
(யாழ்ப்பாணம்)
**சின்னத்தம்பி கிருஷ்ணானந்தன்**
(உமாபதி தொலைத்தொடர்பகம், உரும்பராய்)
**வ.க. சாம்பசிவம்**
(வில்லூன்றி, யாழ்ப்பாணம்)
**சி. அமிர்தசாகரன்**
(அம்பாள் மோட்டோர்ஸ், ஆவரங்கால்)
**தி. பாலசிங்கம்**
(அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி)
**சி. சுகிர்தலிங்கம்**
(புலோலி கிழக்கு, பருத்தித்துறை)
**T. இரவீந்திரதாஸ்**
(சாமியன் அரசடி, கரவெட்டி)
**சி. குமாரவேல்**
(தலைவர், சுண்ணாகம் ப.நோ.கூ. சங்கம்)
**உரிமையாளர்**
(ஏகாம்பரம் ரெக்ஸ், யாழ்ப்பாணம்)

க. ஞானச்சந்திரன்
(நாகலிங்கம்வீதி, கொக்குவில்)
ஐ. நற்குணநாதன்
(உடுவில், சுண்ணாகம்)
இ. ஸ்ரீஸ்கந்தராம்
(உப தபாலதிபர், உரும்பராய்)
வே. சந்திரசேகரம்பிள்ளை
(சிறுப்பிட்டி, நீர்வேலி)
K. இராமச்சந்திரன்
(சங்கானை)
த. இராஜசிங்கம்
(நீர்வேலி)
ம. புலேந்திரன்
(கரணவாய், கரவெட்டி)
கி. தவராசா
(காந்தியூர், புலோலி)
ஐ. சத்தியபாலன்
(பலாலி வீதி, உரும்பராய்)
க. இராஜேஸ்வரி
(சுண்ணாகம்)
செ. ஸ்ரீனிவாசன்
(அல்வாய்)
செல்வி சந்திரலிங்கம் மாதுமை
(இன்பர்சிட்டி, பருத்தித்துறை)
சுப்பிரமணியம் சுரேஸ்குமார்
(மயிலணி வீதி, சுண்ணாகம்)
க. கணேசதேவா
(மாதகல்)
அதிபர்
(தமிழ்க் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை)
வி. செல்வரெத்தினம் J.P
(அராலிமத்தி, வட்டுக்கோட்டை)
ஐ. குகேந்திரராணி
(ஐயனார் கோயிலடி, சுண்ணாகம்)
N. பாலசுப்பிரமணியம்
(நீர்வேலி வடக்கு)

ம. கந்தையா
(சிவன்கோவிலடி, சாவகச்சேரி)
க. மகேந்திரன்
(சங்கத்தானை, சாவகச்சேரி)
தங்கராசா கலாஜோதி
(புன்னாலைக்கட்டுவன் தெற்கு)
செல்வி பாலாம்பிகை கந்தசாமி
(கட்டைவேலி, கரவெட்டி)
S. தங்கேஸ்வரா
(காட்டுப்புலம்)
ம. சிவானந்தம்
(நாவலர் றோட், யாழ்ப்பாணம்)
எஸ்.ரி. குமரன்
(மல்லாகம்)
பொ. காசிலிங்கம்
(கொக்குவில்)
கா. செல்லத்துரை
(உடுவில், சுண்ணாகம்)
வீ. புஸ்பநாதன்
(உரும்பராய் வடக்கு)
சந்திரசேகரம் மகிந்தன்
(சிறுப்பிட்டி மேற்கு)
தர்சினி பகீரதன்
(உப தபாலதிபர், நீர்வேலி)
கு. குணரூபன்
(மீசாலை கிழக்கு)
வ. ஆறுமுகம்
(இளை. அதிபர், ஆவரங்கால்)
கி. வரதராசன்
(அச்சுவேலி தெற்கு)
அ. சந்திரகுமாரன்
(சந்திரகோட்டம், சுழிபுரம்)
வி. நாகம்மா
(பண்ணாகம் தெற்கு, சுழிபுரம்)
சர்மிளா இராசலிங்கம்
(கோப்பாய்)

# இந்துப் பண்பாடும் கலாசாரமும்

– செல்வி ச. சரணியா அவர்கள் –

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

என்ற பொய்யாமொழிப் புலவரின் வரிகளுக்கிணங்க இந்த பூலோகத்தில் ஒழுக்க நெறி நின்று மனிதன் மனிதனாக வாழ்ந்து வானுறையும் தெய்வத்திற்கு சமனாகப் போற்ற எமது இந்துப் பண்பாடு மற்றும் கலாசாரம் வழிவகுக்கின்றது என்பது பேருண்மை. இத்தகைய கலாசாரமும் பண்பாடும் ஆதிமனிதனில் இருந்து இன்றுவரை பல்வேறு மாற்றக் கோடுகளைக் கடந்து நிற்கின்றன.

மேலும் பண்பாடு, கலாசாரம் என்பது தாய் வயிற்றில் ஒரு கரு முட்டையில் கருத்தரித்த இரட்டைக் குழந்தைகள் ஆகும். இரண்டு சொல்லுக்கும் உச்சரிப்பும் எழுத்துக் கோர்வையும் வேறுபட்டாலும் பொருள் ஒன்றெனத்தகும். அதாவது பண்பாட்டின் வெளிப்பாடே கலாசாரம் ஆகும். நாம் ஒரு செயற்பாட்டை ஆழமாக நம்பும்போது அது நம்பிக்கை ஆகின்றது. அந்த நம்பிக்கையோடு செயற்படும்போது அது ஓர் பழக்கவழக்கமாக மாற்றமடைகின்றது. இத்தகைய பழக்கவழக்கங்களை சமுதாய அங்கிகளான மனிதர்கள் கேள்வி கேட்காமல் அதை பின்பற்றத் தொடங்கும்போது அது கலாசாரமாக மாறுகின்றது.

இத்தகைய பண்பாட்டையும் கலாசாரத்தினையும் எமது இந்துக் கட்டிடத்தின் அத்திவாரம் எத்தன்மையாக தாங்கி ஓங்கி நிற்கின்றது என்று சிந்தித்ததுண்டா அன்பர்களே?

சங்கங்களை துணைகொண்டு தமிழ் வளர்த்த காலத்தே எம்மினர் முழுமையான அன்புகொண்டு தூய்மையான பண்பாட்டினை மற்றும் கலாசாரத்தை கட்டியெழுப்பினர். மேலும் இதனைத் தொடர்ந்து அறம், பொருள், இன்பம், வீடு என்ற நாற்பயனைக் கொண்டு இந்துப் பண்பாடு, கலாசாரத்தினை மேம்படுத்தினர் எனலாம். இதனை,

"நல்லது செய்தல் ஆற்றீராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்....."

என்றதற்கிணங்க நல்வினை செய்யவில்லை என்றாலும் தீவினை செய்யாதீர்கள் என்று பல தனி மனித இந்துப் பண்பாட்டை தாங்கிய வரிகள் சங்க இலக்கியங்களில் காண்பது மகிழ்வே. அதாவது எமது இந்து மதத்தை வளர்க்கும் பண்பாடு, கலாசாரத்தை போற்றி வளர்க்காவிட்டாலும் பரவாயில்லை. அதை அரும்பாடுபட்டு கட்டியெழுப்பியவர்களின் உழைப்பை அவதூறு செய்யுமளவுக்கு அவற்றின் அழிவுக்கு காரணமாக இருந்துவிடாதீர்கள் என்பது அடியவளின் வேண்டுகோள்.

இத்தகைய பண்பு கொண்டவர் வாழும் பூமி, நல்வழி இயங்கும் என்றார். இதனை, தெய்வப்புலவர்,

*நன்றாக வரையறுக்கப்பட்ட ஒரு பிரச்சினை பாதி முடிக்கப்பட்டதற்குச் சமம்.*

"பண்புடையார் பட்டுண் டுலகம் அதுஇன்றேல்
மண்புக்கு மாய்வது மன்"

என்ற ஈரடியில் புலப்படுத்தினார். ஆகவே உலகம் நல்வழியில் இயங்க சிறந்த பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டி எழுப்புவது அவசியம் என்பது நாம் உணர்ந்து கொள்ள வேண்டிய செய்தியாகும்.

இத்தகைய இந்துப் பண்பாடு மற்றும் கலாசாரமானது எம் முன்னோர் வாழ்ந்த காலம் தொட்டு இன்றுவரை பல வளர்ச்சிப் படிநிலைகளையும் மாற்றங்களையும் தம் முள்ளே கொண்டுள்ளன. ஆனால் இன்று இப்படிநிலைகளை மேலும் வளர்க்காது அதன் தளிர்களை மிதித்து ஒடுக்கி வருவதும் எம் கண்கூடாகக் காண்கிறோம். அந்த வகையில் எம்மிடையே மறைந்துகொண்டு இருக்கும் முக்கிய இந்துப்பண்பாடுகளில் மனித குணங்களில் இருக்கவேண்டிய நன்றிமறவாப் பண்பு, பொதுநலப் பண்பு, விருந் தோம்பல், ஈகை என்பனவற்றை இன்றைய காலகட்டங்களில் மறந்துகொண்டிருக்கின் றோம். அவற்றை மீண்டும் ஒரு கணம் எமது சிந்தையில் விதையிட வேண்டும் என்பதே எனது ஆசை. இன்றைய காலகட்ட சூழ் நிலைகளால் எமது பண்பாட்டு மரபுகளான; மஞ்சள்நீர் தெளித்தல், வாசலில் வேப்பிலை கட்டுதல், கைகூப்பி வணங்கி வரவேற்றல் என்று பல மீட்டெடுத்தாலும் பல பக்கங் களில் எமது கலாசாரம் பண்பாடு ஒடுங்கிக் கொண்டே உள்ளன. அதாவது இன்றைய உலகை பிடித்துக்கொண்டிருக்கும் கொரோனா என்ற கோர நோயின் தாண்டவத்தால் எமது பண்பாட்டில் வெளிப்படும் விருந்தோம்பல், பிறர்க்கு உதவுதல், இன்முகம் செய்தல், வரவேற்றல் என்று பல பழக்கவழக்கங்களில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதன் தொடர்ச்சி நிலை எமது பண்பாட்டின் முடிவுக்கு காரண மாகிவிடுமோ? என்பது என்னைப் போன்று எமது மதம் மற்றும் அது சார்ந்த பண்பாடு களை நேசிப்பவர்களின் வினாவாகவுள்ளது.

ஆகவே காலச்சக்கர கோரதாண்டவப் பிடியில் எம்மின மற்றும் மதம் சார்ந்த நட வடிக்கைகளுக்கு முட்டுக்கட்டை இடும் அத் தனை செயற்பாடுகளையும் தாண்டி எமது இந்துப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் கட்டிப் பாதுகாத்து எமது எதிர்கால சந்ததி யினருக்கும் எம்மத பெருமை துலக்குவது எமது கடமை என்பதை அனைவர் மனதிலும் ஆணித்தரமாக பதிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நல்ல மனம் வேண்டும் சந்நிதி வேலே**

வள்ளிக் குறத்தியை மணம்புரிந்து
வடிவேல் கொண்டு சூரன் உடல்பிழந்து
துள்ளி மயில்ஏறும் சிவசுப்பிரமணியா
தூயநின் திருத்தாள் மறவேனையா
அள்ளிக் கொடுத்து நல் அருள்சுரக்கும்
அகிலாண்டேஸ்வரி இறை குமரா
கள்ளத்தனம் அற்ற நல்மனம் வேண்டும் - எம்
கருத்தினையும் ஏற்றருள்வாய் செல்வச் சந்நிதிவேலவா.

*~சின்னப்பு தனபாலசிங்கம்~*

அறிவியல் முன்னேற்றம் என்பது கற்பனையில் இருந்துதான் பிறக்கிறது.

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## நீத்தல் விண்ணப்பம்

### பிரபஞ்ச வைராக்கியம்

(உத்தரகோச மங்கையில் அருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

129. எறும்பிடை நாங்கூ ழெனப்புல னாலரிப் புண்டலந்த
வெறுந்தமி யேனை விடுதிகண் டாய்வெய்ய கூற்றொடுங்க
உறுங்கடிப் போதவை யேயுணர் வுற்றவ ரும்பரும்பர்
பெறும்பத மேயடி யார்பெய ராத பெருமையனே.

**ப-ரை:**

வெய்ய கூற்று ஒடுங்க உறும்கடி போது அவையே- கொடிய கூற்றுவன் வலிகெட்டொழிய அவன்மீது பொருந்திய நறுமணத்தினையுடைய மலர்போன்ற திருவடிகளையே, உணர்வு உற்றவர் உம்பர் உம்பர் பெறும்பதமே- மெய்ம்மை உணர்ந்து ஆலயப்பணியும் அரண்பணியும் செய்யும் சரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராய் அவ்வுணர்வுடன் நினக்கு அருச்சனை செய்கின்ற கிரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராய் அவ்வுணர்வும் அருச்சனையும் அகத்தேயுடையவராய்ச் சிவோகம் பாவனையுடைய யோகிகளும் முறையே அடைகின்ற சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதவிகளாகவுள்ளவனே, அடியார் பெயராத பெருமையனே- மெய்யடியார்களாகிய ஞானிகள் பெறுகின்ற மீளத் திரும்புதலில்லாத சாயுச்சியமாகிய பெருமையையுடையவனே; எறும்பு இடை நாங்கூழ் என- எறும்புகளின் கூட்டத்தின் இடைப்பட்ட நாங்கூழ்ப் புழுவை ஒப்ப, புலனால் அரிப்புண்டு அலந்த- ஐம்புலன்களால் உள்ளம் அரிக்கப்பட்டு வருந்திய, வெறும் தமியேனை விடுதி கண்டாய்- அன்பற்ற தனித்தவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

கூற்றுவன் ஒடுங்கும்படி அவன்மீது பொருந்திய மலர்போன்ற திருவடிகளையே உணர்வுற்றவர்களாகிய சரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராகிய கிரியையாளர்களும் அவரின் மேம்பட்டவராகிய யோகிகளும் அடைகின்ற பதவிகளாகவுள்ளவனே, அடியார் பெயராத பெருமையனே, எறும்பினிடையே அகப்பட்ட நாங்கூழ்ப் புழுவைப்போல ஐம்புலன்களால் உள்ளம் அரிக்கப்பட்டு வருந்திய அன்பற்ற தனித்தவனாகிய என்னைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

கூற்று- இயமன், வெய்ய கூற்று என்றார், உயிருண்ணும் கூற்றாதலின், "உயிருண்ணும் கூற்றுப் போன்றவன்" (புற 4:12) "தொல்லுலகிற் பல்லுயிரைக் கொல்லும் கூற்றை" (தே. நாவு 269:9) என வருவன காண்க. உறும்- தீண்டிய எனினுமமையும். கடிப்போது- மணம் பொருந்திய

*ஓர் இலக்கை அடைவது என்பது மற்றொரு இலக்கிற்கான தொடக்கப்புள்ளி ஆகும்.*

பூ. கடி- வாசனை. "காந்தள் கடிகமழுங் கண்வாங் கிருஞ் சிலம்பின்" (கலி 39:15) கடிப்போது உருவகமாய்த் திருவடியை உணர்த்தியது. இறைவனுடைய மலர்போன்ற திருவடி பொருந்திய அளவிலேயே வெய்ய கூற்றுவனது வலிகெட்டொழிந்தமையின் "வெய்ய கூற்றொடுங்க உறுங்கடிப்போது" என்றார். "காலன் புகுந்த வியக் கழல்வைத் தெழிற் றில்லை நின்ற மேலன்" (286) எனத் திருக்கோவையாரில் வருதலும், "கழல் வைத்தென்றார் எளிதாகச் செய்தலான்" என்னும் பேராசிரியர் உரையும் ஈண்டறியற்பாலன. இறைவன் தன் திருவடியால், தன் கடமையைச் செய்ய வந்த கூற்றுவனின் வலிகெட்டொழியச் செய்தது என்னையெனின் தஞ்சமென்று தன் தாளடைந்த தவமுதல்வராகிய மார்க்கண்டேயரது உயிரைக் கவர வந்த கூற்றுவனின் தீச்செயல் பற்றியென்க.

"நின்னடியே வழிபடுவா னிமலா நினைக்கருத
என்னடியா னுயிரை வவ்வே லென்றடங் கூற்றுதைத்த
பொன்னடி"

ஞான 52:3.

"தோடுலா மலர்க டுவித் தொழுமார்க் கண்டேயன்
வீடுநா ளணுகிற் றென்று மெய்கொள்வான் வந்த காலன்
பாடுதான் செலலுமஞ்சிப் பாதமே சரணமென்னச்
சாடினார் காலன் மாளச் சாய்க்காடு மேவினாரே"

தே. நாவு 65:1.

எனத் திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"நீற்றுத் தீயுருவாய் நிமிர்ந்தானை நிரம்புபல்கலையின் பொருளாலே
போற்றித்தன் கழறொழு மவனுயிரைப் போக்குவான் உயிர்நீங்கிட தாளால்
கூற்றைத் தீங்குசெய் குரைகழலானை"

சுந் 62:6.

"தஞ்சமென்றுதன் தாளது அடைந்த பாலன்மேல் வந்த காலனையுருள
நெஞ்சிலோருதை கொண்ட பிரானை" சுந் 68:4.

எனச் சுந்தரமூர்த்தி சுவாமிகளும் அருளியவாறு காண்க.

கூற்றுவன் ஒடுங்க உதைத்தது ஒற்றைத் திருவடியாகவும் "போத்தவையே" எனப் பன்மை கூறியது கூற்றொடுங்க உறும் ஆற்றல் அத்திருவடியிரண்டற்கும் ஒத்த இயல்பினவாதல் பற்றியாகும். கூற்றை உதைத்தது ஒற்றைத் திருவடியாதல்.

"உடம்பினை விடக்கருதி நின்ற மறையோனைத்
தொடர்ந் தணவு காலனுயிர் காலவொரு காலால்
கடந்த வனிருப்பது"

ஞான 167:4.

"காய்ந்தான் செறற் கரியானென்று காலனைக் காலொன்றினால்
பாய்ந்தான்" நாவு 84:6.

என்னும் தேவாரத்தானும்,

"காலன் புகுந்த வியக்கழல் வைத்து காலன் வலிகெட
ஒரு கழலை வைத்து" 286 உரை.

என்னும் திருக்கோவையாருரையானுமறிக.

கூற்றினை உதைத்தது இடத்திருவடியாதல்,

"வீட வெடுத்தது காலனை..... தில்லைச் சிற்றம்பலத்து
நட்டம், ஆட வெடுத்திட்ட பாதமன்றா" நாவு 81:10.

எனத் தேவாரத்தும்,

"மதத்தான் மிக்கான் மற்றிவன் மைந்தன் னுயிர்வாங்கப்
பதைத்தா னென்னா வுன்னிவெ குண்டான் பதிமூன்றுஞ்
சிதைத்தான் வாமச்சேவடி தன்னாற் சிறிதுந்தி
உதைத்தான் கூற்றன் விண்முகில் போல் மண்ணுற வீழ்ந்தான்" மார்க் 253.

எனக் கந்தபுராணத்தும் வருவனவற்றாலறிக.

வெய்ய கூற்றொடுங்க உறுங்கடிப்போது என்றதனால் இறைவனது முடிவிலாற்ற லுடைமை புலப்படுதல் காண்க. போதவையே- போதுகளையே, அவை என்பது துணைச் சொல்லாக வந்தது. "சடையவை தாழ்வுற" "தோளவை நெரிய" (தே. ஞான 13:3; 75:8) என வருவன காண்க. ஏகாரம் தேற்றம். போதவையே பெறும்பதமே என முடிக்க.

கூற்றுவனுக்கு மறக் கருணையினால் தண்டஞ் செய்து ஒறுத்த அத்திருவடிகளே, உணர்வுற்றவர் உம்பர், உம்பர் ஆகிய சரியை கிரியை யோகிகள் அறக்கருணையினாற் பெறுகின்ற சாலோகம் சாமீபம் சாரூபம் என்னும் பதவிகளாக உள்ளான் என இறைவனது அருட்டிறம் ஒன்றே இருவேறு பயன்கொடுக்கும் தன்மை கூறப்பட்டது.

உணர்வுற்றவர் என்றது திருவடிகளையே மெய்ம்மையாக வுணர்ந்து ஆலயப் பணியும் அடியார் பணியும் ஆற்றும் சரியையாளரைக் குறித்தது. உம்பர் என்றது அவரினும் மேம்பட்டவராய் அத்திருவடியுணர்வொடு இறைவனைப் பூசிக்கும் கிரியையாளரை உணர்த்தியது; மேலும் உம்பர் என்றது அவரினும் மேம்பட்டவராய் அத்திருவடியுணர்வும் இறைவன் பூசனையும் அகத்தே நிகழ ஆணவ நீக்கத்தின் பொருட்டு சிவோகம் பாவனையாளராகிய யோகிகளை உணர்த்தியது. உம்பர்- மேனிலை. உணர்வுற்றவரும் உம்பரும் உம்பரும் என்னும் எண்ணும் மைகள் செய்யுள் விகாரத்தாற் றொக்கள். சாலோகம் முதலிய பதங்களையருளும் இறைவனைப் "பதமே" என்றார்.

அடியார் பெயராத பெருமையனே என்றது மெய்யடியார்களாகிய சிவஞானிகள் பெறுகின்ற மீளத்திரும்புதலில்லாத சாயுச்சியமாகிய பெருமையுடையவனே என்றவாறு. ஞானிகள் சாயுச்சியம் பெறுவர் என்றது.

"சன்மார்க்க முத்திகள் சா லோக்கிய சா மீப்பிய
சாருப்பிய சாயுச்சியம் என்றுசதுர் விதமாம்
முன்மார்க்க ஞானத்தால் எய்து முத்தி
முடிவென்பர் மூன்றினுக்கும் முத்திபதம் என்பர்"

சுபக்கம் சூத் 8 செய் 18.

எனச் சிவஞானசித்தியாரில் வருதலுங் காண்க.

*எண்ணங்கள் துப்பாக்கிகளைவிட அதிக சக்தி வாய்ந்தவை.*

சரியை முதலியவற்றான் எய்தும் சாலோகம் முதலிய பதமுத்திகளைப் பெற்றார்க்கு அந்நிலைகளிற் பெயர்ச்சியுண்மை போல சிவசாயுச்சியமாகிய பரமுத்தியைப் பெற்றார்க்குப் பெயர்ச்சியின்மையின் அடிகள் "பெயராத பெருமையனே" என்றார்.

"பிறிவறி யாஅன்பர் நின்னருட் பெய்கழற் றாளிணைக்கீழ்
மறிவறி யாச்செல்வம் வந்து பெற்றார்" (அடைக் 9)

எனப் பிறிதோரிடத்து அடிகள் அருளியமையுங் காண்க.

ஞானவழியான் சிவசாயுச்சியமாகிய பரமுத்தி எய்திய உயிரை மீண்டும் பிறவியிற் செலுத்தாமல் அந்தமிலின்பம் துய்க்கச் செய்தலாகிய பெருமையையுடையனாகலின் பெயராத பெருமையனே" என்றார். பெயராத என்னும் எதிர்மறைப் பெயரெச்சம் பெருமையன் என்னும் பெயர் கொண்டு முடிந்தது.

நாங்கூழ்- மண்ணுணிப்பாம்பு, இதனை நாகப்பூச்சி என்றும் பூநாகம் என்றும் கூறுவர். எறும்புக் கூட்டத்தில் அகப்பட்ட நாங்கூழ் அவற்றால் அரிக்கப்பட்டு வருந்துதல் போல ஐம்புலன்களினால் உள்ளம் அரிக்கப்பட்டுத் தாம் வருந்தியமைபற்றி "எறும்பிடை நாங்கூழெனப் புலனாலரிப் புண்டலந்த" என்றார். வெறுமை- அன்பின்மை. தமியேன்- துணையில்லாது தனிப்பட்டேன்.

இதன் கண், புலனாலரிப்புண்டலந்த வெறுந்தமியேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலப்படுதல் காண்க. 25.

**130. பெருநீ றறச்சிறு மீன்றுவண் டாங்கு நினைப்பிரிந்த**
**வெருநீர்மை யேனை விடுதிகண் டாய் வியன் கங்கை பொங்கி**
**வருநீர் மடுவுண் மலைச்சிறு தோணி வடிவின் வெள்ளைக்**
**குருநீர் மதிபொதி யுஞ்சடை வானக் கொழுமணியே.**

**ப-ரை:**

வியன் கங்கை பொங்கி வருநீர் மடுவுள்- பெரிய கங்கையாறு பொங்கி வந்து தங்கிய நீரையுடைய சடையின் கணுள்ள மடுவினுள், **மலை சிறு தோணி வடிவின்-** திரையினால் தாக்கப்படுகின்ற சிறிய தோணி போன்ற வடிவினையுடைய, **வெள்ளை குருநீர் மதிபொதியும் சடை-** வெள்ளை நிறத் தன்மையையுடைய மதியினை உள்ளடக்கிய சடையினையுடைய **வான கொழு மணியே-** சிதாகாயத்திலுள்ள சிறந்த மாணிக்கமே, **பெரு நீர் அற சிறுமீன் துவண்டாங்கு-** மிக்கநீர் வற்றிப்போக அதனுள் வாழ்ந்த சிறிய மீன்கள் வருந்தினாற் போல, **நினை பிரிந்த வெரு நீரமையேனை விடுதி கண்டாய்-** ஆதாரமாகிய நின்னைப் பிரிந்ததனால் வருந்துகின்ற அஞ்சுந் தன்மையுடையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும்.

கங்கை பொங்கி வருநீர் மடுவுள் சிறு தோணி வடிவினையுடைய மதியினை உள்ளடக்கிய சடையினையுடைய வானக் கொழுமணியே, பெருநீர் வற்றிப் போக அதனுள் வாழ்ந்த சிறு மீன்கள் வருந்தினாற்போல ஆதாரமாகிய நினைப் பிரிந்ததனால் வருந்துகின்ற அஞ்சுந் தன்மையுடையேனைக் கைவிடுகின்றனையோ? கைவிடாதொழிதல் வேண்டும் என்பதாம்.

*உங்கள் தவறுகளே உங்களுக்குப் பாடம் கற்றுத் தருகிறது.*

அகற்சியையுடைய கங்கையாதலின் "வியன்கங்கை" என்றார். வியல்- அகலம். "வியலென் கிளவி யகலப் பொருட்டே" என்பது தொல்காப்பியம் (உரி 364:68). பகீரதனது தவத்தால் விண்ணினின்றும் பலமுகமாக விசையொடும் வருகின்ற கங்கையை அவன் வேண்டுகோட் கிரங்கி இறைவன் சடையில் ஏற்ற அளவில் அ∴து ஒரு மடுப்போலத் தோன்றலின் "கங்கை பொங்கி வருநீர் மடுவுள்" என்றார்.

"அஞ்சையு மடக்கி யாற்ற லுடையனாயனேக காலம்
வஞ்சமில் தவத்துள் நின்று மன்னிய பகீரதற்கு
வெஞ்சின முகங்க ளாகி விசையொடு பாயுங் கங்கை
செஞ்சடை யேற்றார் சேறைச் செந்நெறிச் செல்வனாரே" திருநாவு 73:4.

எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

கங்கை நீர் மடு என்க. "கங்கை மடுத்ததும்பிய வளர்சடை மறைத்த அம்மறையோர்" (அமர்நீதி 15) எனப் பெரியபுராணத்து வருதலுங் காண்க. மடு- இயற்கை நீர்நிலை. மலைச் சிறு தோணி என ஒற்றுமிக்கமையால் மலைக்கப்படுகின்ற எனச் செயப்பாட்டு வினைப்பொருள் கொள்ளப்பட்டது. மலைத்தல்- நீர்த் திரையால் தாக்கப்படுதல்.

இறைவன் சடையில் அணிந்தது ஒருகலைப் பிறையாதலின் சிறு தோணி வடிவு அதற்கு உவமையாகக் கூறப்பட்டது. இறைவன் அணிந்தது ஒருகலைப் பிறையாதல்,

"வெண்மதியின் ஒற்றைக் கலைத் தலையாய்" நீத் 40.

எனவும்,

"கலைச்சிறு திங்கள் மிலைத்த சிற்றம்பலவன் - ஒரு கலையாகிய சிறிய பிறையைச் சூடிய சிற்றம்பலவனது" திருக்கோவை 25 உரை.

"சடைமுடி மேற் றனித் திங்கள் வைத்த.... அம்பலவன்- சடையானியன்ற முடிமேல் ஒரு கலையாகிய திங்களை வைத்த" - திருக்கோவை 56 உரை.

எனவும்,

"மூன்றுறழ் ஐந்து வைகல் முடிந்துழி மதியம் என்போன்
ஆன்றதண் கலையின் மூவைந் தழிதலும் அவனே யென்னச்
சான்றுரை செய்தல் போலோர் தண்கலை இருந்தலோடும்
மான்றனன் மெலிந்து வெள்கி வானவர் கோனையுற்றான்"

கந்தபுரா, சந்திர. சா.8.

எனவும் வருவனவற்றாலறியலாம்.

தோணி வடிவின் மதி என இயையும். பிறைக்குத் தோணியை உவமை கூறுதலை,

"நாவாய் பிறைச் சென்னி" ஞான 324:6.

எனத் தேவாரத்தும்,

"எரிகின்ற தீயொத்துளசடை ஈசற்கத் தீக்கிமையோர்
சொரிகின்ற பாற்கடல் போன்றது சூழ்புனலப் புனலிற்
சரிகின்ற திங்களோர் தோணியொக்கின்றத் தோணியுய்ப்பான்.
தெரிகின்ற திண்கழை போன்றுளதாலத் திறலரவே" (67)

எனப் பொன் வண்ணத்தந்தாதியிலும்,

"ஓமெனு மெழுத்தின் வடி வாய்நட நவின்றுபுவி
யூரன் மகு டச்சடில மேல்
மாமதி யினைத் தனது கோடென வெடுப்பமத
மாமுகன் முகக்கை தொடரத்
தூமதி பணிப்பகை யெனவர நதிப்புகவோர்
தோணியென விட்டகலுமே" (53)

எனச் சிதம்பரச் செய்யுட் கோன்வயிலும் வருவன காண்க.

வடிவின் - இன் ஒப்புப் பொருளது. குரு- நிறம், "குருவும் கெழுவு நிற னாகும்மே" (தொல் உரி 305:5) நீர் தன்மை. "நீணீர் நெறிக் கதுப்பு" (கலி 98:15) என்புழிப்போல. பொதிதல்- உள்ளடக்குதல். கங்கை பொங்கி வருநீர் மடுவுள் மதிபொதியுஞ் சடை என்க. "பனிச் சந்திரனொடு பாய்புனல் சூடும் பரன்" எனத் திருக்கோவையாரில் (211) வருதலுங் காண்க.

பெருநீரில் வாழ்ந்த சிறு மீன்கள் அந்நீர் வற்றியவிடத்து வாடினாற்போல எனக்கு ஆதாரமாகிய நின்னைப் பிரிந்து வருந்தி அதனால் அஞ்சினேன் என்பார், "பெருநீரறச் சிறு மீன் துண்டாங்கு நினைப் பிரிந்த வெருநீர்மையேனை" என்றார். துவள்தல்- வருந்துதல், "சோறு கூறையின்றியே துவண்டு" (ஞான 233:3) தேவாரம். துவண்டாங்கு என்பதற்கு ஏற்ப, நினைப் பிரிந்த என்பதற்கு நினைப் பிரிந்து வருகின்ற எனவுரைக்க. "மருளார் மனத்தோ டுனைப் பிரிந்து வருந்துவேனை" (கோயில் மூத்8) என அடிகள் பிறிதோரிடத்து அருளியவாறுங் காண்க. வெருநீர்மையேனை- அஞ்சுந் தன்மையுடைய என்னை, திருப்பெருந்துறையுறை சிவனே அஞ்சினேன் நாயேன்" (வாழப் 6) என அருளியமை காண்க. நின் பிரிவால் அஞ்சுந் தன்மையுடைய என்னைக் கைவிடலாகாது என்பார். "வெருநீர்மையேனை விடுதி கண்டாய்" என்றார்.

இதன் கண், நினைப் பிரிந்த வெருநீர்மை யேனை விடுதி கண்டாய் என்பதனால் பிரபஞ்ச வைராக்கிய விருப்பும் கைவிடாதொழிதல் வேண்டும் என்பதும் புலனாதல் காண்க. 26.

(தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மே | 06 | சித் 23 | வியாழன் | திருநாவுக்கரசர் |
| மே | 11 | சித் 28 | செவ்வாய் | சிறுத்தொண்டர் |
| மே | 13 | சித் 30 | வியாழன் | மங்கையற்கரசியார் |
| மே | 28 | வை 14 | வெள்ளி | திருநீலகண்ட யாழ்ப்பாணர் |
| | | | | திருஞானசம்பந்தர் |
| யூன் | 14 | வை 31 | திங்கள் | நமிநந்தியடிகள் |
| | | | | சேக்கிழார் |

*மற்றவர் குறைகளைப் பேசுவதற்கு முன்னர் நாம் நம்மைச் சரிபார்ப்பது நல்லது.*




சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்படும் சமுதாயப் பணிகளின் வரிசையில், பண்டாரவளை - தெமோதரை சௌதம் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் 165 பேருக்கான கற்றல் உபகரணங்கள் நேரில் சென்று வழங்கப்பட்டது.











சந்நிதியான்
ஆச்சிரமத்தினால்
மேற்கொள்ளப்படும்
சமுதாயப் பணிகளின்
வரிசையில், பருத்தித்துறை
மந்திகை ஆதார
வைத்தியசாலையினரின்
கோரிக்கைக்கு அமைவாக
3,75,000. 00 ரூபா
பெறுமதியான
தண்ணீர் சுத்திகரிக்கும்
இயந்திரம்
நோயாளர்களுக்காகவும்
பயனாளர்களுக்காகவும்
வழங்கப்பட்டது.

# நாவலர் பெருமான் காட்டிய வாழ்வியல் விழுமியங்கள்

– திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள் –

**சைவசமய விழுமியங்கள்**

சைவசமயம் மூன்று பொருள்களை உண்மையாகக் கொண்டுள்ளது. அவை யாவன, கடவுள், ஆன்மா, உலகம் என்பன. இம் மூன்றும் அநாதியானவை என்று கொள்ளப்படுகின்றன. நாவலர் பெருமான், இவ் உலகில் மக்கள் செம்மையாகவும் ஒழுங்காகவும், நீதி வழுவாமலும் வாழ்வதற்கு இம் மூன்று பொருள்களின் உண்மை நிலையையும் அவர்கள் உணர்ந்து அவற்றை ஏற்று, வாழ்வில் பேணி வரவேண்டும் என்னும் கருத்தைக் கொண்டிருந்தவர் என்பது அவரின் நூல்கள் வாயிலாக அறியமுடிகிறது.

கடவுள், இந்த உலகிற்குக் கருத்தாவாக உள்ளார். "உலகமாவது சித்தும் அசித்துமென இருவகைப்படும், பிரபஞ்சமாம்" என நாவலர் குறிப்பிடுகிறார். சித்துப் பொருளுக்கு அறிவு உண்டு. அறிவில்லாத பொருளை அசித்து என்றும் சடம் என்றும் கூறுவர்.

உலகின் கருத்தாவான கடவுளை, சைவர்கள் சிவபெருமான் என அழைக்கின்றனர். கடவுள் ஒருவரே; அவர் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லவர். அவருக்கு இயலாதது என்று எதுவுமில்லை. அவர் ஆனந்தம் என்றும் உடையவர். வேண்டுதல் வேண்டாமை இலாதவர். அவரே உயர்வும் ஒப்பும் இல்லாத தனிப்பெருந் தலைவர் ஆவர். உயிர்கள்மீது கொண்டுள்ள அளப் பெருங் கருணையினாலேயே அவற்றிற்கு உடம்பு, புலன்கள் ஆகியவற்றை வழங்கி, வாழ்வதற்குப் பூமியையும் அனுபவிப்பதற்கு நுகர் பொருட்களையும் அளித்துள்ளார். அதற்காக மனிதர்களாகிய நாங்கள் கடவுளுக்கு நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும்.

கடவுளால் விரும்பப்படுபவைகளைச் செய்தலும், வெறுக்கப்படுபவைகளைச் செய்யாமல் விடுதலும் கடவுளுக்கு நாம் காட்டும் நன்றிகள் ஆகும்.

"கடவுளால் விரும்பப்படுபவைகளாவன, இரக்கம், வாய்மை, பொறை, அடக்கம், கொடை, தாய் தந்தை முதலிய பெரியோரை வழிபடுதல் முதலிய நன்மைகளாம். கடவுளால் வெறுக்கப்படுபவைகளாவன கொலை, புலாலுண்ணல், களவு, கள் உண்ணல், விபச்சாரம், பொய், செய்நன்றி மறத்தல் முதலிய தீமைகளாம்" என்று நாவலர் பெருமான் நான்காம் பால பாடத்தில் எழுதியுள்ளார்.

கடவுள் ஒருவர் உண்டு என்பதிலும்; அவனின்றி இவ்வுலகில் ஓர் அணுவும் அசையாது என்பதிலும்; அவனே சகலவற்றிற்கும் பரமபதி என்பதிலும்; மேலே கூறப்பட்ட கடவுளின் இலட்சணங்களிலும் வல்லபங்களிலும் மக்களாகிய நாங்கள் உறுதியான நம்பிக்கை கொள்ளவேண்டும் என்பது நாவலர் காட்டும் தலையாய சமய விழுமியம் ஆகும். கடவுள் நம்பிக்கையின் அடித்தளத்திலிருந்தே ஏனைய சமூக, பண்பாட்டு, பொருளாதார விழுமியங்கள்

*வெற்றியைப் போன்றதொரு வலிமை வேறு எதுவுமில்லை.*

உள்ளிட்ட மனித விழுமியங்கள் யாவும் கட்டி யெழுப்பப்படுகின்றன.

மனிதர்கள் பாவங்களையும் தீமை களையும் செய்ய அஞ்சுகின்றனர். ஏன் என்று கேட்டால் கடவுள் கோபிப்பார் என்றும் தெய் வம் தண்டிக்கும் என்றும் பதில் கூறுகின்றனர். எந்தத் தண்டனைக்குத் தப்பினாலும் தெய்வ தண்டனைக்கு எவரும் தப்பிவிட முடியாது என்ற நிலைப்பாட்டினை ஏற்றுக்கொள்பவர்கள், கடவுளால் விலக்கப்பட்ட பாவங்களையோ, பாதகங்களையோ செய்யாமல் தவிர்த்துக் கொள்வார்கள். கடவுள் சிந்தனையோடு ஒரு காரியத்தைச் செய்யும்போது நல்ல விளைவு கள் ஏற்படுகின்றன; நன்மைகள் உண்டாகின் றன. காரணம் என்னவெனில், கடவுளை முன்னிட்டு கருமத்தை ஆற்றும்போது கடவுள் எம்முடன், எமக்குத் துணையாக இருக்கின் றான்; அவன் எமது ஒவ்வொரு செயலையும் நுட்பமாகக் கண்காணித்துக் கொண்டிருக் கிறான்; அதனால் நாம் நல்லவற்றிலேயே ஈடுபடவேண்டும், தீயனவற்றை விலக்கிவிட வேண்டும் என்று சதா சிந்தித்துக் கவனமாகக் கருமமாற்றுதலேயாகும்.

கடவுட் கோட்பாட்டில் நம்பிக்கை கொண்டு வாழும்போது, கடவுளால் விதிக் கப்பட்டவை புண்ணியங்கள் என்றும்; விலக் கப்பட்டவை பாவங்கள் என்றும் மக்கள் அறிந்து புண்ணியங்களையே செய்வர். பாவங் களைச் செய்யாதொழிப்பர். புண்ணியங்கள் அனைத்தும் விழுமியச் செயற்பாடுகளே. மனித விழுமியங்களை விருத்தி செய்வதற்குக் கடவுள் நம்பிக்கை ஆதாரமாக உள்ளமையை நன்குணர்ந்த சைவசமயிகள், பரமபதியை ஒப்பாரும் மிக்காரும் இல்லாத மிக உயர்ந்த தலைவராக ஏற்று, வழிபாடு செய்து வரு கின்றனர். நாவலர் பெருமான், திருத்தொண்டர் பெரியபுராண வசன முகவுரையில் குறிப்பிட் டிருக்கும் பின்வரும் விடயம் நோக்கற்பாலது. "சுத்தசாட்குண்ணிய பரிபூரணராகிய பரமபதி சிவபெருமானே என்று துணிந்தவர்களாய்; கொலை, களவு, கள்ளுண்ணல், புலால் உண்ணல், பிறன்மனை விழைதல், வரை வின் மகளிர் விழைதல், பொய்ச்சான்றுரைத் தல் முதலிய பாவங்கள் இல்லாதவர்களாய், இரக்கம், வாய்மை, கொடை முதலிய புண்ணி யங்களை உடையவர்களாய் குருலக்கணங் குறைவற அமைந்த சைவாசாரியாரை அடைந்து சிவதீட்சை பெற்றுக்கொண்டவர் களாய், விபூதி உருத்திராட்ச தாரணம், சந்தியா வந்தனம், ஸ்ரீ பஞ்சாட்சர ஜபம், சிவத்தியானம், சிவாலய சேவை, சிவலிங்க பூசை, குருவாக்கிய பரிபாலனம், மாகேசுர பூசை முதலியவற்றைச் சிவாகம விதிப்படி மெய்யன்போடு செய்பவர்களாய் உள்ளவர் களே, சைவர்களென்று சொல்லப்படுவார்கள்".

சமயம் வேறு; சமூகம் வேறு அன்று. சமூகத்தினருக்கே சமயம் உரியது; அதுவும் அவர்களின் அனுட்டானத்திற்கு உரியது. அந்த வகையில் சமய விழுமியங்களும் சமூகம் சார்ந்த விழுமியங்களே ஆகும்.

சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவ பெருமான். சுத்தசாட்குண்ணிய பரிபூரணர் அவர். அவர் ஒருவரே பரமபதி. அவர் நிறை வானவர், "தனக்குவமை" இல்லாதவர். சிவபெருமானைத் தலைவராகக் கொண்டவர் கள் சைவர்கள். அவர்கள் மனிதர்கள் என்ற வகையில், "பிறர் வயமுடையவர்களும், சிற்றறிவு சிறு தொழிலுடையவர்களுமாய் இருத்தலினாலே, நன்மை தீமைகளை உள்ள படி அறியவும், தீமைகளை ஒழித்து நன்மை களையே செய்யவும் வல்லவர் அல்லர். ஆத லால், தம்வயமுடையவரும் முற்றறிவு, முற் றுத் தொழிலுடையவரும் ஆகிய கடவுளை வணங்கி, அவருடைய திருவருள் வசப்பட்டு

*முன்னேற்றம் மனிதகுலத்தை இயக்குகின்ற ஈர்ப்பு சக்தியாகும்.*

ஒழுகுபவர்களேயானால், அவர்கள் தீமைகளி னின்று நீங்கி நன்மைகளைச் செய்து, தம்மை வழிபட்டு உய்யும்படி அவர் அருள் செய்வார். நாவலர் கருத்து இவ்வாறு அமைகின்றது.

கடவுள் என்ற உண்மைப்பொருள் விழுமியங்கள் பிரவாகிப்பதற்கு ஊற்றாகின் றது. மனிதர்கள் நன்மை, தீமைகளை உள்ள படி இனங்கண்டு அறிவதற்குக் கடவுளின் திருவருள் தேவையாகும்.

கடவுள் மனிதர்களுக்காக வேதம், ஆகமம் ஆகிய முதனூல்களை அருளிச் செய்துள்ளார். அவைகளிலே மனிதர்கள் கைக்கொள்ளவேண்டிய விழுமியங்கள் எவை, விழுமியங்கள் அல்லாதவை எவை என்றெல் லாம் உணர்த்தப்பட்டுள்ளன.

விழுமியங்களை மதித்தும் போற்றியும் கடைப்பிடித்தும் வாழ்கின்றவர்களுக்கு இன்பத் தையும், அவ்வாறு செய்யாதவர்க்குத் துன்பத் தையும் கடவுள் கொடுப்பார். துன்பத்தைத் தீயோருக்குக் கொடுப்பதனால், கடவுள் வன்கண்ணாளர் என்று கருதிவிடக் கூடாது. கடவுள் கருணையே உருவானவர். இங்கு அவர் செய்வது மறக்கருணை. பாவங்கள் புரிகின்ற தீயோரைத் தண்டித்துத் துன்பத்திற் குள்ளாக்குதல் மூலம், அப்பாவத்தை ஒழித்து மேலும் மேலும் பாவங்களைச் செய்யா வண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்திப் புண்ணியங்களாகிய விழுமியங் களில் நாட்டங்கொள்ளச் செய்தலே நோக் காக உள்ளது. அவ்வாறு செய்வது, இறை வன் அத் தீயவர்கள்மீதும் கொண்டுள்ள கருணையினாலேயாகும். அறக்கருணை போன்று மறக்கருணையும் நன்னோக்கம் கொண்டதேயாகும்.

சைவத் தமிழ் மக்கள் சமய விழு மியங்களை உணர்தற்கும் அவற்றை வாழ்வில் கடைப்பிடித்து ஒழுகுதற்கும் உறுதுணையாக அமையும் நூல்கள் "தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருத் தொண்டர் பெரியபுராணம் என்பவைகளாம். இவைகள் சிவபிரானது திருவருளினாலே பாடப்பட்டமையால், அருட்பாவென்று சொல் லப்படும். இவைகளுள் முன்னைய நான்கும் பதி, பசு, பாசமென்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணத்தை உணர்த்துஞ் சைவசித்தாந்த சாத்திரத்தின் அனுபவப் பயனாகிய தோத்திர ரூபமாய் இருக்கும். பின்னையதாகிய திருத் தொண்டர் பெரியபுராணம் சிவாகமங்களில் உணர்த்தப்படும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங்களையும் அநுட்டித்து முத்தி பெற்ற மெய்யடியார் களுடைய அடிமைத் திறத்தை விளக்குவ தாகிய சரித்திர ரூபமாய் இருக்கும். ஆதலாற் றானே இவைகளைந்தும் சைவத்துக்கும்.... சைவர்களுக்கும் இன்றியமையாப் பெருஞ் சிறப்பினவாயின. (நாவலர் திருத்தொண்டர் பெரியபுராண வசனம்)

இறைவனும் நமக்குச் சில சோதனைகள் தருகிறார். இவனது அன்புக்கு ஆற்றல் உண்டா இல்லையா? அர்ப்பணம் செய்வானா? மாட்டானா? அளவற்ற ஆற்றல் கொண்டவனா? இறைவன் பரிசோதனை செய்கிறார். செல்வந்தன் ஒரு ஏழைப் பெண்ணைத் திருமணம் செய்துகொள்ளும்போது அவளுக்குக் கணவன் சொத்தில் பங்குண்டு. அதுபோல் இறைவனிடம் நீ முழுச் சரணாகதி அடைந்தால் உனக்குக் கடவுளின் சொத்தில் பங்குண்டு.

*ஊக்கமுடன் இருப்பவர்கள் தாங்கள் சந்திக்கும் விளைவுகளைக் கண்டு பயப்படுவதில்லை.*

# திருவிளையாடற் புராண வசனம்

## (முப்பத்து மூன்றாவது)

## அட்டமாசித்தி உபதேசித்த படலம்

**– ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் –**

சிவபெருமான், திருக்கைலாச மலையிலே ஆலமர நிழலிலே உமாதேவியார் தமது திருத்தொடையின்மீது இருந்துகொண்டு வெற்றிலை மடித்துக் கொடுப்பப், போக குருவாய் வீற்றிருந்துகொண்டு, நந்தி, பிருங்கி மகாகாளர் முதலிய கணர்களுக்குஞ் சனகர் முதலிய நான்கு முனிவர்களுக்குஞ் சிவ தருமங்களை உபதேசித்தருள்வாராயினார். அப்பொழுது, முருகக் கடவுளுக்குப் பால் கொடுத்த இயக்கப் பெண்கள் அறுவரும், விபூதி, ருத்திராட்சந் தரித்து வந்து, சிவ பிரானை வணங்கி நின்று, "எம்பெருமானே! அடியேங்களுக்கு அட்டமாசித்திகளை உபதேசித்தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அப்பொழுது சிவபெருமான் தமது மடியில் எழுந்தருளியிருக்கும் உமாதேவியாரைத் தமது திருக்கரத்தினாலே சுட்டி "இப்பார்ப்பதி எங்கும் நிறைந்த பராசக்தியும் மகேசையுமாம் உள்ளவள். அணிமா முதலிய அட்ட சித்திகளும் பாங்கியர்களாய்த் தன்னைச் சூழ்ந்து குற்றேவல் செய்ய இருப்பவள். இவளை நீங்கள் சிந்தித்தீர்களாயின், இவள் உங்களுக்கு அட்டமா சித்திகளையுந் தருவாள்" என்று திருவாய் மலர்ந்து, எட்டுச் சித்திகளையும் அவ்வியக்கிமார் அறுவருக்கும் உபதேசித்தருளினார். அவர்கள் முன்னை ஊழ்வினையினால் அதனை மறந்தார்கள். சிவபெருமான் அக்குற்றம் நோக்கி, அவர்களைக் கோபித்து, "நீங்கள் பட்டமங்கை என்னுந் தலத்தில் ஆலமரத்தடியிலே கருங்கல்லாய்க் கிடக்கக் கடவீர்கள்" என்று சபித்தருளினார். இயக்கிமார்கள் மனந்தளர்ந்து, "எம்பெருமானே! இச் சாபம் எப்போது நீங்கும்?" என்றார்கள். சிவபெருமான் "நீங்கள் கருங்கல்லாய்க் கிடவுங்கள். ஆயிரம் வருடஞ் சென்றபின், நாம் மதுரையினின்றும் அவ்விடத்துக்கு எழுந்தருளிவந்து, உங்கள் சாபத்தைப் போக்கி, உங்களுக்குப் பழைய உருவத்தை தந்து, எட்டுச் சித்திகளையும் உபதேசித்தருள்வோம்; போங்கள்" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

இயக்கிமார்கள் அறுவரும், பட்டமங்கையினுள்ள ஆலமரத்தினடியிலே கருங்கல்லாய்க் கிடந்தார்கள். ஆயிரம் வருடஞ் சென்றபின், சோமசுந்தரக் கடவுள் ஓராசாரிய வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து, அக்கருங்கற்களின்மீது திருநோக்கஞ் செய்தருளினார். உடனே இயக்கிமார்கள் அறுவரும் கருங்கல் வடிவம் நீங்கி முன்னை வடிவங்கொண்டு, எழுந்துவந்து, அவ்வாசாரியாரை வணங்கினார்கள். ஆசாரியர் அவர்கள் சிரமீது தமது திருக்கையை வைத்து, எட்டுச் சித்திகளையும் இங்ஙனம் உபதேசிப்பாராயினார்:-

எட்டுச் சித்திகளாவன அணிமா, மகிமா, லகிமா, கரிமா, பிராப்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பவைகளாம். அவைகளுள், அணிமாவாவது மிகச் சிறிய உயிர்தோறுந் தான் பரமாணுவாய்ச் சென்றிருக்குஞ் சிறுமையாம். மகிமாவாவது பிருதிவி முதற் சிவதத்துவம் ஈறாக உள்ள முப்பத்தாறு

தத்துவங்களின் உள்ளும் புறமும் நிறைந் திருக்கும் பெருமையாம். லகிமாவாவது மேருமலையைப் போலப் பாரமாயிருக்கும் யோகியை எடுத்தால் இலகுவாயிருப்பதாம், கரிமாவாவது அணுவைப்போல் இலகு வாயிருக்கும் யோகியை எடுத்தால் மேருமலை யைப் போலப் பாரமாயிருப்பதாம். பிராப் தியாவது பாதாளத்தினின்றும் பிரமலோகத்திற் புகுதலும் மீண்டும் பாதாளத்தை அடைதலு மாம். பிராகாமியமாவது பரகாயத்திற் பிர வேசித்தலும் ஆகாயத்தில் இயங்குதலுந்தான் இச்சித்தபோகமனைத்தையுந் தானிருக்கு மிடத்தில் வருவித்தலுமாம். ஆகாயத்துள்ள சூரியனது உடம்பின் வெய்யிலினால் எல்லாம் விளங்குதல் போல மண்ணுலகத்துப் பொருள் களையும் விண்ணுலகத்துப் பொருள்களையும் முக்காலங்களையும் தன் சரீரத்தொளியால் அறிதலும் பிராகாமியம் என்று வேதஞ் சொல் லும். ஈசத்துவமாவது முத்தொழில்களையுந் தன்னிச்சைப்படி செய்து சூரியன் முதலிய கிரகங்கள் தன்னேவல் கேட்ப வாழ்தலாம். வசித்துவமாவது இந்திராதி தேவர்களையும் அசுரர்களையும் மனிதர்களையும் பூதங்களை யும் மிருகங்களையும் பறவைகளையுந் தன் வசமாக்கிக் கொள்ளுதலாம். நம்மையறிந்த யோகிகள் இவைகளை விரும்பார்கள். ஆயி னும், இவைகள் அவர்களை நிழல்போல அடைந்து, அவர்கள் பெருமையை உலகத் தாருக்கு அறிவிக்கும்" என்று உபதேசித் தருளினார்.

அதுகேட்ட இயக்கிமார்கள், உமா தேவியாரைத் தியானிக்குந் தியான பலத் தினாலே அச்சித்திகளை நன்கு பயின்று, ஆகாய வழிக்கொண்டு சென்று, திருக் கைலாச மலையை அடைந்தார்கள்.

## முப்பத்து நான்காவது விடையிலச்சினை யிட்ட படலம்

காஞ்சீபுரத்தில் ஒரு சோழராசன் இருந்தான். அவன் அக் காஞ்சியிலுள்ள காடு முற்றும் வெட்டுவித்ததினாலே, காடு வெட்டிய சோழன் எனப் பெயர் பெற்றான். அவன் உத்தம சிவபத்தர்களெல்லாரினும் உத்தமன்; வேத நான்கையும் வேதாங்கமாறையும் ஓதி உணர்ந்தவன்; சிவபுராணங்களை நாடோறும் நியமமாகக் கேட்பவன்; கலவைச் சாந்தினும் இரத்தினாபரணங்களினும் சிறிதும் விருப்பின்றி விபூதியையும் உருத்திராட்சத்தையுமே தரிப் பவன்.

அவன், மதுரைச் சோமசுந்தரக் கடவுளுடைய திருவிளையாடலைக் கேட்டு உணர்ந்து, அவரைத் தரிசிக்க விரும்பி, ஒருநாள் ராத்திரி, "சோமசுந்தரக் கடவுளை எப்போது தரிசிப்பேன்?" என்று கவலையுற்று நித்திரை செய்தான். அப்பொழுது சிவபெரு மான் சோழனுக்குச் சொப்பனத்திலே ஒரு சித்தசுவாமியாய்த் தோன்றிச், "சோழனே! அஞ்சாதே. நீ இன்றைக்கு உருவ மாறி, ஒருத்தனாய்த் தனித்து வந்து, தரிசனஞ் செய்துகொண்டு போ" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். சோழன் விழித்தெழுந்து, வியந்து, மந்திரிமாருஞ் சேனைகளும் பிறரும் இன்றி, அவ்விரவிலே சிவபெருமானுடைய திருவருளை முன்னிட்டுக் கொண்டு, தனித்து நடந்து போய், வைகைக் கரையை அடைந் தான். வைகைநதி மிகப் பெருக்கெடுத்துப் பாய்ந்தது. அதுகண்ட சோழன், மனங்கலங்கிச் "சோமசுந்தரக் கடவுளைத் தரிசிப்பதற்கு இடை யூறு விளைந்ததே! விடிந்தால் விக்கினம் உண்டாகுமே!" என்று வருந்தினான். அப்பொழுது

*உள்ளத்தில் தெம்பு இருந்தால் உலகம் ஒரு துரும்பு.*

சிவபெருமான் முன்னைச் சித்தர்போல் எழுந்தருளி வந்து, வைகைநதி வற்றும்படி திருநோக்கஞ் செய்தார். அது வற்றுதலும், சித்தர், சோழனை அழைத்துக்கொண்டு, வடக்கு வாயிலைத் திறந்து போய், வீதிகளைக் கடந்து, பொற்றாமரை வாவியிலே ஸ்நானஞ் செய்வித்துத், திருக்கோயிலினுள்ளே புகுவித்து, விமானத்தில் எழுந்தருளியிருக்கின்ற தம்மை வணங்குவித்துப் பின்பு மீனாட்சியம்மையையும் வணங்குவித்தார். சோழன் சோமசுந்தரக் கடவுளை வணங்கி, இவ்வாறு துதிப்பானாயினான்:-

"எண்ணிய வெண்ணி யாங்கே
யான்பெற முடித்தாய் போற்றி
பண்ணியன் மறைக டேறாப்
பான்மொழி மணாள போற்றி
புண்ணியர் தமக்கு வேதப்
பொருளுரை பொருளே போற்றி
விண்ணிழி விமான மேய
சுந்தர விடங்க போற்றி.

எவ்வுட லெடுத்தேன் மேனா
ளெண்ணிலாப் பிறவி தோறும்
அவ்வுட லெல்லாம் பாவ
மறம்பொருட் டாக வன்றோ
தெவ்வுடல் பொடித்த யுன்றன்
சேவடிக் கடிமை பூண்ட
இவ்வுட லொன்றே யன்றோ
வெனக்குட லான தையா."

இப்படிச் சோழன் துதித்து, வணங்கிப், பல வரங்களையும் வேண்டிக் கொண்டான். சித்தசுவாமி சோழனை நோக்கி, "நீ வந்த சமாசாரம் பாண்டியன் அறிந்தால், உனக்குத் துன்பஞ் செய்வான்" என்று சொல்லிச், சோழனை உத்தர வழிக்கொண்டு சென்று வைகையாற்றின் வடகரையளவும் போய், அவன் நெற்றியிலே விபூதி சாத்தி, "உட் கருத்துக்கேற்ப உனக்கு நல்ல துணையுண்டாகக் கடவது" என்று சொல்லி, அவனை விடுத்துத், திரும்பி வந்து, வடக்குவாயிற் கதவைப் பூட்டி, அதில் இடபக்குறியை இட்டுத் தமது விமானத்தில் எழுந்தருளியிருந்தார். சூரியன் உதிக்கும்பொழுது, வாயில் திறப்பவர்கள் வடக்கு வாயிற் கதவிலே இடபக்குறி இட்டிருப்பதைப் பார்த்து, ஐயங்கொண்டு, மற்றை வாயில்கள் மூன்றினும் விரைந்து போய்ப் பார்த்து, முதல் நாளிலே தாங்கள் இட்ட கயற்குறியே இருத்தல்கண்டு, குலபூடண பாண்டியனெதிரே சென்று வணங்கி, "மகாராசாவே! வடக்கு வாயிற் கதவிலே கயற்குறி மாற்றி, இடபக்குறி இடப்பட்டிருக்கின்றது; இட்டவர் யாவர் என்றறியேம்" என்றார்கள். உடனே பாண்டியன் வந்து பார்த்து, "இஃதோரற்புதம்! இம்மாயையைச் செய்ய வல்லவர் யாவர் என்றறிகின்றிலேன்" என்று ஐயங்கொண்டு, தன் மாளிகையை அடைந்து, போசனஞ் செய்யாது, தரையிலே

படுத்து, நித்திரை செய்தான். அன்றிரவு சோம சுந்தரக் கடவுள் பாண்டியனுக்குச் சொப்பனத் திலே தோன்றி, "பாண்டியனே! நம்மேல் வைத்த அன்பினாலே காஞ்சியிற் காடெல்லாம் வெட்டிய சோழராசன், நம்மை வந்து தரிசிக்க விரும்பினான். நாம் அவனை வடக்கு வாயி லைத் திறந்து அழைத்துக்கொண்டு வந்து தரிசனஞ் செய்வித்து, மீள்விடுத்துக் கதவைப் பூட்டி, நமது இடபக்குறியை இட்டோம்" என்று திருவாய் மலர்ந்து மறைந்தருளினார். பாண்டி யன் விழித்தெழுந்து, அஞ்சி, வெயர்த்து, விம்மி, அன்புக்கு எளிவந்த சிவபெருமானு டைய கருணையை நினைந்து, நினைந்து, அற்புத வெள்ளத்தினும் ஆனந்த வெள்ளத் தினும் அழுந்தினான். அழுந்தி மாளிகை யினின்று நீங்கிச் சிவபெருமானுடைய திரு விளையாடலை எல்லாருக்குந் தெரிவித்து, அவர்களையுந் தன்னைப்போல் ஆனந்த வெள்ளத்தழுத்தினான். பின்பு, தன் குமார னாகிய இராசேந்திர பாண்டியனுக்குத் தன் அரசைக் கொடுத்துவிட்டுத், தான் சிவபதத்தை அடைந்தான்.

## பாரெங்கும் போற்றும் கந்தன்!

சந்நிதியிலே வந்து சந்ததமும் தொழுவோர்க்கு
எந்நிதியும் தந்திடுவான் எழில் முருகன்! - அந்த
பன்னிருகை வேலவனை பணிந்து தொழுவோர்க்கு
இன்னருளைத் தந்திடுவான் இளங் குமரன்!

பூவரச மரத்தடியில் போற்றித் துதிப்பவர்தம்
பொல்லா வினையறுப்பான்! புகழ் பூத்தவன் - அங்கு
ஆவலொடு வந்தவனை அண்டி நிற்போர்க்கெல்லாம்
அபயம் அளித்திடுவான் ஆறுமுகன்!

வேல்வடிவில் வீற்றிருந்து விக்கினங்கள் போக்குகின்ற
வேழமுகன் சோதரன் எம் வெற்றிவேலன்! - தினம்
கால் பதித்து அவன் தலத்தில் கண்ணியமாய் தொழுவோர்க்கு
காட்சி தந்து ஆட்சி செய்வான்உமை பாலன்!

ஆற்றங் கரைதனிலே ஆலயங் கொண்டெங்கள்
அல்லல்கள் போக்குகின்ற அன்பு முகன்! - அந்தப்
பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனின் மருகன்
பாரெங்கும் போற்றும் உயர் கந்தன்! குகன்!

*-கி. குலசேகரன்-*

*நீங்கள் கடினமாகக் கருதும் விஷயங்களை பலர் சாதித்துக்கொண்டு இருக்கிறார்கள்.*

# உண்மையே இறைவன்

– திரு மு. செல்லத்தம்பி அவர்கள் –

இயற்கையின் நியதியால் தோன்றியதே இந்த உலகம். இந்த உலகத்தில் ஒருவர் மனத்தால் நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு எண்ணரிய உயிரினங்கள் வாழ்கின்றன. இந்த உயிரினங்கள் யாவும் இயற்கையின் பரிணாமமே. இந்த உயிரினங்களில் மனிதவர்க்கமே மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

ஆதிகாலத்தில் மனித இனம் பெரிதும் வளர்ச்சி அடையாத போதிலும், வெகு காலச் சுழற்சியின் பின்னே கண்டங்கள், நாடுகள், ஊர்கள் என்று படிப்படியாக பரந்துபட்டு முன்னேறி, பற்பல வடிவங்களில் பற்பல இயல்புகளோடு எண்ணற்ற தொகையில் வாழ்ந்து வருகின்றமை கண்கூடு. இந்த மனிதர்கள் யாவரையும் நல்லவர், தீயவர் என இரு வகையில் அடக்கலாம். அன்பு, நன்றி, கருணை என்னும் தூய பண்பைக் கொண்டவர்கள், உத்தமர்களாகவும், ஆசை, கோபம், களவு, கொலை, கள், காமம் என்னும் தீய செயல்களைச் செய்பவர்கள் இழிவானவர்களாகவும் வாழ்ந்து வருகின்றார்கள். இந்த இரு சாரார்களும் தத்தமது சாதக, பாதகச் செயல்களுக்கேற்ப பாவம், புண்ணியம் என்ற பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள்.

இங்கே பாவம், புண்ணியம் என்ற பெறுபேறுகளை இருசாராரும் பெறுவது எப்படி? நன்மைக்கும் தீமைக்கும் பரிகாரம் தீர்ப்பது எது? அப்படி தீர்ப்பு வழங்குவது ஒரு சக்தி அல்லவா? அந்தச் சக்திக்கு பெயர் இறையல்லவா?

“ஆசை, கோபம், களவு கொள்பவன் பேசத் தெரிந்த மிருகம்; அன்பு, நன்றி, கருணை உள்ளவன் மனித வடிவில் தெய்வம்'' என்பது திரைப்படப் பாடலாகும். தொடர்ந்து “இதில் மிருகம் என்பது கள்ள மனம்; உயர் தெய்வம் என்பது பிள்ளை மனம்; இந்த ஆறு கட்டளை அறிந்த மனது ஆண்டவன் வாழும் வெள்ளை மனம்” என்றும் “உள்ளதைச் சொல்லி நன்மையைச் செய்தால் உலகம் உன்னிடம் மயங்கும்; நிலை உயரும்போது பணிவு கொண்டால் உயிர்கள் உன்னை வணங்கும்” என்றும் கண்ணதாசன் பாடிய பாட்டு இங்கே நினைவு கூரத்தக்கது. உண்மையான மனதில் இறைவன் குடிகொண்டிருக்கின்றான். இதனால் அந்த மனம் மற்ற உயிர்களால் வணங்கப்படுகிறது. மதிக்கப் படுகிறது.

அடுத்து “குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று” என்னும் வாக்கியத்தையும் நாம் இங்கே நோக்கற்பாலது. பச்சிளம் குழந்தையைப் பாருங்கள். வெள்ளை மனம் கொண்ட பிஞ்சுக் குழந்தை, கள்ளம், கபடம், சூதுவாது யாதாயினும் தெரியாத நிலையில் குழந்தை மனம் நிறைந்திருக்கின்றது. இதையே நான் கடவுளைக் கண்டேன் என் குழந்தை வடிவிலே அவன் கருணையைக் கண்டேன் கொஞ்சும் மழலை வடிவிலே என்று கவிஞன் கண்ணதாசன் பாடிச் சென்றான்.

குழந்தைப் பருவம் மாற மாற நன்மை தீமை செயல்களில் ஈடுபாடு தொடங்குகிறது. நன்மை புரிந்து வாழ்வானாகில் அவன் இதயம்

*ஒரு மனிதனின் மதிப்பு அவனது குறிக்கோள்களைவிட பெரியது அல்ல.*

இறைவனுக்கு ஒப்பானது. இறைவன் அவனது இதயத்தில் குடிகொள்கிறான். இதனால் அவன் நினைப்பதும் சொல்வதும் அப்படியே நடக்கிறது. உண்மையே இறைமையின் உட்பொருள். உண்மை மனமே இறைவனின் வதிவிடம் ஆகிறது.

## கொடிய திருடன் முனிவன் ஆனான்

காட்டில் பாவ்யா என்ற கொடிய திருடன் இருந்தான். யார் காட்டு வழியாக வந்தாலும் தன் வில்லில் அம்புபூட்டி அவர்களைத் துடிக்கத் துடிக்கக் கொல்வான். அவர்களிடம் இருக்கும் பொருள்களை எடுத்துக்கொள்வான். அவனைப் பிடிக்க முயற்சி செய்தவர்கள் அவன் அம்புக்கு இரையானார்கள். அவனுக்கு அஞ்சி அந்தக் காட்டு வழியாக யாருமே செல்வது இல்லை. இன்று யாராவது கிடைக்கமாட்டார்களா என்ற எண்ணத்தில் கையில் வில்லுடன் புறப்பட்டான் பாவ்யா.

சிறிதும் அச்சமில்லாமல் தம்பூராவை மீட்டியபடி, “நாராயணா! நாராயணா!” என்று இறைவனின் திருப்பெயரைத் தன்னை மறந்து உச்சரித்தவாறு ஒருவர் எதிரில் வருவதைப் பார்த்தான் அவன்.

அவர் நாரதர் என்பது அவனுக்குத் தெரியாது. வில்லில் அம்பு பூட்டி அவருக்குக் குறி வைத்தான். ஆனால் அவரோ அச்சமோ தயக்கமோ இன்றி அருள்பொழியும் கண்களால் அவனைப் பார்த்துப் புன்முறுவல் செய்தபடி மெல்ல வந்தார். அவர் வாய் “நாராயணா” என்ற மந்திரத்தை உச்சரித்தபடி இருந்தது.

தன் கையில் வில்லையும் அம்பையும் பார்த்தவுடன் அஞ்சி ஓடுபவர்களையோ அல்லது தன்மீது பாய்ந்து தாக்கத் தொடங்கியவர்களையேதான் இதுவரை அவன் பார்த்து இருக்கிறான். அருள் பார்வையை வீசியபடி எதுவும் நடவாததுபோலத் தன்னை நோக்கி வரும் ஒருவரை வாழ்க்கையிலேயே அப்பொழுதுதான் முதல் முறையாகப் பார்த்தான். அவனால் வில்லை இழுத்து அவர்மீது அம்பைவிட முடியவில்லை. இனம்புரியாத சூழலில் தயங்கியபடியே நின்றான்.

“பாவ்யா! ஏன் வில்லை வளைக்கவில்லை?” என்று அன்பு ததும்பக் கேட்டார் நாரதர். “ஆரவாரம் ஏதும் இல்லாத உங்கள் அமைதியையும் அன்பையும் பார்த்து உங்களைக் கொல்ல எனக்கு உள்ளம் வரவில்லை” என்றான் அவன்.

நாரதரின் அன்பு உள்ளம் கொடிய முரடனையும் நல்லவனாக மாற்றியது. அவனுள் இறைவன் இருப்பதை உணர்ந்தார் அவர். அவனுக்கு நல்லவழி காட்ட நினைத்தார்.

“நான் சொல்லும் மந்திரத்தை இடைவிடாமல் சொல்லிக்கொண்டு வா. அந்த மகா மந்திரம் உன்னை உயர்ந்த நிலைக்குக் கொண்டு சேர்க்கும்” என்று நாராயண மந்திரத்தை அவனுக்குச் சொல்லித் தந்துவிட்டு அங்கிருந்து சென்றார் நாரதர்.

அவரின் அன்பு வலையில் கட்டுண்ட பாவ்யா அங்கேயே அமர்ந்தான். தன்னை மறந்த நிலையில் அந்த மந்திரத்தை உச்சரித்தபடி இருந்தான். ஆண்டுகள் பல சென்றன. அவனைச் சுற்றிப் பெரிய புற்று எழுந்து அவனை மறைத்தது.

ஞானம் பெற்ற அந்த வேடனே வான்மீகி முனிவர் எனப் பெயர் பெற்றார். இராமாயண காவியத்தை எழுதிப் புகழ் பெற்றார்.

*உங்கள் எண்ணங்களைப் பொறுத்து உங்கள் தரம் உயரும்.*

# வழித்துணை 46

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 புத்தகங்கள் படித்திடுதல் வித்தகங்கள் புரிந்திடுதல்
இவையெல்லாம் கல்வியினை வளர்த்தெடுக்க உதவிடும்தான்
ஆனாலும் அதைவளர்க்க மிகஉதவும் எதுவென்றால் ஒருவர்
உத்தமரின் உறவுகளை உள்ளத்தில் பேணுதலாம்.

02 பாட்டுக்கள் கேட்டிடுதல் பேச்சுக்கள் கேட்டிடுதல்
இவையெல்லாம் அறிவுதனை வளர்த்தெடுக்க உதவிடும்தான்
ஆனாலும் அதைவளர்க்க மிகஉதவும் எதுவென்றால் ஒருவர்
வீட்டுக்குள் பெற்றோரின் அறிவுரைகள் கேட்பதுவாம்.

03 துள்ளிக் குதித்திடுதல் துடுக்கோடு நடந்திடுதல்
இவையெல்லாம் இளம்பராய இலட்சணத்திற்குரியவைதான்
ஆனாலும் இணையில்லா இலட்சணமிங் கெதுவென்றால் ஒருவர்
பள்ளிக்குச் சென்றிடலும் படித்துயர்ந்து வளர்தலுமாம்.

04 ஓடிஓடிப் படித்திடுதல் ஓய்வின்றிப் படித்திடுதல்
இவையெல்லாம் படிப்பவரின் உயர்வுக்கு உதவிடும்தான்
ஆனாலும் அதியுயர இங்கேற்றவழி எதுவென்றால் ஒருவர்
தேடிப்படித்தவற்றை தினம் தினம் மீட்டிடலாம்.

05 வினாக்களை விளங்கிடுதல் விடைகளை எழுதிடுதல்
இவையெல்லாம் பரீட்சையில் சித்திபெற உதவிடும்தான்
ஆனாலும் விசேட சித்தி பெறஉதவும் எதுவென்றால் ஒருவர்
கனாக்காணும் நிலைவிடுத்துக் கண்விழித்துப் படித்திடலாம்.

06 கற்றுப் பெருமைசேர்த்தல் கற்பிப்போர்க்கு பெருமை சேர்த்தல்
இவையெல்லாம் மாணவரின் மகத்தான கடமைகள்தான்
ஆனாலும் மாணவர்க்கு பெருங்கடமை எதுவென்றால் ஒருவர்
இவன்பள்ளி எதுவென்று வியக்கும்படி நடந்திடலாம்.

*உங்கள் காயத்தின் உணர்வினை நிராகரியுங்கள். காயம் தானாக மறைந்துவிடும்.*

07 தித்திக்கத் தேன்குடித்தல் தெவிட்டாத பால்குடித்தல்
இவையெல்லாம் பலவானாய் ஆவதற்கு உதவிடும்தான்
ஆனாலும் மிகப்பலவான் ஆக்குவது எதுவென்றால் ஒருவர்
நித்தம்தான் படித்தவற்றால் புத்திமானாய் ஆவதுமாம்.

08 நடிப்போடு நாடகங்கள் நல்லபல பாத்திரங்கள்
இவையெல்லாம் கலைவளர்க்கக் காலத்தால் உதவிடும்தான்
ஆனாலும் உயர்கலைக்கு இங்குஉதவுவது எதுவென்றால் ஒருவர்
படிப்பதுபோல இங்கு நடிக்காமல் படிப்பதுவாம்.

09 குருவோடு தெய்வத்தைப் பெற்றோரைப் பணிந்திடுதல்
இவையெல்லாம் வாழ்வுயர வாய்த்திட்ட வழிவகைதான்
ஆனாலும் அதிஉயர ஏற்றவழி இங்கெதுவென்றால் ஒருவர்
கருவறையில் சுமந்தாளைக் காலமெலாம் பணிவதுவாம்.

10 சுகங்களை அனுபவித்தல் சொத்துக்கள் குவித்திடுதல்
இவையெல்லாம் சிறப்பான வாழ்க்கைக்கு அறிகுறிதான்
ஆனாலும் வாழ்க்கைக்கு மிகச்சிறப்பு எதுவென்றால் ஒருவர்
சகமனிதன் வாழ்வுக்கும் சந்தர்ப்பம் கொடுத்திடலாம்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ. இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க. இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*உன் பிரச்சினைக்கு வக்கீலாகும் நீ ஏன் அடுத்தவர் பிரச்சினைக்கு நீதிபதி ஆகிறாய்.*

# தேனிலுமினிய சங்கீதமதை ஊனினையுருக்குமாறு இனிக்கப் பாடியவர் அமரர் இசைமணி வ. செல்லத்துரை அவர்கள்

– திரு கே.எஸ். சிவஞானராஜா அவர்கள் –

இந்தியாவில் கே.பி. சுந்தராம்பாள் தேன் சொட்டப் பாடிக்கொடுத்த ஞானப் பழத்தையே பிழிந்து, சுவை குன்றாமல் இனிக்க இனிக்க இலங்கையில் இரசிக்கவும் ருசிக்கவும் பேறாக்கிய இசைவள்ளலே, வல்லி புரம் செல்லத்துரை என்ற பேராசான் ஆவார்.

இந்தியக் கலைஞர்களோடு சரிநிகர் சமானமாகச் சங்கீத மான்மியங்களைப் பகிர வல்ல ஓர் அற்புத இசைவாணர் அமரர் செல்லத்துரை ஆசானாவார்.

இராகம் தாளம் பல்லவி நிரவல் கற்பனாஸ்வரம் ஆகிய மனோ தர்மங்களோடு, கல்பித சங்கீதப் படிமங்களை ஒரே சீராக, நேர்த்தியாகச் சங்கீத அடுக்குகளோடு பாட வல்லவரும் இவரே என்ற முத்திரையைத் தனதாக்கிக் கொண்டவர்.

சுருதி லயம் பிசகாது, யாம் கருதிய உருப்படியை கச்சிதமாகப் பாடி சபாஷ் பல வற்றை சொந்தமாக்கியவர்.

நாட்டை, கௌளை, ஆரபி, ஸ்ரீராகம், வராளி ஆகிய ஐந்து ராகங்களிலும் அமைந்த பஞ்ச ரத்ன கீர்த்தனைகளை, அந்தந்த சாகித் திய பாவம் ததும்ப, இராக பாவம் தொனிக் குமாறு மனனமாக்கி ஆராதிக்கின்ற மூத்த இசைக் கலைஞராக விளங்கிய முதற்தர இசைச் சக்கரவர்த்தி இவராவார்.

அதிசிறந்த வானொலிக் கலைஞராக வும், தொலைக்காட்சி ஆற்றுகைக் கலைஞ ராகவும், ஆயிரம் இசைக் கச்சேரிகளை ஒப் பேற்றிய மேடைக் கலைஞராகவும், பண் ணிசை ஓதுவாராகவும், யாழ் பல்கலைக்கழக நுண்கலைக் கழக இசைத்துறை வருகைதர விரிவுரையாளராகவும், வெளிவாரி உள்வாரி பரீட்சகராகவும் சங்கீதபாட ஆசிரிய ஆலோசக ராகவும் தொண்டாற்றி, இசைத் துறைக்கு வரமாகியுள்ளார். அச்சுவேலியில் அமைந்த இல்லறம் இவரைப் புகழீட்ட வைத்தது. மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இவரது இசை அரங்கேற்றம் நடந்ததன் பேறாக, ஒன்பது மாகாணங்களிலும் இவரது ஞானப்பழத்திற்கு அதீத வரவேற்பும், அதிக வாய்ப்பும் கிடைத்தது. வலிகாமம் கிழக்குப் பேறடையுமாறு மிளிர இவரது சங்கீதம் வரமாகி உதவியது. கொல்லங்கலட்டியில் இருந்து கொழும்பு வரை இனங்களுக்கிடையே ஒரு உறவுக்கான கலைப்பாலத்தை உருவாக் கியவரும் இவராவார்.

அபூர்வராகங்களில் இவரது ஆட்சி யினால் தவில், நாதஸ்வரக் கலைஞர்களின் பரோபகாரம் இவருக்கு மாட்சியைக் கொடுத் தது. அவர்களின் தேடலுக்கு அமரர் விருந் தானார். மாவிட்டபுரம் திருப்பதியை நாதஸ்வர கான சாம்ராஜ்ஜியமாக்கிய நாதஸ்வர மேதை உருத்திராபதி அவர்களிடம் ஆரம்ப பாடங் களைக் கற்றுத்தேறியவராய், வட இலங்கைச் சங்கீத சபை பரீட்சைகளில் தோற்றியவராய் ஆறாந்தரத் தகைமையோடு, இந்தியாவுக்குச் சென்று, அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தில் முறையாகப் பயின்று, 1961ஆம் ஆண் டில் "இசைமணிப்" பட்டத்தினை முதற்தரச்

*அதிர்ஷ்டவான் மண்ணைத் தொட்டாலும் பொன் ஆகும்.*

சித்தியோடு தமதாக்கி இலங்கை வந்து ஆசிரிய சேவையில் இணைந்து சங்கீத பாட ஆசிரிய ஆலோசகராகப் பதவியில் உயர்ந்து சேவை புரிந்தார். கலாபூஷணம், கலைஞான கேசரி, ஆளுநர் விருது, ஓதுவார் மணி, திருவாசக மணி, கானாம்ருதபூஷணம், ஞானப் பழம் ஆகிய பட்டங்களைப் பேறாக்கிய மகிமையோடும் சாதனைபுரிந்த திருப்தியோடும், 21.04.2020 அன்று சிவபதம் அடைந்தார்.

**இரங்கல்:**

அமரர் இசைமணி வ. செல்லத்துரை அவர்கள் சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வுகளில் இடம்பெறும் இன்னிசைக் கச்சேரிகளிலும், பேரவையின் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதிலும் முன்னின்று உழைத்த பெருமகனாவார். 21.04.2021இல் வரும் அன்னாரது முதல்வருட இரங்கலில் சைவ கலை பண்பாட்டுப் பேரவையினராகிய நாமும் பங்கு கொள்கின்றோம். *-பேரவையினர்-*

## இறுதி மூச்சுவரை உன் பணியே

ராம லட்சுமணர்கள் சுக்ரீவன் உள்ளிட்ட வானரசேனை அத்துடன் பராக்கிரம அனுமன் இத்தனைபேரும் ஒன்றுகூடி ராவணேஸ்வரன் பிடியிலுள்ள சீதையை எவ்வாறு மீட்பது என்று ஆலோசித்தனர். சுக்ரீவன் வானரங்களை திசைக்கொருவராய்ச் செல்ல உத்தரவிட்டான். பின் அனுமனைப் பார்த்து பலம், புத்தி, நன்னெறி, இடத்திற்கும் காலத்திற்கும் உகந்த வண்ணம் நடத்தல் ஆகிய எல்லாக் குணங்களும் கொண்டவரே சீதையை மீட்கும் வழியைச் சொல்லுங்கள் என்றான். சுக்ரீவனின் வார்த்தைகளும் அனுமனின் தோற்றமும் ஸ்ரீ ராமபிரானுக்கு இவரே தம் காரியத்தை முடிக்க வல்லவர் என்ற எண்ணத்தைத் தந்தது. உடனே தனது மோதிரத்தை ஓர் அடையாளமாக ராமன் அனுமனிடம் அளித்தார். தன் பிரபுவின் எண்ணப்படியே சீதையைக் கண்டு நல்ல சேதியுடன் ராமரிடம் வந்து அவரது விஸ்வாசமான வேலைக்காரனாக அனுமன் ஆனான்.

எஜமானன் அளிக்கும் வேலையை ஒருவன் சிரத்தையாகச் செய்யும் அளவிற்கு உண்மையான வேலைக்காரனாக ஆகலாம். இறைவனுடைய பணிகளில் நம்மை ஆர்வத்துடன் ஈடுபடுத்திக்கொண்டு அதற்கென்றே நாம் உழைக்கவேண்டும். இவ்வாறு செய்யச் செய்ய நமது மூச்சும் பேச்சும் அவனது வேலைகளைப் பற்றியதாகவே இருக்கும். இதன் பலன் என்ன தெரியுமா? நாம் அவனது வேலைக்காரனாகி விடும்போது அவனை வேலை வாங்கவே மாட்டோம். இறைவன் வருவதும் தெரியாது, நமக்காக வேலை பார்ப்பதும் தெரியாது. அப்படி ஒரு நிலை இது. இரு எடுத்துக்காட்டுக்களைக் காணலாம்.

சிறந்த பக்தர் தனது கிழிந்த துணியைத் தைக்கிறார். அவரது குணத்தில் மகிழ்ந்து சிவனும் பார்வதியும் பக்தருக்கு தரிசனம் தந்து ஏதாவது வரம் கேட்கும்படி அவரிடம் கூறுகின்றனர். அவர் எனக்கு எதுவுமே வேண்டாம் என்றாலும் இறைவனும் இறைவியும் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றனர் வரம் கேட்குமாறு. நான் தைக்கும்போது ஊசியின் பின்னாலே நூலும் வரவேண்டும்- இது பக்தர் கேட்ட வரம். இறைவன் சிரித்தவாறே ஊசியின் பின்னால் நூல் வரத்தானே செய்யும். இதற்கு எதற்கு வரம்? என்று கேட்டார். பக்தர் கூறினார், இந்த உலகில் எல்லாச் செயல்களும் உங்கள் இச்சைப்படியே நடக்கும்பொழுது எனக்கு எதற்கு வரம்? பின் சிவ பார்வதி தம்பதியினர் புன்னகைத்தவாறே மறைந்தனர். இன்ப துன்பங்களைக் கடந்த நிலை இது. மற்றொரு கதை அம்பிகை தனது பக்தன் ஒருவனுக்குக் காட்சி கொடுத்து வரம்கேட்குமாறு கூறினாள். என் வலது காலில் உள்ள வீக்கத்தை இடது காலுக்கு மாற்று என்றான் பக்தன். இதெல்லாம் என்னால் முடியாது. வேறு வரம் கேள் என்று கூறினாள் அன்னை. பக்தன் சிரித்தவாறே வேறு வரம் எனக்கெதற்கு எனக்கென்று உள்ளதை நான் அனுபவித்துத்தானே தீரவேண்டும் என்றதும் தனக்கு இனி வேலையில்லை என்றெண்ணியவாறே அங்கிருந்து அம்பிகை அகன்றாள்.

*விவேகம் எச்சரிக்கும் அதிவேகம் செயற்படும்.*

# அநுமானும் சனீஸ்வரனும்

– திரு வி. செல்வரத்தினம் அவர்கள் –

ஒரு சமயம் அநுமான் இராமேஸ்வரத்தில் அமர்ந்திருந்து இராமநாம ஜெபம் செய்து கொண்டிருந்தார். அது மாலை நேரம். அந்த நேரம் சனீஸ்வரபகவான் அங்கு வந்து சேர்ந்தார். அநுமானை உற்றுப் பார்த்தார்.

சனீஸ்வரனுக்குத் தன் பலத்தைப் பற்றி அகந்தை அதிகம். தன் பலத்தைப்பற்றிப் பலவிதமாகப் பலருடன் பேசுவதில் இன்பங் காண்பார். தன்னுடன் யாரும் சண்டை பிடித்து வெல்ல முடியாது என்று கர்வம் கொண்டிருந்தார்.

அநுமானைப் பார்த்தவுடன் அவருடன் சண்டைபிடிக்க வேண்டும் என்று அவரது மனம் துடித்தது. உடனே அநுமானிடம் போய், "ஏய் குரங்கே! நீ மிகவும் பலத்தை உடையவன் என்று கேள்விப்பட்டேன். தற்போது உனக்கு முன்னே மிகவும் பலத்தை உடையவனாகிய சனீஸ்வரன் வந்து நிற்கிறேன். ஆனால், நீயோ கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறாய். உன்னால் முடியுமானால், என்னுடன் சண்டைக்கு வா பார்க்கலாம். உன்னைப் பந்துபோலத் தூக்கி எறிவேன்" என்றார்.

அநுமான் தன் கண்களை மெல்லத் திறந்தார். சனீஸ்வரன் நிற்பதைப் பார்த்து, "ஐயா பெரியவரே! தாங்கள் யார்? எதற்காக என்னை இவ்விடத்திற்குத் தேடி வந்தீர்கள்?" என்று கேட்டார்.

அதற்குச் சனீஸ்வரன் இறுமாப்புடன், "நான்தான் அதியுயர்ந்த பலசாலியான சனீஸ்வரன். எனக்கு உடம்பு துடிக்கிறது. உன்னோடு சண்டை பிடிக்கவே இங்கு வந்திருக்கிறேன். சண்டைக்கு உடனே வா" என்று பலத்த சிரிப்புடன் கத்தினார். அதற்கு அநுமான் மிகவும் தயவாக, "ஐயா! நான் வயதானவன். சண்டை பிடிப்பதற்கு என்னிடம் பலம் இல்லை. நீ இளம் ஆள். எப்படியோ நீதான் வெல்வாய். அத்துடன் இராம தியானத்தில் நான் இருக்கிறேன். ஆகவே தயவுசெய்து இந்த இடத்தை விட்டுப் போய்விடு" என்றார்.

அதற்குச் சனீஸ்வரன், "அது முடியாது. நான் முன் வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன். ஸ்ரீ ராம ஜெபம் செய்ய வேண்டாம். நான் உன்னுடன் சண்டை பிடிக்காமல் திரும்பமாட்டேன்" என்றார். அதற்கு அநுமான் எவ்வளவோ மன்றாடிச் சொன்னார். "என்னால் உன்னுடன் சண்டை பிடிக்கப் பலம் இல்லை. யாராவது பலசாலியுடன் போய்ச் சண்டை பிடித்து ஆசையைத் தீர்த்துக்கொள்" என்றார். ஆனால், சனீஸ்வரன் அவரை விடுவதாக இல்லை.

சனீஸ்வரனுக்குக் கடும் கோபம் வர அநுமானை நெருங்கி, "வா சண்டைக்கு," என்று சொல்லி அநுமானின் கையைப் பிடித்து இழுத்தார். உடனே அநுமான், தன் வாலினால் சனீஸ்வரனைச் சுருட்டி வைத்துக்கொண்டார். சனீஸ்வரன் எவ்வளவோ முயற்சி செய்தும் அவரது பிடியிலிருந்து தன்னை விடுவிக்க முடியவில்லை. வலி தாங்க முடியாமல் மிகக் கஷ்டப்பட்டுக் கதறி அழுதார். சனீஸ்வரன் அழுவதைக் கவனத்தில் எடுக்கவேயில்லை அநுமான். இதேநேரம் அநுமானுக்கு இராமேஸ்வர ஆலயத்தை வலம் வரும் நேரம்

நெருங்கிவிட்டது. வாலினால் சுற்றி வைத்திருந்த சனீஸ்வரனையும் சேர்த்து வைத்துக் கொண்டு வலம் வரத் தொடங்கினார். தன்னை விடுவிக்கும்படி சனீஸ்வரன் எவ்வளவோ கெஞ்சி மன்றாடிக் கேட்டும் அநுமான் விடவில்லை. வலம் வந்துகொண்டேயிருந்தார். பாவம்! சனீஸ்வரனுக்கு வீதியில் இருந்த கற்கள் பட்டு உடம்பு முழுவதும் காயம் ஏற்பட்டது. இரத்தம் பெருகத் தொடங்கியது. "அநுமான்! நான் உன்னிடம் தெரியாமல் வந்துவிட்டேன். உன்னிடம் வந்தது என் குற்றம் தான். என்னை மன்னித்துவிடு. தயவுசெய்து என்னை விட்டுவிடு. இனிமேல் ஒருபோதும் உன்னிடம் வரமாட்டேன். சண்டை பிடிக்கவும் மாட்டேன்" என்றார் சனீஸ்வரன்.

அநுமான் வலம் வருவதை நிறுத்தி விட்டு சனீஸ்வரனைப் பார்த்து, "ஒரு நிபந்தனையின் பேரில் உன்னை விடுதலை செய்ய நான் தயாராக இருக்கிறேன்" என்றார். உடனே சனீஸ்வரன், "அந்த நிபந்தனையை ஏற்கத் தயாராக இருக்கிறேன்" என்றார். இதுதான் அந்த நிபந்தனை. "என் பக்தர்களை எக் காரணம் கொண்டும் பிடிக்கமாட்டேன் என்று எனக்கு ஒரு வாக்குத் தரவேண்டும். அப்படியானால் உன்னை நான் விடுவிப்பேன்" என்றார். அதற்கு சனீஸ்வரன், "ஆம் பிரபு! தாங்கள் சொன்னபடியே செயற்படுகிறேன். நான் இனிமேல் உங்கள் பக்தர்களை ஒருபோதும் நெருங்கமாட்டேன்" என்று வாக்குக் கொடுத்தார். அதன் பின்னர் அநுமான் சனீஸ்வரனை விடுவித்தார்.

சனீஸ்வரனின் உடம்பெல்லாம் காயமாக இருந்தது. தன் காயங்களுக்குத் தடவிக்கொள்ள எண்ணெய் தரும்படி சனீஸ்வரன் அநுமானைக் கேட்டார். அநுமானும் சனீஸ்வரனுக்கு எண்ணெய் கொடுத்தார். சனீஸ்வரனுக்கு எண்ணெய் கொடுக்கும் வழக்கம் அன்றிலிருந்தே ஏற்பட்டதாகப் புராணங்கள் கூறுகின்றன.

மேலும், மாதந்தோறும் வரும் கடைசிச் சனிக்கிழமை அன்று ஒரு பிடி அகத்திக் கீரையைக் கறுப்புப் பசு மாட்டுக்குக் கொடுத்து வந்தால், சனீஸ்வரனுக்கு மிகவும் பிடிக்கும். அவரால் ஏற்படும் கஷ்டங்கள் மிகவும் குறைவாக இருக்கும். மேலும் எம்மை சனீஸ்வரன் பிடித்திருக்கும் காலத்தில், அநுமானை வணங்கி வந்தால் சனீஸ்வரனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறையும்.

---

ஒழுக்கம் என்பது சமூகத்துக்குச் சமூகம் மாறுபடக்கூடியது. காரணம் சமூகத்தினால் நிர்ணயிக்கப்படுவதுதான் ஒழுக்கம் என்பதாகும். ஒரேயொரு மனிதன் மட்டும் ஒரு தீவில் வாழ்ந்துகொண்டிருந்தால், அவனுக்கு மட்டுமென்று என்ன ஒழுக்கம் இருக்க முடியும்? ஒருவரை இன்னொருவருடன் ஒப்பிடும்போதுதான் ஒழுக்கம் என்பது ஒரு நெறியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. உதாரணமாக, "அடுத்தவன் பொருளைத் திருடாதே", "பொய் சொல்லாதே", "மற்றவரை ஏமாற்றாதே" என்று கூறும்போது இங்கே ஒப்பிடுவதற்கு இரண்டாமவர் தேவைப்படுகிறார். ஆனாலும் நமக்கு மற்றவர் எதைச் செய்யக்கூடாது என்று எதிர்பார்க்கிறோமோ அதை நாம் பிறருக்கும் செய்யக்கூடாது என்று வாழ்ந்தாலே முக்கியமாகும். ஏனெனில் தனிமனித வாழ்வில் மிக ஒழுக்கசீலர்களாக வாழ்பவர்கள் பல பேர் பொது வாழ்வில் மிக மோசமானவர்கள். உதாரணமாக ஹிட்லரும், ஜென்கிஸ்கானும் புகைப்பிடிக்கமாட்டார்கள், மது அருந்தமாட்டார்கள், பிற பெண்கள்மீது மோகம் கொள்ளமாட்டார்கள். ஆனால் ஈவிரக்கம் இல்லாமல் பல்லாயிரம் பேரைக் கொன்றார்கள். இவர்கள் தவறாமல் நாள்தோறும் வழிபாடுகூட செய்வார்களாம். ஆனால் மனித குலத்திற்கு இவர்கள் இழைத்த அநீதிகள் கணக்கிலடங்கா. எனவே ஒழுக்கம் என்பது தனக்கு மட்டுமல்ல என்பதை மறந்துவிடக்கூடாது.

தத்துவஞானிபோல் பேசுவதும், எழுதுவதும் எளிது. ஆனால் சந்தர்ப்பத்தில் அறிவோடு நடப்பது என்பதுதான் கஷ்டமான விடயம்.

*மற்றவர்களின் எதிர்மறையிலிருந்து உங்களது உற்சாகத்தைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| க. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 1புட்டி பருப்பு |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 20000. 00 |
| இ. சிவராஜா | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| த. புவனேஸ்வரி | கனடா | 5000. 00 |
| தி. யதுகாஷினி | தோணிக்கல் | 1000. 00 |
| திரு முத்துக்குமாரசாமி குடும்பம் | கொழும்பு | 1000. 00 |
| மு. வியாசன், வி. சற்சனன் | கொழும்பு | 1000. 00 |
| வல்லிபுரம் நவமணி நினைவாக வ. சத்தியேந்திரா மூலம் | கொழும்பு | 30000. 00 |
| முருகன் அடியார் | கோண்டாவில் | 3000. 00 |
| கடவுள் | இணுவில் | 10000. 00 |
| பா. சாயித்தியா | சிறுப்பிட்டி | 5000. 00 |
| ஜெ. சௌந்தலாதேவி | கனடா | 5000. 00 |
| ஆ. பார்த்தீபன் | உரும்பராய் | 2000. 00 |
| S.T.R. தியாகராஜா | கொழும்பு | 5000. 00 |
| S. பிரவீன் | சுவிஸ் | 1000. 00 |
| செல்வநாயகம் சறோஜினிதேவி | வல்வெட்டித்துறை | 2000. 00 |
| K. சண்முகானந்தம் குடும்பம் | தொண்டைமானாறு | 1000. 00 |
| R. வசந்தகுமார் | லண்டன் (பத்தமேனி) | 7000. 00 |
| ப. நிகில் | சாவகச்சேரி | 5000. 00 |
| K. மாலினிதேவி | கனடா | 20000. 00 |
| A. சங்கீதா | வல்வெட்டித்துறை | 4500. 00 |
| S. ஆதீஷன் | வட்டுக்கோட்டை | 3000. 00 |
| சந்திரப்பிரகாசம் யதுகுலன் | பருத்தித்துறை | 5000. 00 |
| பி. கோமதி | பண்ணாகம் | 1000. 00 |
| வ. ஆறுமுகம் | ஆவரங்கால் | 5000. 00 |
| Dr சுதோகுமார் | கரவெட்டி | 2000. 00 |
| அ. பரமநாதன் | அளவெட்டி | 2000. 00 |
| சு. சஞ்சீவன் | நீர்வேலி | 1000. 00 |
| பரமேஸ்வரி அச்சுதானந்தன் | வல்வெட்டித்துறை | 4000. 00 |
| தான்சி பிரகாஸ் | கனடா | 5000. 00 |

| | | |
|---|---|---|
| சி. செல்லையா | கரவெட்டி | 1000. 00 |
| திரு கிருஷ்ணபாபு | துன்னாலை | 25000. 00 |
| ஆ. சிவநாதன் | நெல்லியடி | 1000. 00 |
| செ. பிரவீன் | சுவிஸ் | 20000. 00 |
| வி. புருஷோத் | திருகோணமலை | 5000. 00 |
| ம. ஸ்ரீதரன் | அச்சுவேலி | 1000. 00 |
| G. யஷ்மிதா | நீர்வேலி | 1000. 00 |
| வி. தயாபரன் | நீர்வேலி | 500. 00 |
| கு. கனகராசா, ந. குணசேகரம் நினைவாக | உரும்பராய் | 1மூடை அரிசி |
| A. கெங்காதரன் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| க. யோகேந்திரம் குடும்பம் | வதிரி | 5000. 00 |
| த. பாலசோபா | கனடா | 5000. 00 |
| க. சுப்பிரமணியம் | மிருசுவில் | 10000. 00 |
| வி. பிரதீபன் | இணுவில் | 1000. 00 |
| சி. வேணிலா | இணுவில் | 1000. 00 |
| S. கமலசிங்கம் | யாழ்ப்பாணம் | 2000. 00 |
| R. அபிராமி | லண்டன் | 6000. 00 |
| C. ஜோஜி | லண்டன் | 1200. 00 |
| S. செல்வா | அச்சுவேலி | 5000. 00 |
| அ. சிவராசா | கோண்டாவில் | 10000. 00 |
| திருமதி இரத்தினம் | சாவகச்சேரி | 5000. 00 |
| S. சிவகுருநாதன் | அரியாலை | 3000. 00 |
| சி. கமலாதேவி (சிவபூமி முதியோர் இல்லம்) | சுழிபுரம் | 5000. 00 |
| S. மனோகரன் | திருநெல்வேலி | 50 கனேடியன் டொலர் |
| நா. நவநீதன் | இணுவில் | 1000. 00 |
| திரு பரதநேசன் குடும்பம் | மூளாய் | 5000. 00 |
| S. சற்குணநாதன் | அச்சுவேலி | 5000. 00 |
| ம. விஜயசுந்தரம் | கனடா | 5000. 00 |
| சு. குகனேஸ்வரி | அராலி வடக்கு | 1000. 00 |
| த. லோகேஸ்வரி | ஆவரங்கால் | 1000. 00 |
| பூ. தம்பிராசா | வல்வெட்டி | 5000. 00 |
| ச. வேல்நாதன் | மயிலிட்டி வடக்கு | 5000. 00 |
| S.P. நாதன் | கனடா | 1000. 00 |
| கி. சிவலிங்கம் | கரவெட்டி | 1000. 00 |
| சி. கனகம்மா | சிறுப்பிட்டி | 500. 00 |
| Dr R. ராமச்சந்திரன் | வல்வெட்டித்துறை | 5000. 00 |
| சு. அக்ஷரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சொ. ஜெயக்குமார் | சுன்னாகம் | மரக்கறி 2புட்டி அரிசி |

(தொடரும்...

*அன்பான பழைய நண்பர்கள் மிக அதிக மதிப்புமிக்கவர்கள்.*

# இயற்கையும் மாயைகளும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

இயற்கையென்றால் விதிகளுக்குட்பட்டது. மாயை என்றால் விதிகளற்றது. மேலும் இயற்கை விதிகளுக்குட்பட்டதால், மனித அறிவினால் அறிந்துகொள்ளக்கூடியதாக உள்ளது. மாயை வரைவிலக்கணப்படுத்தக் கூடிய விதிகளற்றதால், மனித அறிவினால் அறிந்துகொள்ள முடியாதுள்ளது. அதாவது படைப்பையும் பரிணாமத்தையும் ஆராய்ந்து அறிந்து செல்கையில் எமது அறிவினால் அறியமுடியாத ஒரு நிலையேற்படுகின்றது. அது அணுக்களின் தோற்றம், வெறுமையில் இருந்து கண்களுக்குத் தெரியாத அறிவினால் அறியமுடியாத மாய வடிவத்தில் இருந்து இப்பிரமாண்டமான படைப்புக்கள் அனைத்துக்குமான அடிப்படை அணுக்களே ஒரே மூலத்தில் இருந்து வேறுபாடான பஞ்ச பூதங்கள் உருவாகி, பஞ்ச பூதங்களில் இருந்து, உயிரினங்கள் உருவாகி பல்வேறு உயிரினங்களாகப் பரிணாமமடைந்து, மரபணுக்கள் மூலம் இறுதி செய்யப்பட்டது மட்டுமல்லாமல் மனிதர்களின் மொழியாற்றல் மற்றும் அறிவியல்களால் பல்வேறு மரபுகளும் ஏற்படக் காரணமானது.

எனவே இயற்கை ஒரே மூலத்தில் இருந்து பல்வேறாகப் பரிணாமமடைந்தாலும், மரபணுக்களை வேறுபாடாகக் கொண்டிருந்தாலும், ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தக் கூடியதாகவும் தொடர்ச்சியாகவும், பிறந்து இறந்து தொடர்புகள் அற்று அழிந்துபோகாத வகையில் ஒவ்வொரு உயிரினங்களும் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றது. எனவே இறைவன் இடையீடு செய்து படைப்புக்களை படைக்காதது மட்டுமல்ல, மீண்டும் படைப்புக்களைச் செய்யும்போது, புதிதாக பரிணாமமடையச் செய்வதே மீண்டும் படைப்புக்களை படைப்பான் என்பதும் ஆய்வு ரீதியாக நிறுவப்படுகின்றது.

அதாவது உயிரினம் ஒன்று தனது தொடர்ச்சியை இழந்து அழிந்து விட்டாலும், மனிதனால் அந்த உயிரினத்தின் மரபணுவில் இருந்து கருவை உருவாக்கி, மீண்டும் அந்த உயிரினத்தையே உருவாக்க முடியும் என்பது மாயாஜாலப் படைப்பல்ல என்பதுவும் இயற்கை விதிகளுக்குட்பட்டது என்பதும் மனித அறிவினால் கண்டுபிடிப்புக்கள் செய்யக்கூடியது என்பதும் எந்தச் சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபணம் ஆகின்றது.

எவ்வாறாயினும் மனிதன் இயற்கையிடம் இருந்து பெற்றுக்கொண்ட பரிணாம விதியுடன் கூடிய மனிதனது அறிவும் இயற்கையால் உருவான மூளைமூலமும் மட்டுமே அவனால் இவற்றைச் சாத்தியப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. தவிர அவனால் இயற்கையிடமிருந்து எதையும் பெற்றுக் கொள்ளாமல் வெறும் கைகளால் படைப்புக்களைச் செய்ய முடியாது. முடிந்தால் அது மாயை. எனவே இயற்கை இறைவன் செயல் என்பதும் அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதும் புலனாகின்றது.

இவ்வாறு இருந்தபோதும், சித்தர்கள் "காயமே பொய்யடா இது காற்றடைத்த பையடா" என்று பாடியிருப்பது, பஞ்சபூதங்களால் உருவான இந்த உடலை மாயை என்று உணர்த்தியிருக்கின்றமை, நீண்ட

*பதவிக்கான தகுதியை வளர்த்துக்கொண்டாலே பதவி தேடி வந்துவிடும்.*

பார்வையில் எமது வாழ்வு நீர்க்குமிழி போன் றது என்பதையே அறிவுறுத்தி நிற்கின்றன. அதேபோல் பஞ்சபூதங்களும் அழிந்து போகக் கூடிய நீர்நிலை போன்றதே ஆனால், ஆன்மா அழியாது மாய வடிவில் தொடர்ந்து வாழக் கூடியது. மேலும் இறைவனும் பஞ்ச பூதங் களால் உருவான, உடலையும் உருவத்தை யும் கொண்டவனல்ல, மாறாக மாய வடிவில் ஞான ஒளியாக இருக்கின்றவன். தவிர உரு வங்கள், பார்ப்பதற்கும், தொடுவதற்கும், மணப் பதற்கும், உண்பதற்கும் உருவாக்கப்பட்டவை. இந்த வகையில் கண்கள் மட்டுப்படுத்தப்பட்ட பார்வையைத்தான் தரும். இறைவனுக்கு இருப்பது ஞானக்கண். அதுபோல் கைகள் எமது உடல் தேவைகளை நேரடியாக நிறை வேற்றிக்கொள்வதற்கு இறைவனுக்கு உட லும் இல்லை; உடல் தேவைகளும் இல்லை; அவனுக்கு மனம் மட்டுமே உண்டு. அவன் திட்டமிட்டபடியே தானாக எல்லாம் நடை பெற்றுக்கொண்டு இருக்கின்றது. அவன் கைகளை அசைத்து எதையும் செய்ய வேண்டிய தேவையும் இல்லை. கால்களால் நடந்து திரிந்தும் எதையும் செய்யவேண்டிய தேவையும் இல்லை. ஆகவே இறைவனும் ஆன்மாக்கள்போல் உருவமற்ற மாய வடி வுடனே ஞான ஒளியாக இருக்கின்றான் என் பதும் புரிந்துகொள்ளக்கூடிய தர்க்க விவாத மாகும். எவ்வாறாயினும் எனது கருத்துக்களை யாராவது மறுப்பதாக இருந்தால் மறுக்கலாம். ஆனால் இறைவனுக்கு உயிரினங்களுக்கு இருக்கும் உருவம்போல் உருவம் இருப்பதாக வாதாட எந்த நியாயமும் இல்லை என்பது ஆணித்தரமாக உறுதியாகின்றது.

இந்து மதம் மட்டுமே இறைவனுக்கு உருவமில்லை என்று சொல்கின்றது. ஆனா லும் எமது எண்ணத்தில் உருவத்தையேற் படுத்தி இயற்கையின் பல்வேறு உருவங்களை இறைவனாக வழிபடுவதால், இறைவனுக்கு எந்த மனக்குறையையும் ஏற்படுத்தாது. கார ணம் அவனுக்கு உருவமிருந்து நாம் வேறு உருவங்களை வழிபட்டால் அது தவறுதான். ஆனால் இறைவனுக்கு உருவமில்லாதபோது, எந்த உருவத்தில் வழிபட்டாலும், அவன் (இறைவன்) தன்னை அவமானப்படுத்துவதாக எண்ண எந்த முகாந்திரமும் இல்லை. உதார ணம் ஒருவருடைய உருவம் பலருக்கு தெரி யக்கூடியதாக இருந்து வேண்டுமென்றே மாற்ற மான உருவங்களை வரைந்து காட்சிப்படுத் தினால் அவரை அவமானப்படுத்துவதாக இருக்கும். ஆனால் இல்லாத இறைவனின் உருவத்திற்கு கற்பனையில் அடையாளத்தை ஒவ்வொருவரும் வெவ்வேறு உருவங்களை ஏற்படுத்தினாலும் நம்பிக்கை ஒன்றாக இருக் கும்போது, எந்தக்கெடுதலும் இல்லை, கார ணம் இறைவன் ஒருவன் என்பதை ஏற்றுக் கொள்ளாதவர் உலகில் இல்லை.

இவ்வாறு இயற்கையையும் மாயை யையும் இறைவனையும் ஆன்மாக்களையும் நாம் தெளிவாகப் பார்த்தபோதும், இயற்கை யில் இடையீடு செய்கின்ற மாயைகளும் இயற்கைக்கு முற்றிலும் மாற்றமாக செயற் படக்கூடிய மாயைகளும் இல்லாமல் இல்லை. ஆக இவை பற்றி ஆய்வு செய்வதே இக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

வானில் பறவைகள் பறப்பது இயற்கை. மனிதன் பல்வேறு கருவிகள்மூலம் வானில் பறப்பது செயற்கை. ஆனால் மனிதன் வெறும் கைகளை அசைத்து வானில் பறப்பதும் வெறுங் கால்களால் வானத்தில் ஏறி நடப் பதும் மாயை. ஆக இதுவே இயற்கைக்கு முற்றிலும் எதிர்மாறான மாயை, எவ்வாறா யினும் மாயை பற்றிய விளக்கம் ஏற்படுத்து வதற்கு இதைச் சொன்னாலும், இதில் உண்மையில்லாதது போலத் தெரிந்தாலும்

*நமக்கான எல்லா வாய்ப்புகளும் நம்மைச் சுற்றியே உள்ளன.*

ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய மாயைகள் எனத் தனிப்பட்ட வாழ்விலும் பலமுறை இடம் பெற்று இருக்கின்றது, அவை மனக்குழப் பத்தை ஏற்படுத்திவிடக் கூடும் என்பதால் அவற்றைத் தவிர்த்து பொதுவாக நாம் அன்றாடம் பல்வேறு வகையில் அறிகின்ற, இயற்கையில் இடையீடு செய்யும் மாயை களைப் பார்ப்போம். முக்கியமாக தாவரமுட் பட, உயிரினங்கள், மரபணுவை அடிப்படை யாகக் கொண்டே வளர்கின்றன. ஆனால் சில மரங்கள் மற்றும் அதன் காய் கனிகளில் கடவுளர்களின் உருவங்கள் ஏற்படுவதைப் பலமுறை பலரால் பார்த்திருக்க முடியும். இவ்வாறு இயற்கையாக பிறவியில் குறை பாடாகப் பிறந்து, வைத்தியர்களால் கைவிட்ட வர்கள்கூட, இந்த மாயா சக்திகளின் அற்புதங் களால் சுகமடைந்தும் இருக்கின்றார்கள். இவ்வாறு பல கலைகள் இன்று பெரும்பாலும் அருகிவிட்டது. முக்கியமாக பாம்புக் கடிக் கான மாயாஜால மருத்துவம் இவ்வாறு பல இருக்கின்றன. மேலும் சில சித்தர்கள் தமது தவ வலிமையால், இயற்கையாக, சாதாரண மாக வாழும் காலத்தைவிட பல மடங்கு காலம் வாழ்ந்திருக்கின்றமை, இன்றும் இமய மலைகளில் வாழ்கின்றமை உட்படச் சில சித்தர்கள் சமாதியடைந்த பிற்பாடும் அவர்கள் உடல் அழியாது இருப்பதுவும் இயற்கைக்கு மாற்றமான அற்புதங்களேயாகும்.

மேலும் வேதங்கள்கூட இயற்கை அறிவுக்கு மாற்றமான அற்புதங்களாகக் கரு தப்பட்டாலும்கூட, இயற்கையில் இருக்கின்ற முரண்பாடுகள், அறிவு அறியாமை, மற்றும் நன்மை தீமைகளில் இருந்து, பாதுகாத்து வாழக்கூடிய மனிதரை ஒழுங்குபடுத்தக்கூடிய, அரசியல் அமைப்பாகவும், வாழ்வியல் சட்டங்களாகவும், மருத்துவக்கலைகளாகவும், சுகாதார வழிகாட்டல்களாகவும் இன்னும் பல்துறை அம்சங்களை உள்ளடக்கிய தொகுப்பு நூல்களாகவும் இருந்தபோதும் இன்று இயற்கையான மனித அறிவில் இருந் தும் அரசியலமைப்புக்கள் மற்றும் வாழ்வியல் சட்டங்கள், மருத்துவ சுகாதார வழிகாட்டல்கள் எனப் பல நூல்கள் உருவானபோதும் வேத காலத்தில் வேதங்களுக்கு நிகரான நூல்கள் இருந்ததில்லை. இன்று வேதங்கள் பயன் பாட்டில் இல்லை. புனிதமாகப் போற்றப்படு கின்றது. ஆனால் புராண இதிகாசங்கள் அதி கம் மாயாஜாலக் கற்கைகளால் உருவாக்கப் பட்டாலும், ஆழமான அறிவியல் அற்புதங்கள் நிறைந்தவை. உதாரணம்; அன்றைய வாழ் வியல் நடைமுறையில் இல்லாத, இன்றைய அறிவியல் கண்டு பிடிப்புக்களையே, கற் பனையில் தீர்க்கதரிசனமாக சொல்லியிருப் பது இயற்கை அறிவுக்கு மாற்றமான அற் புதங்களேயாகும். அதாவது இந்துக் கடவுளர் களிடம் இருப்பது பாரம்பரிய சாதாரண ஆயுதங்கள். அதில் இருக்கும் மெய்ஞான சக்திகளை, விஞ்ஞானமாக மாற்றக்கூடியதாக எதிர்வு கூறல்கள் பல இருக்கின்றன. வான வியல் மற்றும் இன்றைய தொழில்நுட்பங்கள் பலவற்றுக்கு அடிப்படையாகவும் இருக் கின்றது.

எவ்வாறாயினும் இயற்கையே இறை வன் செயல், மேலும் படைப்பு பரிணாமத்தால் உருவானமையால் தொடர்ச்சியான இயக்கம், இறைவன் இடையிட்டு எதையும் செய்வது இல்லை. மீண்டும் உலகத்தையும் உயிரினங் களையும் அழித்து பரிணாமத்தாலேயே, படைப்புக்களை உருவாகச் செய்வான். மாயை என்பது இயற்கைக்கு மாறானது, மேலும் இயற்கையிலும் இடையீடு செய்யக் கூடியது. செயற்கைகளிலும் தலையீடு செய்யக்கூடியது. இந்தவகையில் இவை தெய்வீகமாகப் போற்றப்பட்டாலும், அவரவர்

தமது குல தெய்வங்களை இறைநிலையில், மூல மூர்த்தியாகவும், மற்றைய தெய்வங்களை பரிவார மூர்த்திகளாகவும் கொண்டாடுகின் றார்கள். ஆனாலும் மனித அறிவியல்களுக்கும் பரிணாமத்துக்கும் இந்து மதம் எப்போதுமே தடையாக இருக்கப்போவதில்லை. அனை வராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய மதமுமாகும்.

## நான் யார்?

ஆன்மிகத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இரண்டு நண்பர்கள் பேசிக்கொண்டனர். "ஆன்மிகத்தின் உச்சத்துக்குப் போகவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். இதற்கு நான் என்ன செய்யவேண்டும்?"

"ஆசைகளை எவன் ஒருவன் விட்டானோ..... அவன், ஆண்டவனைத் தொட்டவன் ஆவான். ஆண்டவனைத் தொடுவதே ஆன்மீகத்தின் உச்சம்!"

"ஆசை இல்லாமல் ஒருவன் இருக்கமுடியுமா?"

"ஒவ்வொரு மனிதனுக்குள்ளேயும் அப்படி ஒருவன் இருக்கிறான். ஆன்மிகம் என்பது அவனை அடையாளம் கண்டுகொள்கிற முயற்சிதான்!"

"அப்படியா....?"

"இப்போது நீ ஒருவனா.... ரெண்டு பேரா.....?"

"நான் ஒருவன்தான்....!"

"இப்படித்தான் எல்லோரும் நினைச்சிக்கிட்டிருக்கோம். ஆனா நாம உண்மையில் மூன்றுபேர்! நம்மைப்பற்றி நாம என்ன நினைக்கிறோமோ அது ஒருவன்! நம்மைப்பற்றி அடுத்தவர் என்ன நினைக்கிறாரோ அது இரண்டாமவன்! நம்மைப்பற்றி நமக்குத் தெரியாமல், அடுத்தவருக்கும் தெரியாமல் ஒருவன் இருக்கிறான்! அவனே மூன்றாவது மனிதன். இவனை அடையாளம் காணும்போது தான் ஆன்மிகப் பயணம் முழுமை பெறுகிறது!"

"அந்த மூன்றாவது மனிதனைக் கண்டுபிடிப்பது முடிகிற காரியமா?" "அகங்காரத்துக்கு விடை கொடுத்து அனுப்பிவிட முடிந்தால் இது சுலபமாக சாத்தியம். ஆனால், இன்றைய மனிதனை நினைத்தால் பரிதாபமாக உள்ளது".

"என்ன சொல்கிறீர்கள்?"

"அவனுக்கு முதல் மனிதனையே அடையாளம் தெரிவதில்லை....! அதாவது, அவன் யார் என்றே அவனுக்குத் தெரிவதில்லை".

"புரியவில்லையே...?"

"ஒரு கதை சொல்கிறேன்! அந்த மதுக்கடையில் நிறையப் பேர் மயக்கத்தில் இருந் தார்கள். நள்ளிரவு நேரம். ஒருவன் வேகமாக உள்ளே ஓடிவந்து கத்தினான். "ஏய்... வெங்கட் ராமா...! உன்னோட வீடு தீப்பிடிச்சுக்கிட்டு எரியுது" என்றான். ஒருவன் திடீரெனப் பதறிப்போய் எழுந்தான். ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து வெளியே ஓடினான். நீளமான சாலை ஒன்றில் அரை மணிநேரம் ஓடியிருப்பான். சட்டென்று "பிரேக்" போட்டதுமாதிரி ஓர் இடத்தில் நின்றான். பின்னர் திரும்பினான். மெதுவாக நடந்தான். பழையபடி மதுக்கடைக்கே வந்து சேர்ந்தான். அங்கே இருந்த ஒருவர் ஆச்சரியத்துடன் கேட்டார்... "ஏன் திரும்பி வந்துட்டே?" "பாதி தூரம் ஓடிய பிறகுதான் 'நான் யார்? அப்படிங்கறது எனக்குப் புரிஞ்சுது" "என்ன புரிஞ்சுது?" "நான் வெங்கட்ராமன் இல்லே... சீனிவாசன்!" என்றான் திரும்பி வந்தவன்.

*உங்களை நீங்களே மதியுங்கள். அப்போதுதான் பிறர் உங்களை மதிப்பர்.*

(தொடர்ச்சி...

# திருமூலர் தவமொழி

– திரு ஆ.தா.இ. **ஜெயபாலன்** அவர்கள் –

இறைவனை எந்த மார்க்கத்தில் சென்று வழிபட்டால் அவனை அடையலாம் என்று பக்தர்களுக்கு சந்தேகம் உண்டாவதுண்டு. பூசனை முறைகளும் மூர்த்தி பேதங்களும் இவற்றை நாடும் வழிகளும் பலவாறாக நமது முன்னோர்கள் கூறியுள்ளார்கள். பலவிதமான வழிபாட்டு முறைகளில் எதைக் கொண்டு இறைவனைப் பணிந்து கடைத்தேறலாம் என மயங்கும் பக்தர்களுக்கு திருமூலர் இப்படிக் கூறுகிறார்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை

நந்தி- சிவபெருமானுக்கு மற்றொரு பெயர், ஆரா அமுது- பருகத் தெவிட்டாத அமுதம் தானே தன்னியல்பாக நிற்காமல் சுரந்து வரும் அமுதம். ஒப்பிலி வள்ளல்- சமானம் இல்லாத ஒப்பற்ற கருணையோடு கூடிய இறைவன், ஊழி முதல்வன்- உலக முடிவில் தனக்கு முடிவில்லாதவனும் உலகின் தொடக்கத்தில் ஆதி காரணமாக அமைந்த முதல்வனுமான இறைவன்.

எல்லா உயிர்களுக்கும் தந்தையாக விளங்குகின்ற அப்பன் அவன்; நந்தி என்ற திருநாமத்தை உடையவனும் அவனே; அவனுடைய பெருங்கருணைக்கு ஈடு இணையில்லாத ஒப்பற்ற வள்ளல் அவன்; ஊழிக்காலங்களுக்கெல்லாம் அப்பாற்பட்ட முழுமுதற் கடவுளவன்; அப்படிப்பட்ட இறைவனை

எப்பரிசு ஆயினும் ஏத்துமின்; ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே!

எந்த விதத்திலாவது ஒருவிதம் எந்த முறையிலாவது ஒரு முறையில் துதியுங்கள்; அப்படித் துதித்தால் வேறுவிதமான துதிக்கு அவசியமில்லாமல் அவனுடைய அருளைப் பெறலாம்! எந்த நிலையில் இறைவனை வணங்கினாலும் அந்த நிலையில் நின்று அருள் புரிவான்.

வழிபடுவதற்குரிய மார்க்கம் எது உருவம் எது என்றெல்லாம் தேடித் தேடி ஆராய்ந்து அந்த ஆராய்ச்சியிலேயே காலத்தை கழித்து விடுவது பேதமையாகும். நாம் எந்த வழியிலே மன ஒருமையோடு செல்கிறோமோ அந்த வழியிலேயே நம்மை எதிர்கொண்டு இறைவன் அருள்புரிகிறான் என்ற உறுதி மொழியை நமக்கு தருகிறார் திருமூலர்.

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரிசு ஆயினும் ஏத்துமின்; ஏத்தினால்
அப்பரிசு ஈசன் அருள்பெற லாமே.

*வெற்றியாளர்கள் கடின உழைப்பை வெற்றியாக மாற்றக்கூடியவர்கள்.*

கடவுளைச் சென்றடையும் பாதைகளிலே எதைப் பிடித்து நடக்கலாம் என்று தயங்கி நிற்கும் பக்தர்களுக்கு, எல்லா வழிகளுமே இறைவனையே அடைகின்றன என்று உபநிடதம் கூறும் கருத்தினைத் திருமூலர் அறுதியிட்டுச் சொல்கிறார்.

வேதத்தை விட்ட அறமில்லை; வேதத்தின்
ஓதத்தகும் அறம் எல்லாம் உள;

(உள என்பதை உணர்வீர்களாக! இதற்கு மேலும் சந்தேகங்கள் வேண்டாம் உறுதியான வார்த்தை இது)

இவ்வாறு உறுதியோடு கூறும் சித்தர் இந்த உறுதியோடு வீடுபேறு அடைந்தார்கள் என்று சான்றும் காட்டுகிறார்.

தர்க்க வாதத்தை விட்டு மதிஞர் வளமுற்ற
வேதத்தை ஓதியே வீடு பெற்றார்களே.

(மதிநர்- அறிஞர்கள்)

அப்படிக் கூறும் மூலர் ஆகமச் சிறப்புக்களைக் கூறி முடித்துவிட்டு பாஷைகளைப் பற்றி எடுத்துக் கூறுகிறார்.

பாஷைகள் எல்லாம் தெய்வத்தின் பேச்சு. இவற்றில் உயர்வு, தாழ்வு சொல்லித் தர்க்கம் செய்வது மடமை என்று அழுத்தமாகக் கூறுகிறார். திருமூலர் காலத்தில் பதினெட்டு பாஷைகள் (பாடை- பாஷை) வழங்கி வந்ததாகத் தெரிகிறது. இந்தப் பதினெட்டு பாஷைகளையும் கற்றுத்தேர்ந்த முனிவர் திருமூலர். இவை சம்பந்தமாக என்ன கூறுகிறார் என்பதைப் பார்ப்போம்.

பண்டிதர் ஆவர் பதினெட்டு பாடையும்
கண்டவர் கூறும் கருத்தறி வாரென்க
பண்டிதர் தங்கள் பதினெட்டுப் பாடையும்
அண்ட முதலா னறஞ்சொன்ன வாறே!

பண்டிதர்கள் என்றால் இந்தப் பதினெட்டு பாஷைகளையும் கற்று, அந்த மொழியாளர்களின் கருத்தை அறியக்கூடியவர்கள் என்பது பொருள். இந்த பதினெட்டு மொழிகளுமே அரண் வகுத்து வழங்கிய மொழிகள் என்று மூலர் கூறுகிறார்.

ஒரு மொழி பிறப்பதும், வளர்வதும், உல்லாசமாக மக்களின் நாவில் உலவுவதும் சிந்திக்கச் சிந்திக்க வியப்பைத் தரும் விடயமாகும். பல்லாண்டுகளாக உயிர்த்தத்துவமானது மக்களுடைய நாவிலே நடந்து நடந்து சென்று சொற்களையும் சொல் முடிவுகளையும் வண்ண வண்ண செயல்களையும் படைக்கிறது. இந்த உயிர்த் தத்துவம் வேறு இறைவன் வேறு அல்ல. அனாதி தத்துவமான இறைவனே இந்தச் செயல்களைச் செய்து வருகிறான் என்றால் அது உண்மைக்குள் உண்மையாகும். இதை மனதிற்கொண்டு திருமூலருடைய பாடலை உணர்ந்தால் அடிப்படையான உண்மைகள் துலங்கும்.

"ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே"

சொல்லாவாய், பொருளாவாய் அன்றும் இன்றும் பலவிதத்திலும் இறைவனை ஞானிகள் வழிபடுகின்ற முறையில் நின்று பார்க்க வேண்டிய பாடல் இதுவாகும். பதினெட்டுப் பாஷை களையும் படித்து ஓதி உணர்ந்த சித்தர்களின் மொழி இதுவாகும். (தொடரும்...

*உலகத்தில் உன்னதமானது நல்ல நட்பு.*

# சிவசின்னங்கள்

– செல்வன் குமாரசாமி நிசாந்து அவர்கள் –

சேக்கிழாரால் இயற்றப்பட்ட பெரிய புராணமானது இரண்டு காண்டங்களையும் 13 சருக்கங்களையும் 4287 விருத்தப்பாக் களையும் கொண்டுள்ளது. 63 தனி அடியார் களினதும் 9 தொகை அடியார்களினதும் பெருமைகளைப் பேசுகின்றது.

இப் பெரியபுராணத்தின் சிவசின்னங் கள் பற்றி நோக்குவோமானால் சொருப நிலையினன் ஆகிய இறைவனை உருவ நிலைப்படுத்தலின் போது அவனுக்குக் குணம் குறி என்பன உருவாக்கப்பட்டன. அவற்றில் இறைவனைச் சிறப்புற அடையாளப்படுத்தும் முகமாகவே சிவசின்னங்கள் விளங்கின. அவை சிவனுடைய சின்னங்கள் எனப்படும் விபூதி, உருத்திராக்கம், பஞ்சாட்சரம் போன் றனவாகும். சிவனடியார்களைச் சோதிக்கும் பொருட்டு இந்த சிவசின்னங்கள் தாங்கி வந்த செய்திகள் பெரியபுராணத்தில் பல இடங் களில் சேக்கிழாரால் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றினை அணியும் மெய்யடியார்களைச் சிவனடியார்கள் என அழைப்பர்.

சைவர்களுக்கு உடலாகவும் உயிர் ஆகவும் இருக்கின்ற சிவசின்னங்களில் முதன் மையானது திருநீறாகும். விபூதி என்ற பெய ரிலேயே அதனுடைய பெரும் சிறப்பு விளக்கப் படுகிறது. "வி" என்றால் மேலானது. "பூதி" என்றால் செல்வம் எனவே முத்திப்பேறாகிய மேலான செல்வத்தை தருவது விபூதி என்று பொருள் கொள்ளப்படும். அதேபோல் "திரு" என்றால் தெய்வத்தன்மை பொருந்தியது. நீறு என்றால் வினைகளை நீறாக்குவது என்று பொருள். அதாவது ஆன்மாக்களின் பாவங் களை எல்லாம் "நீறு" செய்வது எனப் பொருள் கொள்ளப்படும். எனவே வினைகளை வேரறுத்து தெய்வத்துடன் இணைக்கும் சாதனமே "திருநீறு" என்று பொருள் கொள்ளப் படும்.

வடமொழியில் விபூதிக்கு பல பெயர் கள் உண்டு. பசுமம், பசிதம், சாரம், இரட்சை என்பனவாகும். சேக்கிழார் 4 வகையான திரு நீற்றினைப் பற்றிப் பேசுகின்றார். கற்பம், உப கற்பம், அனுகற்பம், அகற்பம் என்பனவாகும்.

திருநீற்றின் வகைகளையும் அவற் றைச் செய்யும் முறைகளையும் திருமலைச் சிறப்பின் "பொன்னின் வெண்தரு நீறு" என வெண்திருநீறு புனைந்ததாலேயே இமயமலை வெண்ணிறம் உடையதாகத் தோன்றுவதாக கூறுகின்றார். மேலும் தேவாசிரியத் திருக்கா வனத்தில் கூடியிருந்த அடியார்கள் திருமேனி யில் நிறைந்த நீற்றொளியும் 5 எழுத் தோசையும் அந்த இடத்தை பாற்கடலாக்கியது என்பர். அத்தோடு நீரைப் போன்று திருநீற்றிலும் குளித்து புறத்தூய்மையைப் பெறலாம் என்பர்.

தடுத்தாட்கொண்ட புராணத்தில் சுந் தரர் திருமணக்கோலம் கொண்டபோது இறை வன் அணிந்திருந்த திருநீறு நெற்றிக்கண்ணை மறைத்த வெள்ளைத் துணிபோல் விளங்கிய தாகக் கூறுகிறார். நாயன்மார் வரலாற்றிலே திலகவதியார் ஐந்து எழுத்து ஓதி, திருநீற் றைக் கொடுத்த செய்தியை "திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்ப" என்பர். அடி யார் கூட்டம் தம்மைச் சூழ்ந்து வர வணங்கும்

*எதையும் பெரிதுபடுத்தாமல் பழகிவிட்டால் வாழ்க்கை இனிமை தரும்.*

கைகளுடன் திருநீறு பூசிய கோலத்துடன் நாவுக்கரசர் திருப்புகலி சேர்ந்த கோலத்தையும் அப்பரும் சம்பந்தரும் சந்தித்துக்கொண்ட குழாம் ஒன்றுடன் ஒன்று கலந்த காட்சியையும் இரு வெண்கடல்கள் ஒன்றோடு ஒன்று கலந் தது போல் இருந்தது என்கின்றார் சேக்கிழார்.

மெய்ப்பொருள் நாயனார், "மெய் எலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டி பொய்த்தவ வேடம் கொண்டு முத்தி நாதன் அணுகி வாளால் வெட்டியபோது, 'திருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர்" பாதுகாத்து உய்ப்பீர் என்று வேண்டி உயிர் நீத்ததாக சேக்கிழார் குறிப்பிடுகிறார். மேலும் எங்கெல் லாம் திருநீற்றின் புகழ்பாட முடியுமோ அங் கெல்லாம் சேக்கிழார் பாடியுள்ளார்.

சம்பந்தர் திரு அவதாரம் செய்தபோது குழந்தைகளுக்கு அணிவிக்கும் முக்காப்பு அதிகமென்று எவற்றையும் விரும்பாதவராய் பகவதியார் நெற்றியினில் திருநீற்றுக் காப்பு அணிந்த செய்தியினையும் முத்துச் சிவிகை யில் சம்பந்தரின் நீற்றொளி பாற்கடலில் இருந்த மதிபோல் இருந்தமையையும் போற்று கின்றார். மதுரையில் வெப்புநோய் நீங்கிய பாண்டிய மன்னன் திருநீறு அணிந்து நின்ற காட்சியை "பூதி மெய்க்கு அணிந்து வேந்தன்" என்கின்றார்.

விபூதியைப் பற்றிப் பாடிய சேக்கிழார் பஞ்சாட்சரம் பற்றியும் சிறப்பித்துக் கூறினார். "பஞ்ச" என்பது ஐந்து. அட்சரம் என்பது எழுத்துக்கள். ஆகவே ஐந்து எழுத்துக்களால் ஆனவை பஞ்சாட்சரமாகும். இதன் உண் மையை ஓதியும் செபம் செய்தும் மனனம் செய்தும் தான் அறியலாம். பஞ்சாட்சர மந் திரம் உள்நின்று உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி, பக்குவநிலையை அடையச்செய்யும் சாதனமாகும். இதன் முக்கியத்துவத்தை உணர்ந்தே பல பதிகங்கள் பாடப்பட்டுள்ளன. நாவுக்கரசர் நமச்சிவாயப் பதிகத்தில் நற்றுணை யாவது நமச்சிவாயவே, நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே, உலகினிற் பயின்ற பாவத்தை நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே, நடுக்கத்தை கெடுப்பது நமச்சிவாயவே, நன் னெறியாவது நமச்சிவாயவே என்றெல்லாம் பாடுகின்றார்.

திருவைந்தெழுத்தின் விரிவே பன்னிரு திருமுறைகளும் பதினான்கு கொண்ட சாஸ் திரங்களும் மெய்களும். "நமசிவாய" என்றும் "சிவாயநம" என்றும் திருவைந்தெழுத்து வழங் கப்பெறும் பெரியபுராணத்திலும் ஆனாய நாயனார் புராணத்திலும் சிறப்புலி நாயனார் புராணத்தில் பஞ்சாட்சரத்தை இசையுடன் பாடு வதும் வாத்தியத்திலே இசைப்பதும் இறை வனுக்கு உவப்பைத் தரும் எனக் கூறப் பட்டுள்ளது.

வேள்விகளில் கிரியைகளில் சிவ னுடைய அவிப்பாகம் எந்தளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது பஞ்சாட்சரம் ஓது தலாகும். இது அக அழுக்கினை நீக்குகிறது. ஆன்ம எழுச்சிக்கும் சிவத்தியானத்திற்கும் இது பெரிதும் உதவுகிறது. திலகவதியார் நாவுக்கரசருக்கு திருவைந்தெழுத்தை ஓதியே திருநீறு கொடுத்தார். அக்காலத்தில் திருக் கோயிலுள் செல்லும்போது பஞ்சாட்சரத்தை ஓதிக்கொண்டே செல்லவேண்டிய மரபு இருந் தது. மேலும் திருவைந்தெழுத்தானது சூலை நோயை நீக்கப் பெரிதும் உதவியது.

இம்மை நலனுக்கும் மறுமை நல னுக்கும் திருவைந்தெழுத்து துணையாகின் றது என்பதனை "இருந்து சொல்லுபவன் கேண்மின்கள் ஏழைகாள்..." எனவும் இது உடல் நோய்க்கு மருந்தாவதோடு இறை வனைத் தூண்டவல்லது எனும் பாடல் சிறப் பித்துக் கூறுகின்றன. திருநீறும் கோவணமும் உருத்திராக்கமும் ஆகிய சிவ சின்னங்களாலே

*சூழ்நிலைகளை அனுசரித்துச் செல்பவன் சிறந்த மனிதன்.*

பொலிவுற்று விளங்கி ஆதி தேவனாகிய சிவ னின் திருவைந்தெழுத்தாகிய மூல மந்திரத்தை நாவால் ஓதுபவரின் திருப்பாதங்களை வணங் கும் பண்பு கொண்டவராகக் குலச்சிறையார் காணப்படுகிறார். இதனை "பூதி கோவணம் சாதனத்தால் பொலிந்து" எனும் பெரிய புராணப் பாடல் மூலம் அறியலாம். மெருமிழ லைக் குறும்ப நாயனார் புராணத்தில் திரு வைந்தெழுத்தின் மகிமையால் சுற்றமும் பொருளும் உணவும் கைவரப்பெறும் எனச் சுட்டப்பட்டுள்ளது.

"அன்ன வடிவும் ஏனமும் ஆய்...." எனும் பெரியபுராணப் பாடலில் அன்னப் பறவையாயும் பன்றி உருவாயும் மாறிய நான் முகன் திருமாலாகிய இருவராலும் அறியப் படாது திருப்புகலூரில் எழுந்தருளிய பெரு மானாரை வர்த்தகமானீச்சரம் என்ற திருக் கோயிலில் நல்ல மகிழ்வோடு மனங்கொண் டாடிட நித்தமும் பூசனை புரிந்து தவறாது பெருமை வாய்ந்த திருவைந்தெழுத்தை ஓதியே முருகநாயனார் வாழ்ந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக திருவைந்தெழுத்தானது ஒவ்வொரு அடியார்களது வரலாற்றிலும் முக் கியத்துவமுடையதாக அமைந்துள்ளது என் பதனை நாம் பெரியபுராணப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு அறியலாம்.

உருத்திராக்கம் ஆன்மிக வாழ்வுக்கு மட்டுமன்றி லௌகீக வாழ்விற்கும் பயனுடை யது. இது சிவ சின்னங்களுள் முக்கியத்துவம் உடையதாகக் காணப்படுகிறது. இதனைக் கண்டிகை எனவும் அழைப்பர். இவ் இரண்டும் பற்றி பெரியபுராணம் பல சிந்தனைகளை உள்வாங்கிக் காணப்படுகின்றது.

உருத்திராக்க மாலைகள் ஒரே முகம் உடைய சாதிகளாக இருத்தல் வேண்டும். பல முக மணிகள் ஒரே மாலையாக சேர்த் தல் முறையாகாது. முகத்தோடு முகமாக அமைய இடையில் பொன், வெள்ளி, பவளம், பளிங்கு முதலிய ஏதேனும் இடப்பட்டிருக்க வேண்டும். மாலையில் தொங்கல் இரண்டையும் சேர்த்து முடியுமிடத்தில் அதே முகமுடைய பெரிய மணி ஒன்று இட்டு முடிவது வழக்கம். மார்பில் தரிக்க வேண்டிய மணிகள் பெரிய தாய் 32 இருக்கவேண்டும்.

கோயிலுக்குப் போகும்பொழுதும், விரத சிரார்த்த அனுட்டான காலங்களிலும் புண்ணிய தல யாத்திரை செய்யும்போதும், தீர்த்தமாடும்போதும், வேறு சுப காலங்களிலும் தரித்தால் பலன் அதிகம் உண்டாகும் என்பர். உருத்திராக்கத்தை தலையிலே தரித்துக் கொண்டால் கங்கா ஸ்நானம் செய்த பலன் கிட்டும். இக்கருத்தினைப் பெரியபுராணத்தில் மாத்திரமன்றி மெய்கண்ட சாஸ்திரங்களும் எடுத்தியம்புகின்றன.

முப்புரங்களை எரிக்க எழுந்த உருத் திரனுடைய சினமிக்க கண்ணில் இருந்து வந்த ஓர் அமுதத் துளியில் நின்றும் இம்மணி உண்டானதால் இது உருத்திராக்கம் எனப் படும். இதை அணிபவர்களது பாவங்கள் நீங் கும் என்று கூறுகிறது. இதன் பெருமையைக் கந்தபுராணமும் விளக்கிக் கூறுகின்றது. இதனை அணிவோர் கொல்லாமை, புலால் உண்ணாமை, அருளுடைமை போன்ற விரதங் களை மேற்கொண்டு ஒழுக வேண்டும். நாவுக் கரசர் கழுத்தில் கண்டிகை அணிந்தே உழ வாரப் பணிகளில் ஈடுபட்டார் என்று கூறப்படு கிறது.

இளையான்குடிமாற நாயனார் சிவன் அடியார்களைத் தூரத்தே கண்டவுடன் அவர் களுடைய சாதியையும் குணத்தையும் ஆரா யாமல் உருத்திராக்கம் சிவ வேடமே எனக் கொண்டு, அவர்களை மனிதர் எனக் கருதாது, சிவன் என்றே பத்திபண்ணி இருக்கை விட்டு

*பணம் சிறிதளவு உள்ளவன் ஏழையல்ல, ஆசை அதிகம் உள்ளவனே ஏழை.*

எழுந்து அக மகிழ்ச்சியோடும் முக மலர்ச்சி யோடும், குவித்த கைகளை உடையவராய் விரைந்து எதிர்கொண்டு அவர்களுடைய திருவடிகளிலே வீழ்ந்து வணங்கி நமஸ் கரித்து, இன்சொற்களைச் சொல்லி வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்து, கரக நீர் கொண்டு வந்து அவர்களுடைய திருவடிகளை விளக்கி அத்தீர்த்தத்தை சிரமேற்றெளித்து உள்ளும் பருகி, பத்திர புஷ்பங்களால் பூசிப்பர் என சேக்கிழார் சிறப்பித்துக் கூறுகிறார். எனவே தொகுத்து நோக்கும்போது, சைவத் திருமுறை களில் பெரும்பாலும் பெரியபுராணத்தில் சிவசின்னங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இச் சிவசின்னங்கள் பற்றி திருமூலர் திருமந்திரத்தில் சிறப்பாக எடுத்தாண்டுள்ளார். திருநீறு மிக முக்கிய மானது என்பதனை "நீறில்லா நெற்றி பாழ்" என்றார் ஔவையார். ஒருவன் சைவ சமயி யாக வாழவேண்டுமாயின் சிவசின்னங்களை அணிதல் வேண்டும் என்பதனைப் பெரிய புராண வரலாறுமூலம் அறிந்துகொள்ளக் கூடியதாய் உள்ளது.

---

**கொடையாளி நன்றிக்குரியவர்!**

ஜென் குரு டோஜோவின் மடாலயத்துக்கு ஒரு பணக்காரன் வந்து பத்தாயிரம் தங்க நாணயங்களை நன்கொடையாக அளித்தான். டோஜோ அந்த நன்கொடையை ஒன்றுமே சொல்லாமல் ஏற்றுக்கொண்டார். அந்தப் பணக்காரனோ கடுமையாகத் தொந்தரவு செய்தான்.

"நான் கொடுத்த நன்கொடை பத்து ஆயிரம் தங்க நாணயங்கள் தெரியுமா?" என்று ஆதங்கத்துடன் கேட்டான்.

டோஜோ தெரியுமென்று சொன்னார். "எனக்குக்கூட, பத்தாயிரம் தங்க நாணயங்கள் என்பது மிகவும் பெரிய தொகைதான். ஒரு நன்றியைத் தானே உங்களிடம் எதிர்பார்க்கிறேன். சொல்லக் கூடாதா?"

"நீயும் திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டாய். நானும் கேட்டுவிட்டேன். எனக்குக் காது செவிடென்று நினைத்தாயா? நான் உனக்கு நன்றியாக இருக்க வேண்டுமென்று நினைக் கிறாயா?" என்றார்.

"அதுபோதும்.... அதுவே எதிர்பார்க்கப்படுகிறது" என்றார் பணக்காரர்.

"உனது தங்க நாணயங்களை நீ திரும்ப எடுத்துச் செல்லலாம். நீ உண்மையிலேயே ஆலயத்துக்குக் கொடையளிக்க விரும்பினால் நான் அந்த நன்கொடையை ஏற்றுக்கொண்டதற்கு நீதான் நன்றியுடன் இருக்கவேண்டும்" என்றார் டோஜோ.

டோஜோ குருவாக இருந்த அந்த ஆலயத்தில் இன்னும் அவை வாக்கியங்களாக எழுதப்பட்டுள்ளன. கொடுப்பவன் எவனோ அவனே நன்றியுடன் இருக்கவேண்டும். அதுதான் மெய்யான பகிர்ந்துகொள்ளுதல்.

ஒருவர் ஒரு பரிசை உன்னிடமிருந்து பெறுகிறார் என்றால், அது உனக்களிக்கப்பட்ட வரமாகும். அவர் அதைப் பெறுவதற்கு மறுத்திருக்கலாம். உன்னுடைய பரிசை ஏற்றுக்கொள்வதன் வழியாக அவர் உன்னை ஏற்றுக்கொள்கிறார். கொடுப்பவன் எவனோ அவனே நன்றிக்குரியவனாக இருத்தல் வேண்டும். இல்லையேல், அது பகிர்ந்துகொள்ளுதல் அல்ல, பேரம்.

கொடுப்பதற்கு பலனை எதிர்பார்ப்பவரோ கொடையைவிட மதிப்புமிக்க ஒன்றை எதிர்பார்க்கிறார். ஞானமடைந்த ஒருவராலேயே பகிரவும் முடியும்.

*ஏழைகளுக்குக் கொடுப்பவன் கடவுளுக்குக் கடனாகக் கொடுக்கிறான்.*

# பாவத்தின் சம்பளம் கொரோனா

– திரு சாம் ரமேஸ்குமார் அவர்கள் –

இன்றைய சமகாலத்தில் எவரைப் பார்த்தாலும் அவர்களுடைய உதடுகள் உச்சரிக்கும் ஒரே வார்த்தை கொரோனா. இது எப்போது இவ்வுலகை விட்டு விரட்டியடிக்கப் படும் என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாகவே எல்லோர் மத்தியிலும் இருந்து வருகின்றது.

ஆனால் கொரோனா என்று உதடுகளால் உச்சரிப்பவர்கள் ஒன்றை மட்டும் சிந்திக்கத் தவறி விட்டார்கள். இந்தப் பேரழிவைத் தரக்கூடிய கொரோனாவை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தவர்கள் யார் என்பதை, இது சீனன் செய்த சதி. இது அமெரிக்கன் செய்த சதி என்று சும்மா கதையளப்பதை தவிர்த்துவிட்டு உண்மையில் இந்த கொரோனாவை இவ்வுலகுக்குக் கொண்டு வந்தவர்கள் யார் என்பதை ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் ஓரளவாவது உண்மை நமக்குப் புலப்படும்.

இந்த உலகில் வாழும் ஒவ்வொரு தனிமனிதனின், தனிப்பட்ட பாவச் செயல்களின் மொத்தத் தொகுப்பே இந்தக் கொடிய கொரோனாவாகும். இதை இவ்வுலகில் வாழும் எந்த மனிதனும் எளிதில் மறுத்துவிட இயலாது. அதனால்த்தான் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்கிறார் யேசு கிறிஸ்து புனித வேதாகமத்தில்.

"தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் பொழுதெல்லாம் என்னை நானே யுகந்தோறும் பிறப்பித்துக் கொள்கிறேன்" என்கிறார் பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா. அதாவது தர்மத்தைக் காப்பாற்றி அதர்மத்தை அழிப்பதற்காகக் கொரோனா வடிவில் பரமாத்மா இப்பூவுலகில் அவதரித்தாரா? என எண்ணத் தோன்றுகிறது. அந்தளவுக்கு ஒவ்வொரு மனிதனின் பாவச் செயல்களும் வரம்பு மீறி கட்டுக்கடங்காமல் சென்றுகொண்டிருக்கின்றன. பாவம் செய்தாலும் இறைவன் வருவான். புண்ணியம் செய்தாலும் இறைவன் வருவான். இதுவே இறை நியதியாகும்.

பாமர மக்கள் செய்யும் தவறுகளை விட படித்த பெரும் பதவியிலிருக்கும் ஆதிக்கம் கூடியவர்கள் செய்யும் தவறுகளே இவ்வுலகில் அதிகம் எனலாம். தனக்குக் கீழே இருக்கும் சக மனிதன் தனக்கு மேலே வந்துவிடக்கூடாது அல்லது தனக்கு சமமாக வேனும் இருந்துவிடக்கூடாது என்பதில் ஒவ்வொரு மனிதனும் கண்ணும் கருத்துமாய் செயலாற்றிக்கொண்டு இருக்கின்றான். மனித நேயம் என்பதே இன்றைய பொழுதுகளில் ஒரு சவாலான விடயமாகவே உள்ளது.

அறிவியலாலும் அழிக்க முடியாத இந்த கொரோனாவை இறைவனை நோக்கிய பிரார்த்தனையால் அல்லது சுய சரணாகதியால் மட்டுமே அழிக்கமுடியும்.

இவ்வுலகில் வாழும் ஒவ்வொரு மனிதனும் தான் செய்த பாவச் செயல்களை இறைவனிடம் மனதால் கசிந்துருகி கண்ணீர மல்க முறையிட்டு, பின் அவனின் அளவற்ற கருணையைப் பெறுவதே இந்த கொரோனா காலத்தில் விவேகமான செயலாகும்.

தன் பாவங்களை இறைவன் முன்னிலையில் அறிக்கையிட்டுவிட்டு விடுகிறவன் இறைவனுக்கு மிக அருகில் இருக்கின்றான் என்பதே ஞானிகளின் அனுபவ சித்தாந்தம்

*மனம் திறந்து ஒத்துக்கொள்வது ஆன்மாவுக்குச் சிறந்தது.*

ஆகும். தான் செய்த பாவங்களின் குற்ற உணர்வு ஒரு மனிதனின் மனச்சாட்சியை உலுக்கும்போது மீண்டும் அப்பாவத்தை அவன் கனவிலும் செய்யத் துணிவதில்லை. அந்தக் குற்றவுணர்வை இந்த கொரோனா எனும் ஆசான் எமக்குக் கற்றுத் தருகின்றது எனலாம். ஆகவே கொரோனா என்னும் அபாயத்துக்குச் சிறந்த உபாயமாக விளங்குவது இறைவன் முன்னிலையில் அனைவரும் மனம் திரும்பி தர்மத்துக்குத் தலைசாய்ப்பதே. இது ஒன்றே கொரோனாவுக்கான நிரந்தர தடுப்பூசி ஆகும். முப்படைகளையும் வைத்திருக்கும் வல்லரசுகளைவிட மூவுலகங்களையும் ஆளும் இறையரசுக்கே சக்தி அதிகம் என்பதை ஒரு போதும் மறந்துவிடக்கூடாது.

*-நன்றி வலம்புரி-*

## காயத்திரி மந்திரம்

சக்கரவர்த்தி அக்பரும் அவருடைய மதியூக மந்திரியான பீர்பாலும் ஒருநாள் மாறுவேடமணிந்து நகர் சோதனை செய்து வந்தார்கள். அப்போது ஒரு பிச்சைக்காரன் எதிர்ப்பட்டான். அவனைப் பார்த்த அக்பர், இந்த இனத்தவர்களுக்குப் பிச்சை எடுப்பது தவிர வேறு பயனுள்ள தொழிலெதுவும் செய்யத் தெரியாதா? என்று கேட்க, பீர்பாலின் மனத்தில் முள்ளெனத் தைத்தன அந்த வார்த்தைகள்.

பிறகு அந்தப் பிச்சைக்காரனைச் சந்தித்துக் கேட்டபொழுது தன்னுடைய பெரிய குடும்பத்தைக் காப்பாற்ற வேறு வழி புலப்படாததால் பிச்சையெடுக்க முற்பட்டதாகவும், இதன்மூலம் நாளொன்றுக்கு 25 காசுகள் கிடைக்கின்றன என்றும் கூறினான்.

அதைச் செவியுற்ற பீர்பால் அவன் பிச்சையெடுப்பதை விட்டுவிட்டு தினந்தோறும் காலையில் ஸ்நானம் செய்துவிட்டு 10 தரம் காயத்திரி ஜபம் செய்வதாக இருந்தால் அன்றாடம் அவனுக்கு 50 காசுகள் தருவதாகக் கூறினார். அந்த ஏழையும் பிச்சை எடுப்பதை நிறுத்திவிட்டு பீர்பால் சொன்னபடி ஜபம் செய்து வந்தான். பயனெதுவும் கருதாமல் நாள் பூராகவும் காயத்திரி ஜபம் செய்து வந்ததால் அவன் முகத்திற்கு ஒரு அசாதாரண வசீகரம் ஏற்பட்டது. இதை அறிந்த பீர்பால் அந்த ஏழையை அணுகி தினம் 108 தடவை காயத்திரி ஜபம் செய்தால் அவனுக்கு மாதம் 1000 ருபாய் தருவதாகச் சொன்னார். அதற்கும் ஒப்புக்கொண்டு அந்த ஏழையும் தீவிரமாக ஜபம் செய்தார்.

ஒருநாள் அவனுக்கு அஞ்ஞான இருள் நீங்கியது. அவனுக்கு அமோகமான ஆன்மீக வளர்ச்சியும் தெய்வீக ஒளியும் ஏற்பட்டு, தினந்தோறும் திரளான மக்கள் அவனை நாடி வணங்கி அருள்பெற்று வந்தனர். ஒரு மாதம் ஆனதும் அந்த ஏழை பணம் வாங்க வராததால் பீர்பாலே அவன் வீட்டிற்கு வந்து பணம் கொடுத்தார். ஆனால் அவன் பணிவுடன் அதைப் பெற்றுக்கொள்ள மறுத்து அவனுக்குச் சிறந்த ஆன்மீக வழியைக் காட்டியதற்காக பீர்பாலுக்கு நன்றி தெரிவித்தான்.

மறுநாள் பீர்பால் அக்பரை அந்த ஏழை வீட்டிற்கு அழைத்து வந்தார். அவன் முகத்தில் தென்பட்ட தேஜசையும் அங்கு அருள்பெற வந்த மக்களையும் பார்த்து அக்பர் மிக ஆச்சரியப்பட்டார். அக்பரும் அவர் காலில் விழுந்து அருள்புரியுமாறு வேண்டினார். சில மாதங்களுக்கு முன் நீங்கள் இகழ்ந்து பேசிய அதே பிச்சைக்காரன்தான் இவன் என்று சக்கரவர்த்தியின் காதில் கிசுகிசுத்தார் பீர்பால். சக்கரவர்த்தி நம்பாமல் அந்த ஏழையை இந்த மாற்றத்திற்கான காரணத்தைக் கேட்டார். அவனும் நடந்ததைச் சொன்னான். காயத்திரி ஜபம் செய்ததால் வந்த பெருமை என்று பீர்பால் விளக்கினார்.

சுருங்கக் கூறின் காயத்திரி ஜபத்தினால் பட்டமரம் தழைக்கும், தரித்திரனும் தனவந்தனாவான். வாழ்வில் நிம்மதியின்றித் தவிப்பவர்கள் நிம்மதியும், மனச் சாந்தியும் பெறுவார்கள். சத்துருக்கள் நாசமடைவார்கள். பாவங்கள் நீங்கிப் பிறவித்துயர் நீங்கும். வேதசாரமான இந்த மகா மந்திரம் நம் ரிஷிகளின் அருளினால் நமக்குக் கிடைத்த அரிய பொக்கிஷம்.

*ஒவ்வொரு நாளும் ஆண்டின் சிறந்த நாளென்று உன் இதயத்தில் எழுதிக்கொள்.*

# மனுநீதி, அரசநீதி, தெய்வநீதி வழுவா சான்றோர்கள் வரிசையில் பட்டினத்தடிகளும் அரச நீதி தவறிய மன்னனும்

– *திரு மூ. சிவலிங்கம்* அவர்கள் –

காவிரிப்பூம்பட்டினத்தில் வணிக சேவையால் வளர்ந்து செல்வச் சீமானாக வாழ்ந்தவர் திருவெண்காடர். இவரின் புதல்வராக இறைவனின் அம்சமான மருதவாணன் அமைந்தான். திருவெண்காடர் காவிரிப்பூம் பட்டினத்தில் சிறப்பான நிதிவளத்துடன் வாழ்ந்ததால் பட்டினத்தார் என அழைக்கப்பெற்றார். இவர் மிகவும் கூடுதலான நிதி சேகரிப்பில் கண்ணாக இருந்ததால் இறைவனின் அம்சமாக அவதரித்த மருதவாணன் யாவற்றையும் துறந்து பரதேசியாகச் செல்லவென்று "காதற்ற ஊசியும் வாராது காண்கடை வழிக்கே" என எழுத்தில் தெரிவித்து மறைந்தான். மகனின் வாசகத்தை உணர்ந்த பட்டினத்தார் தமது தாய் முதலான குடும்பம் தேடிய தேட்டம் யாவற்றையும் துறந்து உடுத்த நாலுமுழ வேட்டியுடன் பரதேசியாகச் சென்றார். இவர் பரதேசிக் கோலத் துறவியாகவும் சித்தராகவும் செல்ல இறைவனே நெறிப்படுத்தினார்.

துறவியான பட்டினத்தார் ஊர்களெல்லாம் சுற்றி வந்து எவரேனும் தருவதை உண்டும் ஆலயங்களைத் தரிசித்தும் வந்தார். சித்தர்களின் போக்குச் சிவன் போக்கு என்பர். இவ்வாறு திரிந்த பட்டினத்தார் ஒருநாள் மாகாளம் என்னும் ஊரிலுள்ள ஆலயத்தில் தன்னை மறந்து தியானத்திலிருந்தார். ஒரு நாள் இரவு அவ்வூர் மன்னனான பத்திரகிரியாரின் அரண்மனையில் திருடச் சென்ற கள்வர் தமது நோக்கம் சித்திபெற்றால் விநாயகருக்குக் காணிக்கை தருவதாக கூறிச் சென்றனர். கள்வரின் முயற்சி பலிதமானது. அவர்கள் திரும்பும்போது தமது காணிக்கையாக ஒரு நவரத்தின மணிமாலையை வீசினர். அம்மாலை பட்டினத்தாரின் கழுத்தில் வீழ்ந்தது. தன்னை மறந்து இறைவனின் தியானத்தில் இருந்தவருக்கு இந்த மாலைபற்றி ஏதும் தெரியாது.

மறுநாட் காலை அரண்மனையில் திருடப்பட்டது தெரிந்தது. அரசனின் ஆணைப்படி காவலர்கள் நாற்றிசையுஞ் சென்றனர். இவர்கள் மாகாளம் விநாயகராலயத்தில் ஒருவர் கண்ணை மூடியவாறிருந்ததையும் அவரின் கழுத்தில் அரண்மனையிற் களவுபோன மாலை இருப்பதையும் கண்டனர். கண்டதும் பட்டினத்தாரை அரசன் முன் நிறுத்தினர். கழுத்தில் மாலையைக் கண்டதும் இவன் திருடன் எனக்கூறியதுடன் இவனைக் கழுவேற்றுங்கள் எனப் பணித்தான். நீதி தவறாத அரசனாயின் நன்கு விசாரனை செய்து நீதிக்கேற்றவாறு தண்டனை வழங்கியிருக்க வேண்டும். அவ்வாறு செய்யாமலும் தனது சொந்த மனுநீதி தவறியும் அரசநீதி பொய்த்தும் தண்டனையை வழங்கினான்.

அரச பணியேற்ற காவலர்கள் பட்டினத்தாரைக் கழுமரத்தடிக்கு அழைத்துச் சென்றனர். பட்டினத்தார் "சிவசிவ" என்று கூறித் தமது நிலையை எண்ணிப் பாடினார்.

*நீ கடவுளுக்கு அஞ்சினால் மனிதனை மதிக்க ஆரம்பிப்பாய்.*

"என் செயலாவதியா தொன்றுமில்லை இனித் தெய்வமே
உன் செயலேயெ ன்றுணரப் பெற்றேனிந்த ஊனெடுத்த
பின்செய்த தீவினை யாதொன்று மில்லைப் பிறப்பதற்கு
முன்செய்த தீவினை யோவிங்ஙனே வந்து மூண்டதுவே"

என்று பாடியதும் கழுமரம் தானாகவே தீப்பற்றி எரிந்தது. இதனை அறிந்த மன்னன் பத்திரகிரியார் ஓடோடி வந்து பட்டினத்தாரின் காலில் விழுந்து வணங்கினான். அத்துடன் தனது இராச்சியம் மனைவி மக்கள் அனைத்தையும் உதறிவிட்டுத் துறவியாகிப் பட்டினத்தாரின் சீடனாகப் பின்தொடர்ந்தான். பத்திரகிரியார் தன்னை உணர வைத்த பட்டினத்தாரை உணவுக்காக அலையவிடாது அவரை ஆலயச் சூழலில் இருக்கவிட்டுத் தாமே ஓடேந்தி வீடுகளில் உணவு பெற்று வந்து குருவுக்கும் கொடுத்து எஞ்சியதைத் தாமும் உண்டு வந்தார். பத்திரகிரியார் துறவு பூண்டு வரும்போது அவரின் வீட்டு நாயொன்றும் கூட வந்தது. துறவிகளிருவருடனும் சென்றது. பத்திரிகிரியார் தாமுண்ணும்போது ஒரு கைப்பிடியேனும் தம்முடன் கூடவந்த நாய்க்கும் வைத்தார். இதனால் இவரின் குடும்ப உறவுபோல நாயும் இருந்து வந்தது.

ஒருநாள் பட்டினத்தார் ஒரு சிவாலய வாசலில் இருந்தார். பட்டினத்தார் தமது துறவின் மேம்பாட்டால் ஆடைகளேதுமின்றிக் கௌபீனதாரியாகவே காணப்பட்டார். ஒரு அடியார் பட்டினத்தாரிடம் ஏதும் பசிக்கு உதவுமாறு கேட்டார். அச்சமயம் பட்டினத்தார் தான் யாவற்றையும் துறந்த நிலையில் இக் கோவணத்துடன் இருக்கின்றேன். இக்கோவணமும் எனக்குப் பாரமாயிருக்கின்றது. இவ்வாலயத்தின் மேற்கு வாசலில் ஒரு சம்சாரி இருக்கின்றான். அவன் ஏதும் தருவான் என்றார்.

வந்தவர் பத்திரகிரியாரிடஞ் சென்றபோது நாயும் அவரின் பக்கத்தில் நின்றது. தாம் கிழக்கு வாசலில் இருப்பவரிடம் கேட்டபோது மேற்கு வாசலில் ஒரு சம்சாரி இருக்கிறான் போய்க் கேட்குமாறு அவர் கூறினார். அச்சமயம் கிழக்கு வாசலில் இருந்த தமது குருவான பட்டினத்தாரே என்னைச் "சம்சாரி" எனக் கூறக் காரணமாயிருந்து என்னை அவமானப்படுத்தியது இந்தத் திருவோடும் நாயுமே என உணர்ந்தார். உடனே அந்தத் திருவோட்டை எறிந்துடைத்தார். ஓட்டின் ஒரு பகுதி நாயின்மீதும் பட்டதும் நாயும் இறந்தது.

தனது தவறை உணர்ந்த பத்திரகிரியார் குருவின் மீதிருந்த பாசத்தால் உணவு யாசித்துக் கொடுப்பதையும் தாமுண்ணும் போது ஒரு கைப்பிடி நாய்க்கு வைப்பதையும் ஒரு சம்சாரியின் கடமை என உணர்ந்தார். பட்டினத்தார் முற்றும் துறந்தவர் கோவணத்தை மட்டும் மானங் காக்க அணிந்தபோதும் அதையே பாரம் என எண்ணும் அதிசிறந்த துறவி என்பதையுணர்ந்தார். பட்டினத்தாரின் துறவின் சிறப்பை உணர்ந்தவராகிக் குருவின் கால்களில் விழுந்து வணங்கினார். தம்மை உய்விக்குமாறு பணிந்தார்.

அறப்பணியுடன் நீதி தவறாது நன்கு விசாரித்தே தீர்ப்பளிக்க வேண்டியவன் சிறந்த மன்னனாவான். தமது அரண்மனையில் களவு போனதால் மனுநீதி இன்றி அரச நீதியையும் பொய்ப்பித்தவன் தன் தவறை உணர்ந்தான். தெய்வ நீதிக்கமைவாகத் தானே துறவியாகப் பட்டினத்தாரின் பின் சென்ற பத்திரகிரியார் தெய்வ நீதியால் தடுத்தாட்கொள்ளப்பட்டு துறவு மேற்கொண்டமை தெய்வநீதியின் பேறாகுமே.

*கடவுள் ஒரு கதவை மூடுகிறார் என்றால் நூறு கதவுகளைத் திறப்பார்.*

# வழிகாட்டிகள்

– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு அவர்கள் –

அன்பு வணக்கம்! எமக்கு அமைய வேண்டிய வழிகாட்டிகள் பற்றி இன்றைய சிந்தனைக்கு எடுத்துக்கொள்வோம்.

"இந்து மதம்தான் எல்லா மதங்களுக்கும் தாய் மதம்" இவ்வாறு கூறியவர் சுவாமி விவேகானந்தர். இந்து மதத்தினர் மற்றைய மதத்தினரை தமது மதத்திற்கு மாற்றம் செய்ய வேண்டும் என சிறிதும் கருதுவதில்லை. அதில் நேரம் செலவிடுவதும் இல்லை. காரணம், எல்லா மதங்களும் கடவுளை நோக்கிச் செல்லும் வழிகள்தான், பாதைகள்தான், மார்க்கங்கள்தான் என்று நினைப்பது இந்து மதம். எனவேதான் அதற்கு மதமாற்றம் என்பது அவசியமில்லை.

இந்து மதத் தத்துவங்கள் உலகளாவப் பரவி உள்ளன என்பதிலும் சந்தேகமே இல்லை. துன்பங்களை எதிர்கொள்ளத் தக்க சாதனமாக ஆத்மீக வழிபாடு அமைகின்றது. கடவுள் வழிபாடே அதன் ஆரம்பம். "அவன் இன்றி அணுவும் அசையாது" என்பது எமது முன்னோர் வாக்கு. இதனை ஆராய்ந்து பார்த்தால் ஒரு உண்மை விளங்கும்.

கடவுள்மீது பக்தி ஏற்பட்டு எல்லாம் அவன் செயல் என்று தெரிந்துவிட்டால் யாவும் இறைவனின் ஆணைப்படி நடப்பது என்ற அறிவு எமக்கு ஏற்படும்.

எமது மதம் மறு ஜன்மத்தில் நம்பிக்கை வைத்துள்ளது. அதுவும் ஒரு வகையில் நன்மைதான். இதனால் ஒரு பாவத்தைச் செய்ய முற்படும்போது இப்பாவம் எம்மை மறு பிறப்பில் பாதிக்கும் என்ற பயம் எமக்கு ஏற்படுகின்றது. எனவே, பாவம் செய்யத் தயங்குகின்றோம், பயப்படுகின்றோம். இது எம்மை பாவம் செய்யாமல் வாழ வழிவகுக்கின்றது.

கீழை நாடுகளில் உள்ள மதங்கள் யாவும் மறு ஜன்மத்தில் நம்பிக்கை வைத்துள்ளன. மேனாட்டு அறிஞர்கள், ஏன் தற்போது விஞ்ஞானிகள் கூட மறு ஜன்மத்தில் நம்பிக்கை வைத்துள்ளனர்.

எமது வழிபாட்டில் பூஜை விக்கிரகங்களோடு மந்திரங்களும் யந்திரங்களும் முக்கிய இடம் வகிக்கின்றன. இவற்றில் யந்திரங்கள் அதிக சக்தி வாய்ந்தவை என ஆன்மீகப் பெரியோர் கூறியுள்ளனர். நாம் செய்யும் அர்ச்சனைகள் கூட தெய்வத்தின் பெயரில் செய்தால் தெய்வத்திற்கு பிரீதி அதிகம் ஏற்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அர்ச்சனை என்பதே கடவுளின் பெயர்களைக் கூறி அவன் கருணையை மெச்சுவதுதான்.

மனம் ஒரு நிலைப்பட்டால்தான் எமது ஆத்மா பிரகாசிக்கும். அதாவது நிஜமான ஆனந்த நிலை தெரியும். மனதை ஒரு நிலைப்படுத்த, நெறிப்படுத்த ஒரு குரு எமக்கு அமைய வேண்டும். எமக்கு குரு பக்தி அவசியம் என எமது மத சாஸ்திரங்கள் கூறுகின்றன.

குருவின் அனுக்கிரகத்தினாலேயே ஒருவனுக்கு நிறைவான, உண்மையான ஞானம் கிடைக்கின்றது என உபநிஷதத்திலே சொல்லப்பட்டிருக்கின்றது.

*நல்ல மனச்சாட்சிதான் கடவுளின் கண்.*

இந்த இடத்தில் சாந்தோக்கிய உப நிடதம் கூறும் ஒரு சிறு கதையைக் கேளுங்கள்.

ஒருவனை அவனுக்கு முன், பின் தெரியாத ஒரு காட்டில் கண்ணைக் கட்டி விட்டால் அவன் எங்கே போவான்? கிழக்கா, மேற்கா, தெற்கா, வடக்கா என திசையறியாது தவித்துக்கொண்டிருப்பான். அந்நேரத்தில் ஒருவன் அக்காட்டு வழியே வருகின்றான். அவனது கட்டை அவிழ்த்து விடுகின்றான். அதற்கப்புறம் இவன் தன் ஊருக்கு வழி அறிந்து ஊர் போய்ச் சேருகின்றான்.

இதே போன்றதுதான் எமது நிலையும். எமக்கு ஒரு உத்தம குரு வேண்டும். அவரது உபதேசத்தின்மூலம் நாம் எங்கிருந்து வந்தோமோ அந்தப் பராத்ம ஸ்தானத்துக்கு வழி அறிந்து அங்கு போய்ச்சேர நிச்சயம் வாய்ப்பு உண்டு.

ஒருவனுக்கு எத்தனை புகழ், பணம், பெருமை இருந்தும் என்ன பயன்? அவனிடம் மனநிறைவு கிடைக்காவிட்டால்!

கல்வி சரி, மற்றும் விடயங்கள் சரி எதையும் மனம் ஒருமைப்பட்டுக் கேட்காவிட்டால் பிரயோசனமில்லை. நாம் எவ்வளவோ உபந்நியாசங்கள் கேட்கின்றோம். உழுத இடத்தில் விதை ஊன்றினால் அது முளைவிடும். அதேபோன்றுதான் ஒரு விஷயத்தில் எமது மனம் லயித்தால்தான் அது எமது மனதில் பதியும். எமது மனதில் விஷயங்களைப் பதிய வைக்க, வழிகாட்ட ஒரு குரு எமக்கு அமைய வேண்டும்.

எனவே, ஈஸ்வர பக்தி போன்றதே குரு பக்தியும். இரண்டும் எமது வாழ்வின் முன்னேற்றத்திற்கு மிகமிக அவசியம். இவை இரண்டும் எமக்குச் செம்மையான வழிகாட்டிகளாம். இன்றைய மாணவர்களுக்கும் சொல்கின்றேன், நீங்கள் கல்வி கற்கும் ஆசிரியரிடம் பணிவும் நம்பிக்கையும் வையுங்கள். அவர்கள் சொல்வதை வேதவாக்காக உங்கள் மனதில் பதித்துக்கொள்ளுங்கள். வெற்றி உங்களதே!

## நலமாய் வாழ்ந்திடுவோம்

பிலவு எனும் தமிழ் சித்திரை வருடப்பிறப்பு பிறந்ததே!
சித்திரை கனி எல்லாம் கனிந்தது காசினி எங்கும்!
வாழ வரம் தரும் தாவரங்களும் வளம் சேர்க்க ஆயத்தமாகின!
வைகறையில் துயில் எழுந்தும்! பல மூலிகைகள்
ஒன்று சேர்த்து காய்ச்சி செய்த மருத்துநீரை
சிரசு முதலான மெய்க்கும் வைத்தும் குடும்பத்தாருடன்
நீராடி புனிதராய் தூய ஆடைகள் அணிந்தும்!
தூயவராய் நோய் நொடிகள் அகன்ற மனிதராகவும்!
எல்லாம் வல்ல இறைவனை வணங்க ஆலயம் சென்றும்
அருள்பெற்றும் போற்றத்தக்க பெரியவர்களின்
பாதம் பணிந்தும் ஆசிபெற்றும்! கைவிசேடம் பெற்றும்
உணவு முதலான பட்சணங்கள் கனிகள் சொந்த
பந்தங்களுடனும் அயலாருடனும் உண்டு களித்தும்
நலமாய் வாழ்ந்திடுவோமே! யாம் யாவருமே!

*-பா. முருகானந்தன்-*

*உங்களுக்கு எதையும் இலவசமாகக் கொடுப்பவர் இறைவன் ஒருவரே.*

# உண்மை பேசுதல் உன்னதமானது

– திரு சி. நற்குணலிங்கம் அவர்கள் –

இன்றைய சமுதாயத்தில் பொய் சொல்வது பொதுவாகிவிட்டது. பொய்யான வக்கிரம் உயர அதனுள் உண்மை நசுக்கப் படுகிறது. பொய் என்பது ஒருவர் தனது சொந்த மனநிலைக்கு ஏற்பப் பேசுவது. உண்மை என்பது அரிதாகிவிட்டது. சமுதாய நலிவுக்கு உண்மை மெலிந்து செல்வதும் காரணமாகும். உண்மை, வாய்மை, மெய்ம்மை இம் மூன்றும் ஒன்றுபோலத் தோன்றும் சொற் களாயினும் வேறுபாடு உண்டு. மனிதன் தவ றின்றி வாழ உதவும் உள்ளத்தில் பொய் யின்றி ஒழுகுதல் உண்மை. உள்ளத்தில் உள்ள உண்மை மாறாமல் வாய் வழியாகவே சொல்லாக பேச்சு வெளிப்படுவது வாய்மை. "வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன் றும் தீமை இலாத சொலல்" என்கிறது பொய்யாமொழி. வாய்மை மொழி மாறாமல் நடப்பது மெய்ம்மை. அதாவது மெய்யால் (உடம்பால்) செயற்படுவது மெய்ம்மை. உண்மை எனும் சொல் வாய்மை, நேர்மை போன்ற பல பொருள்களில் அறியப்பட்டு ஆளப்பட்டு வருகிறது. உள்ளத்திலிருந்து வருவது உண்மை. வெறும் வாயிலிருந்து வருவது பொய். இப்படித்தான் இந்தப் பெயர் கள் வந்திருக்கக்கூடும்.

"உண்மை என்பது பொருள்களுக் கும், அறிவுக்கும் இடையே உள்ள ஒரு சமன் பாடு அல்லது உண்மை என்பது பொருள் களுக்கும் அறிவுக்கும் ஒரு போதுமான பொருத் தப்பாட்டு நிலைமை ஆகும்" என தாமஸ் அக்வினால் அவரது அறிக்கையில் கூறி உள்ளார். உயர்ந்த சிந்தனை உடைய பேச்சு சூழ்நிலையில் எது ஒப்புக்கொள்ளக்கூடிய நிலையில் இருக்குமோ அதுவே உண்மை எனப்படும்.

எப்போது மனிதன் சத்தியத்தைமீறி செயற்பட ஆரம்பித்தானோ அப்போதே பொய் என்ற சொல் வந்திருக்க வேண்டும். உண்மை ஒன்றுதான். பொய்தான் பலவாறாக இருக்க முடியும். உள்ளது என்ற சொல் உண்மை என்ற பொருளை மட்டும் தரும். உண்மை கூறுதல் என்பது உள்ளது உள்ளவாறே என்ற பொருளில் வழங்கப்பெறுகிறது. உண்மை அழியாதது. என்றும் நிலைப்பது. எல்லோ ராலும் விரும்பப்படுவது. சத்தியத்தை உயிரா கக் கருதி வாழ்ந்தவர் காந்தியடிகள். இவர் சத்தியத்தைத் தேடுவதிலும், சத்தியத்தைத் தமது வாழ்க்கையில் சோதிப்பதிலும் செல வழித்தவர். அதனால் இன்றும் போற்றப் படுகிறார்.

உண்மை கூறுதல் என்ற அடிப்படை யில் உள்ளதை உள்ளவாறு கூறலாமா? கூறினால் மனித குலத்துக்கு நன்மை பயக் குமா? பல சந்தர்ப்பங்களில் உள்ளதை உள்ள வாறு கூறுவதால் நன்மை இல்லாமலும் போயுள்ளது. மாறாக எதிர் விளைவுகளையே உருவாக்கியும் உள்ளது. இதனால்த்தான் வள்ளுவர் வாய்மை என்ற சொல்லைப் பயன் படுத்துகிறார். உள்ளதை உள்ளவாறு கூறு கின்றோம் என்று தொற்றுநோய் பரப்பும் கிருமி களைப்போல் வதந்திகளைப் பரப்பும் மனி தர்கள் கொடியவர்கள் ஒருவர் பிறிதொருவர் பற்றி தகாதன சொன்னாலும் அதை அப்படியே மற்றவர்க்கு சொல்லிக் கலகத்தை ஏற்படுத்தக் கூடாது. இதைச் சமுதாயத்தில் கூடுதலாகக் காணலாம். கலகத்தை வளர்ப்பது

*எல்லாம் தெரியும் என்று நினைப்பவன் சுத்த முட்டாள்.*

உண்மையன்று. நம் செவிக்கு வரும் செய்திகளில் உள்ள வாய்மையை தேறித் தெளிய வேண்டும். வாய்மையைக் கண்டுணராமல் கோபம் கொள்ளல், பகைத்தல் நல்லதல்ல. எவ்வுயிர்க்கும் நல்லன தருவதே வாய்மை.

நமக்கும் பிறருக்கும் தீங்கில்லாத நலம் தரும் சொற்களையே பேசவேண்டும். "இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம் செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" அதாவது உண்மையை உணர்ந்தவர்களின் வாய்ச் சொல் எந்த அளவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமோ, அதேபோல் நல்ல இனிமையான வார்த்தைகள் மனதில் இன்பத்தையும், நெஞ்சில் ஈரத்தையும் கசிந்துருகச் செய்துவிடும் என்கிறது உலகப் பொதுமறை. இறைவனால் விலக்கப்பட்டதில் முக்கிய இடம் வகிப்பது பொய். சிலர் மற்றவர்களைச் சிரிக்க வைப்பதற்காக பொய் சொல்கிறார்கள். இவர்களுக்கும் கேடு விளையும். உண்மை பேசுவது மனிதனை நன்மையின் பக்கம் இழுத்துச் செல்கிறது. நன்மை சொர்க்கத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது. ஆனால் பொய் சொல்வது மனிதனை பாவங்களின் பக்கம் இழுத்துச் செல்கிறது. பாவங்களோ அவனை நரகத்தின் பக்கம் இழுத்துச் செல்கிறது. உண்மையின் பெருமையை உணர்ந்தவர்கள் எதற்கெடுத்தாலும் பொய் பேசமாட்டார்கள். "உண்மையைப் போன்ற தவம் இல்லை. பொய்யைப் போன்ற பாவம் இல்லை", "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்" அதாவது மனத்தூய்மையோடு நல்ல நெறியில் பொய்யே பேசாமல் நடந்தால் உலகத்தார் மனதாரப் பாராட்டுவார். "பொய்யாமை அன்ன புகழ் இல்லை எய்யாமை எல்லா அறமும் தரும்" வாய்மையோடும் தூய்மையோடும் வாழ்வதைப்போல புகழ் தருவது வேறில்லை. அதுவே எல்லா அறங்களையும் தரும் என்கிறது தெய்வநூல். உண்மையை பொய் ஒன்றும் செய்துவிட முடியாது. உண்மைக்கு வெற்றி கிடைத்தே தீரும். உண்மையே உயர்வு, உண்மை பேசுதல் உன்னதமானது. உண்மைதான் மனுக்குலத்தின் மகத்துவம் உண்மையின் தோல்விகள் பொய்யின் வெற்றிகளைத் தோற்கடிக்கும் என்பதில் ஐயமில்லை.

உண்மையாக இருக்கிறேன் என்று ஊமையாக இருந்துவிடக்கூடாது. மதிக்க மாட்டார்கள் மிதித்துவிடுவார்கள். உண்மை என்பது நல்ல வார்த்தை. "எங்கே சென்றாலும் நல்ல வார்த்தைகளை பயன்படுத்தத் தெரிந்தவனே சிறந்த ஞானி" என்கிறார் அப்துல்கலாம். உண்மை பேசுவது சிக்கனமாகிவிட்டது. உண்மை பேசுவது சிறந்த ஒழுக்க விழுமியம் ஆகும். ஒழுக்க விழுமியங்கள் அருகிச் செல்வதால் ஒழுக்கப் பிறழ்வுகள் சமூகத்தில் மலிந்துள்ளன. சிலபேர் போடும் போலி முகமூடிகளால் பல உண்மையான முகங்களைக் கூட நம்ப மறுக்கிறது மனது. உண்மை பேசும் மனிதர்களுக்கு எந்தவொரு உபதேசமும் தேவையில்லை. "உண்மைக்காக எதையும் துறக்கலாம். ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்காதே" என்கிறது விவேகானந்தர் பொன்மொழி. உண்மையைக் கடைப்பிடிப்பவன் 1000 யாகங்களைச் செய்வதால் கிடைப்பதைவிட கூடுதலான பலன் பெறுவான். பொய் பேசுவது ஜனரஞ்சகமாக இருக்கும். ஆனால் இறுதியில் கெடுதியை விளைவிக்கும் உண்மையைவிட உயர்ந்த தானம் இல்லை. உண்மையே சுவர்க்கத்தின் மாடிப்படிகள். உண்மை எனும் படகுகள் நல்லோரைக் கரைசேர்க்கும். உண்மைதான் பூமியை தாங்கி நிற்கிறது.

"யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும் வாய்மையின் நல பிற"

அதாவது நாம் உண்மையாகக் கண்டறிந்த வகைகளில் உண்மை பேசுவதைவிட நல்ல காரியம் வேறு ஒன்றுமே இல்லை. எல்லாத் தத்துவங்களும் கூறுவது இதுவே என்கிறது புகழ்பெற்ற தமிழ்மொழி இலக்கியமாகும். எனவே உண்மை பேசுதல் உன்னதமானது என்பதை மனதில் நிறுத்தி வாழ்வோமாயின் வாழ்வு சிறக்கும்.

## யாரென்ன நினைத்தால் என்ன...!

நம்முடைய பல்வேறு பிரச்சினைகளுக்கான காரணங்களில் ஒன்று "அடுத்தவன் என்ன நினைப்பான்....?" என்ற நமது எண்ணமே. உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் நெருக்கமே இல்லாத உறவுகள் என யாராக இருந்தாலும், "அவர் என்ன நினைத்துவிடுவாரோ...?" என்ற எண்ணத்தில் நமக்குப் பிடித்தவற்றை செய்யவும் முடியாமல் நிம்மதியைத் தொலைத்து வாழ்ந்துகொண்டிருக்கிறோம். சற்று யோசித்துப் பார்த்தால், இந்த எண்ணங்களின்மூலம் நம்மை நாமே தாழ்த்திக் கொள்வதுமட்டுமன்றி, நிம்மதியைத் தொலைத்து, தூக்கத்தையும் கெடுத்துக்கொண்டு நோய்களுக்கு இரையாகிவிடுகின்றோம். முதலில் அடுத்தவர் யார்...? நாம் நல்லவரா, கெட்டவரா என்றெல்லாம் சான்றிதழ் தருவதற்கு. இப்படியெல்லாம் சான்றிதழ் கொடுப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

நாம் நமது மனச்சாட்சிக்கு சரியெனப்படுவதைச் செய்தால், நாம் ஏன் மற்றவர்களைப் பற்றி கவலைப்படவேண்டும்? நம்மைப்பற்றி பேசுபவர்கள் பேசிக்கொண்டேதான் இருப்பார்கள். அடுத்தவர்களைப் பற்றி பேசி இன்பம் காண்பதே அவர்களுடைய பொழுதுபோக்கும் தலையாய கடமையுமென்றால், அவர்கள் பேச்சுக்கு நாம் ஒடுங்கிக் கிடப்பது எந்தளவுக்கு நியாயமானது என்பதை நாம்தான் சிந்தித்துப்பார்க்க வேண்டும். மற்றவர்கள் நம்மைப்பற்றி பேசுகிறார்கள் என்றால், அவர்களிடம் இல்லாத ஏதோவொன்று நம்மிடம் உள்ளது என்பதுதான் அர்த்தம். அது நல்லதா அல்லது கெட்டதாகக்கூட இருக்கலாம். நல்லது என்றால், நாம் சந்தோஷப்பட்டு, இன்னமும் ஒரு படி மேலே சென்று நல்லவற்றைச் செய்யவே முனைய வேண்டும். அதுவே கெட்டது என்றால், நம் தவறுகளை உணர்ந்து திருத்திக்கொள்ள வேண்டும். தற்போது ஒருவருக்கு எது நல்லது, எது கெட்டது என்று பிரித்துச் சொல்ல பிறர்தான் வேண்டும் என்றில்லை. நல்லது கெட்டது என எல்லாம் அறிந்தவன்தான் மனிதன். அவற்றையெல்லாம் தெரிந்துகொண்டும் உணர்ந்துகொண்டும் சுயபுத்தியுடனேயே நல்லது கெட்டது அனைத்தையும் செய்துகொண்டிருக்கிறான்.

நல்ல புரிதலோடு எம்முடன் பழகுபவர்கள் நாம் எதுவும் சொல்லாமலே புரிந்துகொள்வார்கள். மாறாக, புரிந்துகொள்ளாதவர்கள், எவ்வளவு விளக்கிச் சொன்னாலும் எம்மைப் புரிந்துகொள்ள மாட்டார்கள். மற்றவர்களைத் திருப்திப்படுத்துவது நம் வேலையல்ல. நாம் திருப்திப்படுத்த என் மனைவி, பிள்ளைகள், அப்பா, அம்மா என்றெல்லாம் உறவுகள் இருக்கின்றனர். ஆனால் சில மனிதர்களோ உறவுகளைப் புறந்தள்ளிவிட்டு, பெற்றோர்களை ஆசிரமங்களுக்கு அனுப்பிவிட்டு பிறரை திருப்திப்படுத்த ஓடிக்கொண்டிருக்கின்றனர். ஒரு தடவை புத்தர் தன் சீடர்களுடன் நடந்து சென்றுகொண்டிருந்தார். அவர் முன்னே வந்த சிலர் அவரைப்பற்றி இழிவாகவும், அருவருக்கத்தக்க வார்த்தைகளினாலும் திட்டினார்கள். இருந்தும், அவர் சிரித்துக்கொண்டே அவர்களைக் கடந்து சென்றார். பின் சீடர்கள், "அவர்கள் இப்படியெல்லாம் வார்த்தைகளைக் கொட்டிவிட்டு செல்கிறார்களே. நீங்கள் ஏன் எதுவுமே சொல்லவில்லை?" என்று கேட்டதும், "அவர்கள் கொட்டிவிட்டுச் சென்றதை நான் காது கொடுத்து கேட்கவே இல்லை" என்றாராம். இதுபோலத்தான் நம்மைப்பற்றி யார் என்ன நினைத்தாலும், யார் என்ன சொன்னாலும், நல்ல விமர்சனங்களை எடுத்துக்கொண்டு, முரணான விமர்சனங்களை புறக்கணித்துவிட்டு போய்க்கொண்டே இருக்கவேண்டும்.

தற்காலத்தில் பல மனிதர்களிடம் உள்ள பொதுவான இயல்பு என்னவென்றால், தன்னை 100 பேர் பாராட்டிப் பேசியும், 101ஆவது ஆளுடைய விமர்சனத்தை எடுத்துக்கொண்டு துவண்டு கிடப்பதுதான். இதுபோன்ற இயல்புகள் நம்மிடம் இருக்குமாயின் அவற்றை மாற்றிக்கொள்ள முயற்சிப்போம். வாழ்க்கையையும் ரசிப்போம்....! நம்மைப்பற்றி யார், என்னதான் நினைத்தாலும் நமக்கென்ன? நம்மைப்பற்றி நாம் அறியாததையா மற்றவர்கள் அறிந்துவிடப் போகிறார்கள்?

*ஏழைக்கு இரங்கி வேளைக்கு உதவு.*

# கதிர்காம யாத்திரை -எனது அனுபவம்- (தொடர்ச்சி...

-திருமதி ம. நிலா அவர்கள்-

எல்லோரும் மலை வழிபாட்டை முடித்து மலையினின்றும் கீழிறங்கி எமக்குரிய களைப்பைப் போக்கி பேருந்தில் ஏறி மலையில் வீற்றிருந்து அருள் பாலிக்கும் சிவனுக்கும் வேற்பெருமானுக்கும் மலைமீது ஏறுவோமா ஏறமுடியாதோ எனும் நினைப்புடன் வந்திருந்த அனைவரும் மனமுருகி வழிபாட்டில் கிடைத்த மன எழுச்சியுடனும் அரோகரா எனும் கோஷத்துடனும் நாம் தங்கி இருந்த இந்து யாத்திரிகர் விடுதியை அடைந்தோம்.



விடுதியை அடைந்ததும் அங்கே கடமைபுரியும் அன்பர்கள் அனைவருக்கும் மலைமீது வேற்பெருமானுக்கு படைத்த பிரசாதங்களைக் கொடுத்துவிட்டு அவர்கள் எமக்காக வைத்திருந்த மதிய உணவைப் பெற்று எமது உடல் அசதியைப் போக்கும் வண்ணம் நாம் தங்கி இருந்த அறைகளை அடைந்து சிறிது நேரம் ஓய்வெடுப்போம் என்று இருக்கும் நேரம் அங்கே வந்த ஐயா மாலை மூன்று மணியளவில் எமது கதிர்காம தரிசனம் நிறைவு பெறுகின்றது. எல்லோருக்கும் மனத்திருப்திதானா என்று வினவியபொழுது எம் குழுவினர் அனைவரும் ஒருமித்த குரலில் தங்களது மனநிறைவைத் தெரியப்படுத்தினார்கள்.

*திட்டங்களில் எதுவும் இல்லை; திட்டமிடல் என்பதிலேயே எல்லாம் உள்ளது.*

மூன்று மணிக்குப் புறப்படுவோம் என்று ஐயா சொன்னதும் நான் ஐயாவை அணுகி கோவிலுக்குப் பின்புறம் உள்ள சூரன் கோட்டையைப் பார்க்கவில்லை. பார்த்துவிட்டுப் போவோமா? என்று கேட்டதும் ஐயா என்னைப் பார்த்து அது பகலிற் பார்ப்பதில் ஒரு பிரயோசனமும் இல்லை. இந்த வெயிலில் எல்லோரும் போகவும்மாட்டார்கள். கோட்டையைப் பார்ப்பதானால் இரவில் மின் ஒளியில் பார்த்தால்தான் அதன் அழகு தெரியும். இம்முறை பார்க்க இயலாது. மறுமுறை வரும்போது பார்க்கலாம் என்று கூறியதற்கிணங்க அனைவரும் புறப்பட ஆயத்தமானோம். ஆனாலும் இத் தொடருக்குள் சூரன் கோட்டையில் கண்ட அதி சயங்களை உள்ளடக்க வேண்டும் எனும் ஆவலுடன் நான் மறுதரம் கதிர்காம தரிசனத்துக்கு போனபொழுது சூரன் கோட்டையினுள் நான் பார்த்ததையும் வாசகர்களுடன் பகிர்வதில் மன நிறைவு அடைகின்றேன். முருகனின் மூலஸ்தானத்திற்கு பின்னால் செல்லும்போது ஒரு நீண்ட பாதை காணப்படுகிறது. பாதை முடிவில் ஒரு பிரமாண்டமான வெள்ளை நிற வடிவில் ஒரு விகாரை காணப்பட்டது.



நான் ஆரம்பத்தில் நினைத்தது சூரன் கோட்டை என்றால் பழைய அரண்மனை போன்ற அமைப்பில் அமைந்த கோட்டையாக இருக்கும் என்ற எண்ணத்துடன் வந்த எனக்கு ஒரு விகாரையைக் கண்டதும் பெரிய ஏமாற்ற மாகப் போய்விட்டது. ஆரம்பத்தில் ஒரு சிறு கோட்டையாகவும் அதற்குள் சூரனின் உடமை கள், சூரன் படுத்துறங்கிய தலையணையுடன் கூடிய கருங்கல்லாலான கட்டில், சூரனின் ஆயுதங்கள், ஆடை, ஆபரணங்கள் காணப் பட்டன. அதில் அதிசயம் என்னவெனில் ஒரு





சிறு மாமரம் காயுடன் கண்ணாடிப் பெட்டிக்குள் காட்சியளித்ததுதான். ஆனால் இவை அனைத்தும் கோட்டையைத் தவிர விகாரையைச் சூழ வைத்து பேணப்பட்டு வருகின்றது. கதிர்காமம் போனால் இன்றும் போய்ப் பாக்கலாம். உற்சவ காலங்களில் ஒருநாள் இரவு சுவாமி வீதி உலா வரும்போது சூரன் கோட்டைக்கு போய் வருவதை இன்றும் காணலாம். வரலாறு உண்மை. தமது மதத்தைப் பெருமைப்படுத்துவதற்காக வரலாறுகளை திரிபுபடுத்தி வருகின்றார்கள். அப்பகுதியில் விகாரை அமைந்தபடியால் பெரும்பான்மை சமூகத்தினர் நாளும் பொழுதும் அவ்விடத்திற்கு வந்து போகின்றார்கள். ஆரம்பத்தில் புனிதமான இடமாக இருந்தது. ஆனால் இன்று பொழுதுபோக்குக்குரிய இடமாக சூரன் கோட்டை மாறிவிட்டது.

*அமைதி மற்றும் நேர்மை ஆகியவை ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள்.*

நாம் தங்கி இருந்த யாத்திரிக விடுதியின் வாயிலில் ஒரு பூசை அறை உண்டு. ஐயா அங்கே நிற்கும் காலங்களிலெல்லாம் அப் பூசை அறையினுள் போய் விபூதி பூசாமல் வெளியேயோ உள்ளேயோ நுழையமாட்டார். அவ்வளவு ஈடுபாடு. ஐயா விடுதியில் இருந்து போகப் போகிறார் என்றவுடன் விடுதி முகாமையாளர் உட்பட சிவபூமி அன்னதான சபையில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் அனைவரும் ஐயாவிடம் ஆசீர்வாதம் வாங்குவதற்காக பூசை அறையின் முன் காத்திருந்தார்கள்.





ஐயா அவர்கள் அனைவருக்கும் விபூதி பூசி ஆசீர்வதித்தபின் எமது குழுவினரும் ஐயாவிடம் விபூதி பெற்று வணங்கி எல்லோருக்கும் நன்றி கூறி பேருந்தில் ஏறியதும் பேருந்து புறப்பட்டது பேருந்து புறப்படுமுன் ஐயா என்னை அழைத்து, நாம் இப்படியே பதுளையில் உள்ள பிள்ளைகளுடைய இல்லத்திற்குச் சென்று பிள்ளைகளைப் பார்த்துவிட்டு அங்கேயே எமக்குரிய இரவு உணவுச் செயற்பாட்டையும் முடித்துவிட்டு போகப் போகின்றோம். இவ்விடயம் எங்களில் ஒரு சிலரைத் தவிர வேறு ஒருவருக்கும் தெரியாது. நீயும் ஒருவருக்கும் சொல்லாதே என்று கூறியதற்கிணங்க நானும் பேசாமல் இருந்தேன். வழியில் உள்ள பெயர்ப்பலகைகளைப் பார்த்த எமது குழுவினர் பேருந்து வேறு எங்கேயோ போகிறது என்று ஐயாவை வினாவ, நாம் இப்பொழுது பதுளைக்குப் போகின்றோம். அங்கே எனது பெண் பிள்ளைகள் சுமார் 30 பேர்வரை இருக்கிறார்கள். அவர்களைப் பார்வையிட்டபின் நாம் போவோம். நீங்களும் பாருங்கள் என்று கூறியதும் என்னோடு வந்த அனைவருக்கும் ஒரே ஆச்சரியம்.

*வெற்றி பெறுவதற்கான சிறந்த வழி, மற்றுமொரு முறை முயற்சிப்பதே.*

என்ன இங்கே பிள்ளைகளா? ஐயா வந்து பார்ப்பதா என்றெல்லாம் பேருந்தில் ஒரே விமர் சனம்.

இவர்களது விமர்சனங்களுக்கிடையே பேருந்து ஓட்டுனர்களாக வந்த அண்ணன்மார் களாகிய பிரபா, கிருபா, நந்தன் முதலியோரின் சாரத்தியத்தினால் பாதையில் உள்ள வளைவு, நெளிவு, உயரம், தாழ்வு என பேருந்து போய்க்கொண்டிருக்க அனைவரும் அக்கம் பக்கம் பார்க்கப் பயந்து கண்ணை மூடிக்கொண்டு இது என்ன இடமப்பா. இங்கேயா ஐயா



அடிக்கடி வருகிறார் என்று அங்கலாய்த்தபடி இருந்தார்கள். இடையில் பெரிய அருவி. உயரமான மலை உச்சியில் இருந்து ஒரு நீர்வீழ்ச்சி. அந்நீரானது மேலே இருந்து வந்து கீழே விழுவதைப் பார்த்தபொழுது எமக்கெல்லாம் ஒரு அதிசயமாகவே தெரிந்தது.



ஐயாவும் அந்த இடத்தில் பேருந்தை நிறுத்தச் சொல்லி அனைவரும் கீழிறங்கி போய்ப் பாருங்கள் என்று கூறியதுடன் தானும் எம்முடன் கீழிறங்கினார். (தொடரும்...

*ஒரு செயலைச் சிறப்பாகச் செய்வதற்கு சிறந்த வழி, அதனைத் தேடிக் கண்டறிவதே.*

# புராதனம் எங்கே! தெய்வம், தெய்வீகம் அங்கே!

அன்னதானக் கந்தனாம் செல்வச்சந்நிதியின் கருவறையும் புராதனமாம்
அன்னப்பணி சந்நிதியான் ஆச்சிரம வரலாற்றுச் சிறப்பு
புராதனத்தின் சின்னமாம் மணிக் கோபுரமும் அங்கு
"ஞானச்சுடர்" மார்கழி வெளியீட்டில் சமய நல்லிணக்கம் கண்டேன்.

அலங்காரக் கந்தனாம் நல்லூரான் கருவறையும் புராதனமாம்
அங்கு பேணப்படுகிறது கொடிச்சீலை வரலாற்றுச் சிறப்பு அங்கு
புராதனத்தின் சின்னமாம் இராசகோபுரமும், மணிக்கூட்டுக் கோபுரமும்.

அபிஷேகக் கந்தனாம் மாவையின் கருங்கல் கருவறையும் புராதனமாம்
அங்கு பேணப்படுகிறது "காஞ்சிமா" தலவிருட்ச வரலாற்றுச் சிறப்பு அங்கு
புராதனத்தின் சின்னமாம் மேற்குவாசல் இராசகோபுரமும், கிழக்குவாசல் முன் மண்டபமும்

காவடிக் கந்தனாம் கதிர்காமக் கருவறையும் புராதனமாம்
அங்கு அவர்களால் பேணப்படுகிறது வரலாற்றுச் சிறப்பு. அதனை
இங்கு கண்டுகொண்டேன் "ஞானச்சுடர்" கதிர்காமக் கட்டுரையில்
புராதனத்தின் சின்னமாம் கதிர்காம முகப்பும் கருவறையும்.

மண்டூர் கந்தனின் கருவறையும் புராதனமாம்.
அங்கு அவர்களால் பேணப்படுகிறது வரலாற்றுச் சிறப்பு அதனை
"ஞானச்சுடர்" மண்டூர் கந்தன் வரலாற்றில் அறிந்துகொண்டேன்
புராதனத்தின் சின்னமாம் கருவறையும் அங்குள்ள அந்நியரின் சுடுகலன்களும்.

கற்பூரக் கந்தனாம் பொலிகண்டி கந்தவனக் கருவறையும் புராதனமாம்
இங்கு எம்மால் பேணப்படுகிறது "பழையவரின்" வரலாற்றுச் சிறப்பு
புராதனத்தின் சின்னமாம் "வன்னிமரம்", "காஞ்சிமா", "வடிவேலும்" இதனை
"ஞானச்சுடர்" சிவசம்புப்புலவர் வரலாற்றின் ஊடாக அறிந்து கொண்டேன்.

புராதனத்தால் "மூர்த்திகரம்" குறைவின்றி சுரப்பதாக முன்னோர்கள்
கூறியதும், கூறுவதும் மெய்யே!
இன்னல்களால் அல்லலுறும் உறவுகள் பல இங்கே!
சமய நெறிமுறைகளை சமூகம் நோக்கியதாக நகர்த்தும்
ஆச்சிரம சுவாமிகளின் "சந்நிதியான் ஆச்சிரமம்"
செல்வச்சந்நிதியில் இங்கே!

*– தங்கராசா செல்வசோதி –*

பதிவு இல: QD/146/NEWS/2021

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

